தமிழன்

வாரவெளியீடு

THAMILAN

தமிழ்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 139 சுபகிருது வருடம், மாசி மாதம் 07ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (19.02.2023) ஹிஜ்ரி-1444, ஜமா அதுல் ரஜப் -27, 0115886187 - பக்கங்கள் 18+8+8+8

விலை ரூ.130

நக்கல் நமசிவாயம்

தபால்மூல வாக்களிப்பும் தபால் சேவை போலத்தான் இருக்குது..ரொம்பவும் ஸ்லோவா...

மின் கட்டண உயர்வுக்கு எதிரான மனு தள்ளுபடி

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கான அமைச்சரவைத் தீர்மானத்திற்கு எதிராக கற்றாடல் நீதி மய்யம் மற்றும் இவங்கை மின்சார நுகர்வோர் சங்கம் இணைந்து தாக்கல் செய்த ரிட் மனுவை நிராகரித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் வெள்ளிக்கிழமை (17) தீர்ப்பளித்துள்ளது.

சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கனேபொல ஆகியோர்...

02 பக்கம்

வெடிமணியம்



காசி ஆனந்தனும் பழ. நெடுமாறனும் "அவுத்துவிட்ட" கட்டுக்கதையால அவர்களுக்கு "ஏனும்" பலன் கிடைக்க வாய்ப்பிருக்கு!

ஆனால், எங்களுக்கு "அந்த செய்தியால்" எந்த ஆச்சரியமும் வரயில்லை.

- தமிழக கடற்கரையில் தடைசெய்யப்பட்ட சீனாவின் "சிலிண்டர்"ஒண்டு கண்டுபிடிப்பு!

- தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் அவரது குடும்பத்தோடு நலமாக இருக்கிறார்!

- எல்லைதாண்டி வந்த இந்திய மீனவர்களை தாக்கிய இலங்கை மர்மப் படகுகள்!

07 பக்கம்

மகா சிவராத்திரியை முன்னிட்டு இந்திய மத்தியபிரதேசம் ஜலந்திரில் நடைபெற்ற நிகழ்வில் பக்தர் ஒருவர் சிவன் வேடமிட்டு தாண்டவமாடும் காட்சி..

தபால்மூல வாக்களிப்பு ஒத்திவைக்கப்பட்டது



2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு மறுஅறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சன்ஜீவ ரத்நாயக்க வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளார்.

02 பக்கம்

ஷாப்டரின் கொலைக்கான காரணங்கள் எவை?

கண்டறிய சட்ட வைத்திய அதிகாரிகள் குழு

தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மரணத்துக்கான காரணத்தைக் கண்டறியும் நோக்கில் 5 சட்ட வைத்திய அதிகாரிகள் அடங்கிய நிபுணர் குழுவொன்றை நியமிக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான உத்தரவை கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திரா ஜயசூரிய வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளார். அதன்பிறகு, வழக்கு 20ஆம் திகதி திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மார்ச்சில் தேர்தல் நடக்காது!

நிதி நெருக்கடியால் பிற்போடத் தயாராகிறது தேர்தல் ஆணைக்குழு

02 பக்கம்

மயோன் முஸ்தபாவின் குடியுரிமை இடைநிறுத்தம்

முன்னாள் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபாவின் பிரஜாவுரிமையை ஏழு வருடங்களுக்கு இடைநிறுத்தி கொழும்பு மேல் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை (17) உத்தரவிட்டுள்ளது.

மேலும், அவருக்கு 6 மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்படுமென மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே தெரிவித்தார்.

02 பக்கம்

மின் கட்டண அதிகரிப்பால் பல துறைகள் ஆபத்தில்!

மின்சாரக் கட்டணம் 66 வீதத்தால் உயர்த்தப்பட்டுள்ளமை காரணமாக பல துறைகள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இரசாயன, இரும்பு, சீமெந்து, தரை ஓடு ஆகிய உற்பத்திகள், தேயிலை, ஆடைத் தொழிற்சாலைகள், பாரிய மூலதனத்துடன் இயங்கும் கட்டுமானத்துறை ஆகியன பெரும் பாதிப்பை எதிர்நோக்குமென எதிர்வுகூறப்பட்டுள்ளது.

02 பக்கம்

தேர்தல் ஒத்திவைப்புக்கெதிராக கொழும்பில் நாளை போராட்டம்

ஜனநாயகத்துக்கு விரோதமான செயல்களைக் கண்டித்து நாளை 20ஆம் திகதி கொழும்பில் பாரிய போராட்டமொன்றை...

02 பக்கம்

எழுத்துமூல உறுதி தந்தால் வாக்குச்சீட்டு அச்சிடத் தயார்

அரச அச்சகர் அறிவிப்பு

வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கான செலவு பின்னர் வழங்கப்படும் என்ற தேர்தல் ஆணைக்குழு எழுத்துமூல வாக்குறுதி தந்தால், தபால்மூல வாக்குச்சீட்டுகளை அச்சிடத் தயார் என அரசாங்க அச்சகர் கங்கானி கல்பனா வியனகே தெரிவித்தார்.

02 பக்கம்

கட்டண உயர்வுக்கு எதிராக மின்சக்தி அமைச்சின் முன்பாக போராட்டம்

மக்கள் போராட்டத்தின் குடிமக்கள் அமைப்பு, கொழும்பில் அமைந்துள்ள மின்சக்தி அமைச்சுக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் வெள்ளிக்கிழமை ஈடுபட்டது.

தற்போதைய மின்சார கட்டணம் 66 வீதத்தால் அதிகரித்து பெரிதும் பாதிப்புக்குள்ளாக இருப்பதாக தங்களது கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையிலேயே இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை...

02 பக்கம்

முதலீடுகளை ஊக்குவிப்பதில் துறைமுக நகரின் பங்களிப்பு

பாராளுமன்ற விசேட குழுவில் கவனம்

02 பக்கம்

இலங்கையின் சக்திவலு கட்டமைப்புகளை இந்தியாவுடன் இணைப்பதால் ஆபத்தில்லை

அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

இலங்கையின் தேசிய சக்திவலு கட்டமைப்புகளை இந்தியாவுடன் இணைப்பதால் இலங்கைக்கு ஆபத்தில்லை - என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசிய சக்திவலு கட்டமைப்புகளை இந்தியாவுடன் இணைப்பதால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் குறித்த கேள்விக்குப் பதிலளிக்கையில்...

02 பக்கம்

தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சி

நாட்டில் தேயிலை ஏற்றுமதி இவ்வருட ஜனவரி மாதத்தில் 9.4 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17.56 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி...

02 பக்கம்

சாதியை சொல்லி திட்டியதால் அடித்துக் கொலை செய்தேன்!

யாழில் பெண்ணைக் கொன்றவர் அதிர்ச்சி வாக்குமூலம்

யாழ்ப்பாணம், அத்தியடியில் குடும்பப்பெண் ஒருவரை அடித்துக் கொலைசெய்து தலை மறைவாகியிருந்த நபர், யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். சாதி ரீதியாக தன்னை இழிவுபடுத்தி பேசியதால் கோபமடைந்து, அந்தப் பெண்ணை தாக்கியதால் அவர் மரணமடைந்துவிட்டதாகவும், சாட்சியை மறைக்க மகளை கொலைசெய்ய திட்டமிட்டதாகவும் பொலிஸாரிடம் ஒப்புக் கொண்டுள்ளார்.

02 பக்கம்

அத்தியாவசிய சேவைகள் பிரகடனம்

நா. தினுஷா

மின்சாரம், பெற்றோலியம் மற்றும் வைத்திய சேவை என்பவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 61ஆம் பிரிவின் பிரகாரம் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இந்தச் சேவைகளை...

02 பக்கம்

தேசிய மட்ட எதிர்ப்பு நாளாக பெப். 22ஆம் திகதி பிரகடனம்

பாரிய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட நடவடிக்கை

வரி அதிகரிப்பு, மருந்து தட்டுப்பாடு, மின்கட்டண அதிகரிப்பு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு வெளியிடும் வகையில் எதிர்வரும் 22ஆம் திகதி தேசியமட்டத்தில் தொழிற்சங்க எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ள தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகள் என்பன தீர்மானித்துள்ளன.

கொழும்பு மற்றும் நாட்டின் பிரதான 10 பிரதேசங்களில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தொழில்வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு மற்றும் அரசியல் கட்சிகள் என்பன இணைந்த ஏற்பாடு செய்துள்ள இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளானோர் கலந்துகொள்வார்கள் என அவர்கள் எதிர்பார்ப்பு வெளியிட்டிருக்கிறார்கள்.

அதற்கமைய, நாளைய தினம் (20ஆம் திகதி) தேசிய மக்கள் கூட்டமொன்றை நடத்தவும், 22ஆம் திகதி தேசிய மட்டத்திலான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவும் மார்ச் மாதம் முதலாம் திகதியிலிருந்து தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவும் எதிர்பார்த்துள்ளதாக அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

மருத்துவ பீட விரிவுரையாளர் சங்கங்களின் கூட்டமைப்பு, பல்கலைக்கழக பேராசிரியர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு, இலங்கை வங்கி சேவை சங்கம், மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்கள் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளன.

வரிச் செலுத்துவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், தற்போது விதிக்கப்பட்டுள்ள வரி விதிப்பானது நியாமற்றது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனை திருத்தியமைக்க வேண்டியது அவசியமாகும். கடந்த 08ஆம் திகதி பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்து அரசாங்கத்துக்கு எங்களின் பிரச்சினையை வெளிப்படுத்தியிருந்த போதிலும் இதுவரையில், அரசாங்கத்தின் சார்பில் எந்தவொரு தீர்மானமும் அறிவிக்கப்படவில்லை. அதன் காரணமாகவே, இதற்கு முன்னர் அறிவித்ததன்படியே மீண்டும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக தொழில்வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு கடந்த 17ஆம் திகதி கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் மாநாட்டில் அறிவித்திருந்தது.

இந்த செய்தியாளர் மாநாட்டில் மருத்துவ பீட விரிவுரையாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பில் பேராசிரியர் இந்திக்க கருணாதிலக்க, பல்கலைக்கழக பேராசிரியர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் சாமர பன்ஹேக, இலங்கை மின்சாரசபையின் பொறியியலாளர் சங்கத் தலைவர் நிஹால் வீரரத்ன உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தார்கள்.

தேர்தல் ஒத்திவைப்புக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத்திடம் மகஜர்

ஐக்கிய மக்கள் சக்தி கையளித்தது

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கில் அரசாங்கம் தன்னிச்சையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஐக்கிய மக்கள் சக்தி ஐரோப்பிய ஒன்றியத்திடம் மகஜர் ஒன்றை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கையளித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா உள்ளிட்ட ஐ.ம.ச. குழுவினர் இந்த மகஜரைக் கையளித்துள்ளனர்.

அரசாங்கம் ஜனநாயகமற்ற முறையில் தேர்தலை ஒத்திவைத்தமை தொடர்பில் ஐரோப்பிய ஆணைக்குழுவின் பிரதித் தூதுவருக்கு அறிவிக்கப்பட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தி நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கத் தலையிடுமாறு ஐரோப்பிய ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மின் கட்டண அதிகரிப்பால்...

இந்த உற்பத்திகளின் விலைகளை பாரிய அளவில் அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதால் போட்டித் தன்மையை இழந்து வர்த்தக வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மின் கட்டண உயர்வானது மேற்படி துறைகளில் நேரடி பாதிப்பை ஏற்படுத்துவதால் அவற்றுக்கு மாற்றுத் தீர்வு முன்வைக்கப்பட வேண்டுமெனவும் நிபுணர்கள் யோசனை முன்வைத்துள்ளனர்.

தேயிலை...

செய்யப்பட்டுள்ளபோதிலும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது வீழ்ச்சியைக் காட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கிளைபோசென் உரத்துக்கு விதிக்கப்பட்டிருந்த தடை காரணமாகவே உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக பெருந்தோட்ட நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

மார்ச்சில்...

நமது அரசியல் செய்தியாளர்

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஏற்கனவே அறிவித்த மார்ச் 9ஆம் திகதியில் நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் ,தேர்தலை ஒத்திவைக்கத் தயாராகிறது தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் செலவுகளுக்குப் போதியளவு நிதியை திறைசேரி வழங்காமல் இருப்பதால், தேர்தலை திட்டமிட்டபடி நடத்தமுடியாத நிலை இருப்பதை எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறும் தேர்தல் சம்பந்தமான வழக்கு விசாரணையில் நீதிமன்றத்திடம் சுட்டிக்காட்டவுள்ளது தேர்தல் ஆணைக்குழு.

எவ்வாறாயினும் தேர்தலுக்கான நிதியை திறைசேரி இப்போதைக்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு விடுவிக்கும் நிலைமை இல்லாததால், தேர்தலொன்று நடக்க ஆறு மாதகாலமாவது எடுக்குமென அரசாங்கத்தின் உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியினால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு தேவையான நிதியை வழங்குவதில் பாரிய சிக்கல் காணப்படுவதாக நிதி அமைச்சின் செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டபோது அவர்கள் இதனை கூறியதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

அரச செலவினங்களை மட்டுப்படுத்தி வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபத்திற்கு அமைய, நாட்டின் அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளனர்.

இதனைத் தவிர, ஏனைய அத்தியாவசியமற்ற செலவுகளுக்கான ஒதுக்கீடுகளுக்கு நிதி அமைச்சரின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும் என மற்றுமொரு சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்தியாவசிய...

அத்தியாவசிய சேவைகளாக அறிவிப்பதாக ஜனாதிபதி அறிவித்திருக்கிறார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் 17ஆம் திகதி ஜனாதிபதியின் செயலாளர் ஈ.எம்.எஸ்.பீ. ஏக்கநாயக்கவினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மின்சாரம், எரிபொருள் மற்றும் சுகாதாரம் போன்ற சேவைகளை வழங்கும் எந்தவொரு அரச கூட்டுத்தாபனமும் அல்லது அரச திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது கூட்டுறவுச் சங்கம் அல்லது அவற்றின் கிளையொன்றில் வழங்கப்படும் சேவைகள் வழமையான பொதுமக்கள் வாழ்வைக் கொண்டு நடத்துவதற்கு இன்றியமையாததாகும்.

இந்நிலையில் மேற்குறிப்பிடப்பட்ட சேவைகளுக்கு இடையூறாகக் கூடுமென்பதை அல்லது தடையாகக் கூடுமென்பதைக் கருத்திற்கொண்டு எந்தவொரு அரச கூட்டுத்தாபனம், அரச திணைக்களம், உள்ளூராட்சி நிறுவனம் அல்லது கூட்டுறவுச் சங்கம் அல்லது அவற்றின் கிளையொன்றில் வழங்கப்படும் சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக அறிவிப்பதாக ஜனாதிபதி அந்த வர்த்தமானியில் குறிப்பிட்டிருக்கிறார்.

மின்சாரம் வழங்கல் தொடர்பான சகல சேவைகள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம், வைத்தியசாலைகள், மருத்துவ பராமரிப்பு இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் அதுபோன்ற ஏனைய நிறுவனங்களில் நோயாளர்களின் பராமரிப்பு மற்றும் வரவேற்பு, பாதுகாப்பு, போசாக்கூட்டல் மற்றும் சிகிச்சை அளித்தல் ஆகியவை தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது தேவைப்படும் எந்த வகையிலாக சகல சேவைகள், வேலைகள் அல்லது தொழில்பங்களிப்பு என்பவை அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

எழுத்துமூல...

ஆனால், வாக்குச்சீட்டுகள் அச்சிடுவதற்கு பொலிஸ் பாதுகாப்பு இல்லாததால் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு ஏற்கனவே நான்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கு அறுபத்தைந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேவைப்படுவதாகவும் லியனகே தெரிவித்தார்.

இதேவேளை, பொலிஸ் பாதுகாப்பின்றி வாக்குச்சீட்டு அச்சிடப்பட்டமை தொடர்பில் தொழிலாளர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில், மீண்டும் வாக்குச் சீட்டுகளை எண்ணி சான்றளிக்க வேண்டியுள்ளதாக அச்சக அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இலங்கையின்...

அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதில் ஆபத்து எதுவுமில்லை உலகின் ஏனைய நாடுகள் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன என குறிப்பிட்டுள்ள அமைச்சர், இலங்கை தனது சக்தி வலு கட்டமைப்பை இந்தியாவுடன் இணைப்பதால் என்ன ஆபத்து ஏற்படப்போகின்றது எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். இவ்வாறான மனோநிலையே எங்கள் பொருளாதாரத்தை பல தசாப்தங்களாக வீழ்ச்சியை நோக்கி இட்டுச்சென்றது என குறிப்பிட்டுள்ள அவர் எண்ணெய்க்குதங்களை நாங்களே வைத்திருக்க விரும்பியதால் பல தசாப்தங்களாக அவற்றை அபிவிருத்தி செய்யாமல் வைத்திருந்தோம் எனவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால், யதார்த்தத்தில் நாங்கள் பொதுமக்கள் தனியார் கூட்டு முயற்சியில் ஈடுபட்டிருந்தால் கடந்த 12 மாதங்களில் எங்களின் எரிசக்தி பாதுகாப்பு எங்கோ சென்றிருக்கும் எனவும் அமைச்சர் காஞ்சன விஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

எங்கள் நாட்டில் சக்தி வலு பாதுகாப்பு காணப்படுவதை உறுதி செய்வதே ஒரு அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் முன்னெடுக்கவேண்டிய முதல் நடவடிக்கை எனவும் தெரிவித்துள்ள அமைச்சர் சக்தி வலு பாதுகாப்பு என்பது உணவு பாதுகாப்பு, மருந்து பாதுகாப்பு உட்பட அனைத்துடனும் தொடர்புபட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில், நாங்கள் தீர்மானங்களை எடுப்போம் இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளை பேணவேண்டும் என்பது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாக தெளிவாக உள்ளார். கடந்த 12 மாதங்களில் இந்தியா எங்களிற்கு பெரும் ஆதரவாக காணப்பட்டுள்ளது எனவும் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கட்டண உயர்வுக்கு...

முழங்கியவாறும் காணப்பட்டதுடன் ஊடகங்களுக்கு கருத்தும் வெளியிட்டனர்.

இதனையடுத்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் மின்சக்தி அமைச்சுக்குள் செல்வதற்கு முயற்சித்தபொழுது அங்குள்ள அதிகாரிகள் பிரதான நுழைவாயிலை மூடி வைத்தனர்.

அதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தங்களுக்கு மின்சக்தி அமைச்சருடன் அல்லது உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றுக்கு நேரம் வழங்குமாறு கோரிக்கை முன்வைத்து மின்சக்தி அமைச்சின் பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக அமர்ந்திருந்து தங்களது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதன்போது அங்கு வந்த கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, அரச நிறுவனம் ஒன்றின் பணிகளை இடையூறு செய்வது குற்றம் என்றும் அவ்வாறு அகலாதபட்சத்தில் கைது செய்ய நேரிடும் என்றும் தெரிவித்தபோது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தங்களுக்கு அதிகாரி ஒருவருடன் கலந்துரையாடலுக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தருமாறு கோரிக்கை முன்வைத்தார்கள்.

இது தொடர்பில் அதிகாரிகளோடு கலந்துரையாடுவதாகவும் நுழைவாயிலை விட்டு அகன்று நிற்குமாறும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு பொலிஸார் தெரிவித்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் நடைபாதையில் அமர்ந்திருந்தே தங்களது எதிர்ப்பை வெளியிட்டனர்.

தேர்தல்...

நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

தபால்மூல வாக்களிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு ஒத்திவைத்ததை அடுத்து இடம்பெற்ற விசேட கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை 20ஆம் திகதி பெருந்தொகையான மக்களுடன் கொழும்புக்கு வந்து அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக போராட்டம் ஒன்றை முன்னெடுக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளதாகவும் அதன் பின்னர் போராட்டங்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மயோன் முஸ்தபாவின்...

2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவை பெற்றுக்கொள்வதற்காக, பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மிலுக்கு 42 இலட்ச ரூபா இலஞ்சம் வழங்கியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளின்கீழ் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பை அறிவிக்கும்போதே நீதிபதி இந்த உத்தரவை பிறப்பித்தார்.

தபால்மூல...

தபால்மூல வாக்களிப்பு பெப்ரவரி 22, 23, 24 மற்றும் 28ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அரசாங்க அச்சகமானது தபால்மூல வாக்குச் சீட்டுகளை உரிய நேரத்தில் வழங்காததால் தபால்மூல வாக்களிப்பு பிற்போடப்பட்டதாக ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

தபால்மூல வாக்களிப்புக்கான புதிய திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

மின் கட்டண...

அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக இலங்கை மின்சார சபை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, சட்டமா அதிபர் மற்றும் அமைச்சரவை குறிப்பிடப்பட்டிருந்தனர்.

சாதியை சொல்லி...

யாழ்ப்பாணம் நகரை அண்டிய, அத்தியடியில் 52 வயதுடைய கலாநிதி சுப்ரமணியம் என்பவர் கடந்த 12ஆம் திகதி இரவு அடித்து கொலை செய்யப்பட்டார். அந்த சமயம் அவரது 24 வயதான மகள் வீட்டிற்குள் இருந்தார்.

கலாநிதி நீண்டகாலமாக கணவனை பிரிந்து வாழ்கிறார். நாவற்குழியை சேர்ந்த அவர், கடந்த 3 வருடங்களின் முன்னர் அங்கிருந்து குடிபெயர்ந்து, அத்தியடியில் வீடு வாங்கி, குடிபுகுந்தனர்.

கலாநிதிக்கு, நாவற்குழியைச் சேர்ந்த 60 வயதான ஒருவருடன், கடந்த 10 வருடங்களாக நெருக்கமான உறவிருந்துள்ளது.

அவர், கலாநிதியின் அத்தியடி வீட்டிற்கு அடிக்கடி வந்து செல்வது வழக்கம். அவர்களிற்குள் அண்மைக்காலமாக முரண்பாடு ஏற்பட்டுள்ளது. வீட்டு வேலைகளிற்காக ஆட்களை கூப்பிடும்படி கலாநிதி கூறினால், அந்த வேலைகளை தானே செய்துகொண்டு, பணத்தை பெற்றுக்கொண்டுள்ளார்.

அவர் தன்னிடமிருந்து அதிகமான பணம் வாங்குவதாக கலாநிதி முரண்பட, அடிக்கடி முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

அந்த நபர் வரும்போது, வீட்டுக்குள் இருக்க வேண்டும், வெளியில் வரக்கூடாது என தாயார் கண்டிப்பாக அறிவுறுத்தியுள்ளதால், மகள் அறைக்குள் சென்று இருந்து கொள்வது வழக்கம். கொலை நடந்த அன்றும் அவ்வாறே இருந்துள்ளார். கொலைச்சம்பவம் குறித்து மகள் அளித்த தகவலில்,

"மாலை 3.30 மணியளவில் அம்மா பெரிதாக அலறும் சத்தம் கேட்டது. மாலை 6 மணியளவில் வீட்டுக்கு வேலைக்கு வந்தவர், மோட்டார் சைக்கிளில் புறப்பட்டு செல்லும் சத்தம் கேட்டது. 6.30 மணியாகியும் அம்மா வீட்டுக்குள் வரவில்லை. இதனால் அவரது தொலைபேசிக்கு அழைப்பேற்படுத்தினேன். வீட்டின் முன்பக்கத்தில் தொலைபேசி ஒலித்தது.

பின்கதவு வழியாக சென்று பார்த்தேன். அம்மா தலையில் இரத்தம் வழிந்த நிலையில் காணப்பட்டார்'' என மகள் கூறியுள்ளார்.

வீட்டுக்குள்ளிருந்து முன்கதவு வழியாக வெளியில் வருபவர் சிக்கும் விதமாக, இரும்புக் கம்பியில் மின்சார இணைப்பு ஏற்படுத்தி விட்டே அந்த நபர் தப்பிச் சென்றுள்ளார்.

அவர் நாவற்குழி பகுதியைச் சேர்ந்தவர். அவரது வீட்டிற்கு பொலிஸார் சென்றபோது, மோட்டார் சைக்கிள் மட்டுமே நின்றது. சந்தேகநபர் தலைமறைவாகி விட்டார்.

அவர் வீட்டில் தங்கியிருப்பதாக கிடைத்த தகவலின்பேரில், நாவற்குழியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

"உயிரிழந்த பெண்ணுடன் 10 ஆண்டுகளாக தொடர்பில் இருந்து வருகின்றேன். அவர்கள் வீடு மாறுவதற்கு உதவுவதிலிருந்து பல உதவிகளை வழங்கி வந்தேன்.

அண்மையில் கோப்பாயில் ஒன்றரைக் கோடி ரூபாவுக்கு அவரது காணி ஒன்றை விற்பனை செய்து பணத்தையும் வழங்கினேன்.

சம்பவத்தினத்தன்று அவர் என்னை சாதி வேறுபாடு சொல்லி பேசிவிட்டார். அதனால் ஏற்பட்ட ஆத்திரத்தில் அவரை கட்டையால் தாக்கிவிட்டேன். அவர் உயிரிழந்துவிட்டார்" என்று சந்தேகநபர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

சம்பவ தினத்தன்று, குழாய் பதிப்பதற்காக சிறிய கிடங்கு தோண்டுமாறு கொல்லப்பட்ட பெண் குறிப்பிட்டுள்ளார். எனினும், அன்று அந்த நபர் முரண்டு பிடித்துள்ளார். பணத்தகராறினால் சில காலமாக ஏற்பட்ட முரண்பாட்டினால் இது நிகழ்ந்திருக்கலாம்.

தான் கூலிக்கு வேலை செய்வது தெரிய வந்தால் வீட்டில் பிரச்சினை வரும் என சந்தேகநபர் குறிப்பிட்டதாக வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

எனினும், கலாநிதி சாதி பாகுபாடு சொல்லி திட்டியதாகவும், இதனால் ஆத்திரமடைந்து கட்டையால் அவரது தலையில் அடித்ததாகவும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த கொலையில் தனது பங்கை மறைப்பதற்காக வீட்டிலிருந்த மகளை கொல்லவும் திட்டமிட்டுள்ளார். தான் வீட்டுக்கு வந்ததை மகள் அறிந்திருந்ததால், அவர் பொலிஸாரிடம் விடயத்தை சொல்லி விடுவார் என பயந்த சந்தேகநபர், மகளை கொல்லும் நோக்கத்துடன் வீட்டுக்கு வெளியில் அழைத்துள்ளார்.

இரண்டு மூன்று முறை கதவை தட்டியதாகவும், ஆனால் மகள் வெளியில் வரவில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, வீட்டின் முன்கதவு வழியாக தாயின் சடலத்திற்கு அருகில் மகள் வந்தால் சிக்கும் விதமாக மின்சார பொறி வைத்துள்ளார். இரும்பு கம்பியில் மின்சார இணைப்பை ஏற்படுத்தியிருந்தார்.

எனினும், அதிர்ஷ்டவசமாக மகள் பின்கதவு வழியாகவே தாயாரிடம் வந்துள்ளார்.

அந்த வீட்டில் இருந்த 30 இலட்ச ரூபா பணத்தை பொலிஸார் மீட்டு, பாதுகாப்பாக மகளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டிருந்தனர்.

கைதான சந்தேகநபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவாரென பொலிஸார் தெரிவித்தனர்.

முதலீடுகளை...

இலங்கையில் முதலீடுகளை ஊக்குவிப்பதில் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் பங்களிப்பு மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து இலங்கையின் வணிக தொழில்முயற்சிகளை இலகுபடுத்தும் சுட்டெண்ணின் பெறுமானத்தை அதிகரிப்பது தொடர்பில் எழுந்துள்ள நடைமுறைச் சிக்கல்களையும் சிரமங்களையும் ஆய்வுசெய்வதற்கும் அது தொடர்பில் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு ஆராய்ந்தது.

இலங்கையின் வணிக தொழில்முயற்சிகளை இலகுபடுத்தும் சுட்டெண்ணின் பெறுமானத்தை அதிகரிப்பது தொடர்பில் எழுந்துள்ள நடைமுறைச் சிக்கல்களையும் சிரமங்களையும் ஆய்வுசெய்வதற்கும் அது தொடர்பில் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் (சட்டத்தரணி) மதுர விதானகே தலைமையில் அண்மையில் (15) பாராளுமன்றத்தில் கூடியபோதே இவ்விடயம் குறித்து ஆராயப்பட்டது.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு, நிதி அமைச்சு, நீதி மற்றும் சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை உள்ளிட்ட அரச மற்றும் தனியார் துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் இந்த விசேட குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதில் கொழும்பு துறைமுக நகருக்கு அருகாமையில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளுக்குத் தேவையான சட்டப் பிரிவான பிணக்குத் தீர்த்தல் நிலையத்தை அமைப்பது தொடர்பில் நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டதுடன், விசேட அழைப்பின் பேரில் குழுவுக்கு வருகை தந்திருந்த நீதி மற்றும் சிறைச்சாலைகள் விவகாரங்கள், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவும் இதில் கலந்துகொண்டிருந்தார். குறித்த பிணக்குத் தீர்த்தல் நிலையத்தை அமைப்பது குறித்த தற்போதைய நிலைமைகள் மற்றும் அதனை விரைவுபடுத்துவது குறித்து அமைச்சரும், கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் அதிகாரிகளும் கலந்துரையாடினர்.

இதில் அமைச்சர் நசீர் அஹமட், பாராளுமன்ற உறுப்பினர்களான சஞ்சீவ எதிரிமான்ன, மொஹமட் முஸம்மில் மற்றும் லலித் வர்ணகுமார ஆகியோர் கலந்துகொண்டனர்.

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
வியாழக்கிழமை 2023.02.16
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5033
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 32,278,382.00
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 6 3 7 1 4 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3275
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 79,368,972.80
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 04 07 10 72

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1488
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,792,319.60
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள் 5 8 4 6 5 7

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1063
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 83,779,716.00
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 09 26 29 39

ராசி சப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 342
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 14 18 27 61
விசேட இலக்கினம் தனுசு

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1381
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 300,731,662.00
ஆங்கில எழுத்து X
சுப்பர் இலக்கம் 25
வெற்றி இலக்கங்கள் 10 37 39 74
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த மொகா சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

குத்தூசி

– நிர்ஷன் இராமானுஜம்

வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தாமையும் அப்பட்டமான மனித உரிமை மீறலே!

இலங்கையில் ஆண்டுதோறும் 250 சிறுவர்கள் புற்றுநோயால் இறக்கின்றனர். மருந்து தட்டுப்பாடு காரணமாக இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்ற அதிர்ச்சி தரும் தகவலை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை கடந்த வாரம் வெளியிட்டது.

மஹரகம வைத்தியசாலையில் புற்றுநோய்க்கான மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வைத்திய நிபுணர் சஞ்ஜீவ குணசேகர தெரிவித்தார். "நன்கொடையாளர்கள் வழங்கிய மருந்துகளையே தற்போது பயன்படுத்தி வருகிறோம். யாராவது எங்களுக்கு மருந்துகள் வழங்கி உதவ முடியுமானால் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்" என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, புற்றுநோயால் பாதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக வைத்தியர் சுராஜ் பெரேரா கூறினார். ஒவ்வொரு வருடமும் 900 சிறுவர்கள் புற்றுநோய் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். வருடந்தோறும் 250 சிறுவர்கள் புற்றுநோய் பாதிப்பினால் உயிரிழக்கின்றனர். மருந்துகளுக்கு நிலவும் தட்டுப்பாடு காரணமாக உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் தற்போது 150 மருந்துவகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அந்தப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்வதற்காக உள்நாட்டு உற்பத்தியை 30 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அவசரமற்ற சத்திரசிகிச்சைகளை காலந்தாழ்த்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல அறிவித்திருந்தார். ஆயினும், பற்றாக்குறையான மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து அவர் எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

மருந்தகங்களில் அனைத்து வகையான மருந்துகளின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. நிர்ணய விலை இல்லாத காரணத்தினால் மருந்தக உரிமையாளர்கள் தாங்கள் நினைத்த விலைக்கு மருந்துகளை விற்பனை செய்கிறார்கள்.

இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் சிறுவர்கள் எதிர்நோக்கியுள்ள நெருக்கடி குறித்து வைத்தியர்களால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த எச்சரிக்கையை மிக சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது.

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள நிலையில், சிறுவர்களே அதிகம் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அந்தவகையில் அபேக்ஷா வைத்தியசாலையிலும் அவர்களே நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கிறார்கள்.

"மருந்துகள், அறுவைசிகிச்சை உபகரணங்கள், ஆய்வகங்களில் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் ஆகியவற்றின் பற்றாக்குறையால் சுகாதாரத்துறை கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. மருந்துகளின் விலை பாரியளவில் உயர்வடைந்துள்ளமையானது முழு சுகாதாரத் துறையையும் மிக மோசமாக பாதித்துள்ளது."

- இவ்வாறு இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர், வைத்தியர் வின்யா ஆரியரத்ன 'தமிழன்' வார இதழுக்கு தெரிவித்தார்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டோர், அறுவைசிகிச்சை அளிக்கப்பட்டோர், விபத்தில் பாதிக்கப்பட்டோர், கர்ப்பிணித் தாய்மார் ஆகியோர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பெரும்பாலான வைத்தியசாலைகளில் இரத்தப் பரிசோதனை செய்வதற்கான அடிப்படை வசதிகள் கூட கிடையாதென தேசிய தொற்றுநோய்கள் நிறுவக ஆலோசகர், வைத்தியர் ஆனந்த விஜேவிக்கிரம சுட்டிக்காட்டினார்.

"வைத்தியசாலைகளுக்கு நோயாளிகள் வருவதில் எந்தப் பயனும் இல்லை. எங்களிடம் அறுவைசிகிச்சை செய்ய வசதிகள் கிடையாது. அவர்களுக்கு மருந்து கொடுக்க முடியவில்லை. நாம் கடந்த ஆண்டுமுதல் இந்தப் பிரச்சினை குறித்து அரசாங்கத்தை தெளிவுபடுத்தி வருகிறோம். எனினும், அரசாங்கத்துக்கு சுகாதாரத்துறையை சீரமைக்க வேண்டிய தேவை கிடையாது. சுகாதாரத்துறை புறக்கணிக்கப்பட்டதாலேயே இந்த நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளது."

- இவ்வாறு அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட வைத்தியர் சந்துனி பெரேரா கடந்த வாரம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

மேற்குறித்த வைத்தியர்களின் கருத்துகள், நாட்டின் சுகாதாரத்துறை எந்தளவுக்கு வீழ்ச்சியடைந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

இந்த நிலைமை ஏற்படுமென அரசாங்கத்துக்கு நிபுணர்களால் ஏற்கனவே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளபோதிலும் அது குறித்து சற்றேனும் அக்கறைகொள்ளாததன் விளைவை இன்று முழு நாடும் எதிர்நோக்கியிருக்கிறது. மக்களின் நலனையும் சிறந்த வாழ்வாதாரத்தையும் உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அவ்வாறில்லாத பட்சத்தில் அதுவும் அப்பட்டமான மனித உரிமை மீறலாகும் என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

சிவராத்திரியும் வில்வ மகிமையும்

விரதம் என்பது விருப்பம், நடத்தை, வழிமுறை, விதிமுறை, கோட்பாடு என பொருள் கொண்டது. விரதமானது எளிமை, பக்தியை அடிப்படையாகக்கொண்ட உயர் செய்முறை. விரதங்கள் எல்லோராலும் அனுஷ்டிக்கப்படுவதால் அவை பிரசித்தமாக உள்ளன. பெண்களுக்காகவே சில குறிப்பிட்ட விரதங்கள் உள்ளன. மங்கள கௌரி விரதம், பக்தீச்வர விரதம் இன்னும் பல விரதங்கள் இருப்பவர்கள் பக்திகொண்டு நம்பிக்கையுடன் தீய எண்ணங்களை நீக்கி, சமுதாய நலனுக்காகவும், தனக்காகவும் விரதங்களை மேற்கொள்ள வேண்டும்.

ஆன்மீக சாதகர்கள் அனைவரும் கடைப்பிடிக்கவேண்டிய விரதம் சிவராத்திரி விரதமாகும். சிவராத்திரி சிவனுக்குரிய விரதமாகும். மாசிமாத கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசி இரவில் செய்யப்படுவது. திதி நண்பகல் நேரம் பூராகவும் இருக்கவேண்டும். இது சிவன் முதலில் லிங்கவடிவமான தினம். சிவராத்திரி விரதநாளில் உபவாசம் இருத்தலும், கண்விழித்தலும் சிறப்பானது. அத்துடன், நான்கு ஜாம பூசைகளிலும் ஈடுபடல் வேண்டும். இத்தினத்தில் சிவாலயத்திற்கு செல்லும்போது வில்வ இலை எடுத்துச்செல்ல வேண்டும். சிவனை வில்வ இலைகளால் அர்ச்சிப்பது மிகவும் சிறந்தது.

வில்வத்தின் இலை மூன்று பிரிவுகளாக ஒன்றிணைந்து இருப்பது சிவனுடைய முக்கண்களையும் குறிக்கும். வில்வமரம் வேர் முதல் இலை, பட்டைகள், கிளைகள் அனைத்தும் இயற்கை மூலிகை மருத்துவ குணங்கள் கொண்டவை. வில்வமரத்தை ஸ்ரீ விருட்சம் என்றும் அழைப்பர். ஸ்ரீ மகாலட்சுமியின் திருக்கரங்களிலிருந்தே வில்வம் தோன்றியதால் வில்வமரத்திலேயே ஸ்ரீ லட்சுமிதேவி நித்தியவாசம் புரிகின்றாராம். எனவேதான் நம் வறுமையைப் போக்கி செல்வத்தைக் கொடுக்கும் சக்தி வில்வ இலைக்கு உண்டென்பர்.

சிவராத்திரியன்று இரவு கடைசி ஜாம பூசை வரை ஆலயத்திலேயே இருக்கவேண்டும். ஓம்சிவாயநம என்ற மந்திரத்தை நாள் முழுவதும் உச்சரிக்க வேண்டும். அன்று சாப்பிடக்கூடாது. தண்ணீர்கூட அருந்துவதைத் தவிர்ப்பது சிறப்பு. உபவாசம் இருப்பது நன்று. நோயாளிகள் எளிய உணவுகளை எடுத்துக்கொள்ளலாம். முதல் ஜாம பூசைக்கு பால், இரண்டாம் பூசைக்கு தயிர், மூன்றாம் ஜாமத்திற்கு வெண்ணெய், நான்காம் ஜாமத்திற்கு தேன் ஆகியவற்றை அபிஷேகம் செய்வதற்காக கோயிலில் ஒப்படைக்க வேண்டும். மறுநாள் காலையில் அன்னதானம் செய்ய வேண்டும். அன்னதானத்திற்குப் பிறகே சாப்பிட்டு விரதத்தை பூர்த்திசெய்ய வேண்டும்.

பல ஜீவன்கள் சிவராத்திரி விரதத்தைப் பற்றி உள்ளன. ஒரு காலத்தில் உலகப் பிரளயத்தின்போது உயிர்கள் எல்லாம் சிவனிடத்தே ஒடுங்கின. உலகங்களே தோன்றவில்லை. இந்நிலையைக் கண்ட கருணையுடைய அம்பிகை, அண்டங்கள் தோன்றி இயங்கும் பொருட்டு இறைவனை இடைவிடாது தியானம் செய்தாள். அப்போது இறைவன் தன்னுள் ஒடுங்கியிருந்த உலகங்களை மீண்டும், உண்டாகச் செய்தார்.

சிவனிடம் "சுவாமி, நான் தங்களை மனதில் தியானித்துப் போற்றிய காலம் "சிவராத்திரி" என்று பெயர் பெற வேண்டும் என்றும், அதனைச் சிவராத்திரி விரதம் என்றும், இவ்விரதத்தை கடைப்பிடிப்பவர்கள் எல்லா நலன்களும், சிறப்புப் பெற்று முக்தியடைய வேண்டும்" என்று பிரார்த்தித்தாள். இறைவனும் அவ்வாறே நடைபெறும் என்று அருள்புரிந்தார்.

ஒருகாலத்தில் உலகம் அழிந்தபோது மீண்டும் உலகை சிருஷ்டிக்க உமாதேவியார் சிவனை பூஜித்து ஓர் இரவு முழுவதும் இருந்த விரதமே "சிவராத்திரி விரதம்" என்றும் கூறப்படுகின்றது. அத்துடன், அம்பிகையைத் தொடர்ந்து இந்த சிவராத்திரி விரதத்தை அனுஷ்டித்த நந்தியம் பெருமான் சனகாதி முனிவரும் தங்கள் விருப்பம் நிறைவேறப் பெற்றவர்களாயினர்.

பார்வதிதேவி ஒருநாள் விளையாட்டாக சிவபெருமானின் கண்களை மூடினாள். ஈரேழு உலகங்களும் இருளில் மூழ்கி உயிர்கள் வருந்தின. அந்நாளே மகாசிவராத்திரி என்றும் கூறப்படுகின்றது. மார்கண்டேயனின் உயிரைப்பறிக்க எமன் வந்தபோது நீ உயிரைக்காத்துக்கொள்ள அவர் சிவலிங்கத்தை ஆராத்துவிக் கொண்டார். ஆனாலும் தர்மவானான எமதர்மன் பாசக் கயிற்றை வீசினான். கயிறு லிங்கத்தையும் பற்றிக்கொண்டது. உடனே சிவபெருமான் எமனை காலால் உதைத்தார். இதன் பின்னர் தேவர்கள் சிவனை வேண்டி எமனை உயிர்ப்பித்தனர். அந்நாளே மகாசிவராத்திரி என்றும் கூறுவர். அதனால் மகாசிவராத்திரி நாளில் சிவனை வழிபட்டோருக்கு மரணபயம் நீங்கும் என்பது ஐதீகம்.

சிவனுக்கு நடைபெறும் சிவராத்திரி தின நான்குகால அபிஷேகத்தை கண்கள் பனிக்க, மெய்சிலிர்க்க, கண்டு தரிசித்து அபிஷேக தீர்த்தத்தை அருந்தினால் தீராத நோய்கள் தீரும் என்பது சான்றோர் வாக்கு. கரும்புச்சாறு அபிஷேகத்திற்கு வழங்குவதால் தடைகள், தோஷங்கள், உடல் உபாதைகள் நீங்கும் என்பதும் ஐதீகம்.

ஆலயங்களில், உலக அமைதி மற்றும் சுபீட்சத்திற்காக சிவனுக்குரிய ஹோமம் செய்யப்படுகின்றது. இதில் நாமும் கலந்துகொள்ள வேண்டும். நான்குகால அபிஷேக தரிசனமும், மந்திர ஜெபமும் செய்ய வேண்டும். என் பேச்செல்லாம் உமது பிரார்த்தனை மொழி. என் எண்ணம், சொல், செயல் அனைத்தையும் உமக்கே அர்ப்பணிக்கின்றேன் என்றும் பிரார்த்திக்கலாம். சிவராத்திரி நாளன்று நம் மனவீட்டில் விளக்காகத் திகழும் ஐந்தெழுத்து மந்திரம் நமசிவாயத்தை இயன்றவரை சொல்லி ஆயிரமாயிரம் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

சிவராத்திர விரதமும், சிவ வழிபாடும் பாவவினைகளால் உண்டான பிணி, தடை, தோஷம், பாவங்கள், கர்மவினைகள், மரணபயம் , யமபயம் போன்றவற்றை நீக்கி முத்திக்கு வழிகாட்டும் என்பது நாயன்மார்களின் கூற்றாகும்.

சிவம் என்ற சொல்லுக்கு சுகம் என்று பொருள். சிவராத்திரி விரதம் அனுஷ்டித்தால் குடும்பத்தில் நன்மை பெருகும் என்பது நம்பிக்கை.

அன்பே சிவம்!

கலாபூஷணம்
இ.சியாமளாதேவி
வடிவேலன்

தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் மக்களின் கருத்தரசை காக்கவும்
இல. 91, விஜேராம மாவத்தை கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, பெப்ரவரி 19, 2023

மருந்து கள்ளர்களுக்கு தண்டனை கிடைக்காதா?

மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு நன்கொடையாளர்களால் வழங்கப்பட்ட மருந்துகள் மருந்தாளர் ஒருவரால் விற்பனைசெய்யப்பட்ட விவகாரம் பேசுபொருளாக மாறியுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளின் உதவியுடன் சந்தேக நபர் கடந்த புதன்கிழமை மகரகமவில் கைதுசெய்யப்பட்டார். இந்த நபர் மகரகம அபேக்ஷா வைத்தியசாலையில் 13 வருடங்கள் மருந்தாளராக கடமையாற்றி வருவதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

அந்த நபருக்கு 42 வயது. நீண்டகாலமாக அவர் மருந்துகளை விற்பனைசெய்து வந்துள்ளமையை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். சந்தேக நபருடைய வீட்டை சோதனையிட்டபோது நான்கு இலட்சத்து 25 ஆயிரத்து 970 ரூபா பணமும் இரண்டு கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய மருந்துகளும் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இவர் சுமார் 20 ஆயிரம் ரூபாவுக்கு புற்றுநோய் மருந்துகளை விற்பனைசெய்துள்ளமை விசாரணைகளிலிருந்து தெரியவந்ததாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள் நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் தெரிவித்தனர்.

சந்தேக நபரின் வீட்டிலிருந்து மீட்கப்பட்ட மருந்துப் பெட்டிகளில் அரச இலச்சினை பொறிக்கப்பட்டிருந்ததுடன் நன்கொடை எனவும் எழுதப்பட்டிருந்ததாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டதன் மூலம் இத்தனை காலமும் இவ்வாறான ஏமாற்று நடவடிக்கை இடம்பெற்றிருக்கிறதா? யாரும் கண்டுகொள்ளாதது ஏன்? போன்ற கேள்விகள் எழுகின்றன. நாடு நெருக்கடியான சூழ்நிலையை எதிர்நோக்கியிருக்கின்ற நிலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது என்று அறிந்தும் இவ்வாறான கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுக்கிறது.

சந்தேக நபர் மிகத் தைரியமாக மருந்துப் பொருட்களை வீட்டில் சேமித்து வைத்திருக்கிறார். அப்படியானால் இதன் பின்னணியில் பெரும் புள்ளிகள் இயங்குவதாகவே சந்தேகங்கொள்ளச் செய்கிறது.

இது குறித்து சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்லவிடம் கேட்டபோது, அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளரும் இதற்கு பொறுப்புக்கூற வேண்டும். இந்த விடயம் குறித்து விரிவான விசாரணைகளை முன்னெடுக்குமாறு அதிகாரிகளைப் பணித்துள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த மோசடி நீண்ட காலமாக இடம்பெற்று வருவதாகவும் சந்தேக நபரின் மனைவியும் அதே வைத்தியசாலையில் மருந்தாளராக கடமையாற்றி வருவதால் விசாரணைகளை தீவிரப்படுத்த வேண்டுமென்றும் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

மகரகம அபேக்ஷா வைத்தியசாலை நன்கொடையாளர்களின் மருந்துகளைகொண்டே இயங்கி வருகிறது. நாட்டில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதை சாதகமாக பயன்படுத்திக்கொண்ட மருந்தாளர், புற்றுநோய்க்குரிய மருந்துகளை தனியாரிடத்தில் பெற்றுத்தருவதாகக் கூறியே அவற்றை விற்பனைசெய்துள்ளார்.

அவ்வாறு விற்பனைசெய்யும்போது தனியார் மருந்தகமொன்றின் பெயரை குறிப்பிட்டு பற்றுச்சீட்டையும் கொடுத்துள்ளார்.

ஒரு வைத்தியசாலையை திறம்பட கொண்டுசெல்வதற்கும் நோயாளர்களின் உயிரைப் பாதுகாப்பதற்கும் மருந்தாளர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அந்தக் கடமை இங்கே வெளிப்படையாக மீறப்பட்டிருக்கிறது. வைத்தியர்கள் எழுதுக்கொடுக்கும் மருந்துகளை, மருந்தாளர்கள் மீது நம்பிக்கைவைத்தே நோயாளர்கள் பெற்றுச்செல்கிறார்கள்.

அவ்வாறு நம்பிக்கை வைப்போருக்கு இவ்வாறு துரோகம் இழைக்கும் மருந்தாளர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களில் ஒருவர் வெளிப்பட்டிருக்கிறார்.

இந்தக் குற்றச்செயலில் யாரெல்லாம் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை பொலிஸார் மிக விரைவாக கண்டறிய வேண்டியது அவசியமாகும். காலந்தாழ்த்துமிடத்து குற்றவாளிகள் தப்பிச்செல்வதற்கான வாய்ப்புகளே அதிகம் காணப்படுகின்றன.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் ஏதேனும் குற்றச் செயல்கள் குறித்து பரவலாக பேசப்படுவதும் அதன் பின்னர் அதனை மக்கள் மறந்துவிடுவதும் வழமையாகும். அதன்போது குற்றவாளிகளும் சுதந்திரமாக வெளியில் நடமாடத் தொடங்கியிருப்பார்கள்.

நோயாளர்களின் மருந்தை வஞ்சகமாக விற்பனை செய்து வந்த நபருக்கும் அவர் சார்ந்தோருக்கும் சட்டம் அந்த சுதந்திரத்தைக் கொடுத்துவிடாது என நம்புகிறோம்.

அதேபோன்று சுகாதார அமைச்சு இந்த விடயத்தில் எவ்வாறான விசாரணைகளை முன்னெடுக்கப்போகிறது என்பதை மக்கள் அவதானித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நாடு இந்தளவுக்கு பாதாளத்தில் வீழ்வதற்கு இலஞ்சமும் ஊழலும் புரையோடிப்போயிருப்பது முக்கியமான காரணமாகும். அவற்றை ஒழிக்க வேண்டுமானால் குற்றவாளிகள் தப்பிப்பதற்கு ஒரு சிறு சந்தர்ப்பமும் வழங்கப்படக்கூடாது.

அபேக்ஷா வைத்தியசாலையில் மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். நன்கொடையாளர்கள் மருந்துகளை வழங்க முன்வர வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். ஆக, நிலைமை இவ்வாறு பாரதூரமாக இருக்கும்போது மருந்துகளை விற்பனைசெய்த நபவஞ்சகர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படுவது உறுதிசெய்யப்பட வேண்டும்.

"இந்திய நலன்களுக்காக தமிழ் மக்களை பேரழிவுக்குள் சிக்க வைக்க சதி"!

வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

தமிழ் மக்கள் கூறியதை தென்னிலங்கை இன்று கூறுகின்றது

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மரணிக்கவில்லை?

தஞ்சாவூர் மாவட்டம் வில்லாரில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் தமிழ் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் செய்தியாளர்களிடம் பேசுகையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் இன்னும் உயிருடன் இருக்கிறார் என்று தெரிவித்துள்ளார்.

இந்தச் செய்தி இலங்கையைவிட இந்தியாவிலேயே பரபரப்பாகப் பேசப்பட்டது. இந்திய ஊடகங்களில் தலைப்புச் செய்திகளாகவும் மாறியுள்ளதுடன் இந்தச் செய்தி தொடர்பான தொடர் வலைத்தி்ற்கும் உள்ளாகியுள்ளது. பழ.நெடுமாறன் மேற்படி அறிவிப்பை பெப்ரவரி 13ஆம் திகதி வெளியிடப் போகின்றார் என்ற செய்தி தமிழகத்தில் மாத்திரமல்ல, புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் முதல் நாளான 12ஆம் திகதியே பரவத் தொடங்கியது.

புலம்பெயர் தமிழர்கள் பலர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் குறித்த மேற்படி அறிவிப்பை வெளியிட வேண்டாமென பழ. நெடுமாறனிடம் கேட்டுக்கொண்டதாக தற்போது செய்திகள் வெளிவந்துள்ளன.

அத்தகைய வேண்டுகோள்களை புறந்தள்ளி பழ.நெடுமாறன் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். தற்போது தாடிவைத்த படம் ஒன்றினையும் வெளியிட்டுள்ளனர். இந்த அறிவிப்பு தமிழ் மக்களை தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

போர் மௌனிக்கப்பட்ட 2009 மே 18ஆம் திகதிக்குப் பிறகு பலமுறை பழ.நெடுமாறன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் உயிருடன்தான் இருக்கின்றார் என்று பலமுறை தெரிவித்துள்ளார். அவ்வேளையில் எவ்வாறு இதுபற்றி யாரும் அலட்டிக்கொள்ள வில்லை. ஆனால், பழ.நெடுமாறனின் தற்போதைய அறிவிப்பு மற்றும் அறிவிப்பில் இடம்பெற்றுள்ள வாசகங்கள் தமிழ் மக்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளன.

இராணுவ ஆய்வாளர் அருஸ் - இலண்டன்

இராணுவ ஆய்வாளர் அருஸ் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் இறந்துவிட்டார் என்று தமிழ் அமைப்புகள் உறுதிப்படுத்தவில்லை. இலங்கை அரசாங்கமே அவருடைய இறப்பை உறுதிப்படுத்தியுள்ளது.

நெடுமாறனின் கூற்றில் பின்புலம் உள்ளது. இதன் பின்னணியில் இந்தியாவே உள்ளது. இந்தியா இன்று முகங்கொடுக்கின்ற இன்றைய உள்நாட்டு நெருக்கடிகள் மற்றும் பூகோள அரசியல் நிலைமைகளால் ஏதாவது நகர்வை மேற்கொண்டாக வேண்டும் என்ற நிலையில், பழ. நெடுமாறனின் கூற்றின் பின்புலத்தில் உள்ளது.

இந்த அறிக்கை மூலம் தமிழ் மக்களுக்கும் உலக நாடுகளுக்கும் இடையில் பிரச்சினைகளை ஏற்படுத்துவதாகவே உள்ளது. இதற்கும் அப்பால் தமிழ் மக்களை இந்திய நலன்களுக்காக போரழிவுக்குள் சிக்கவைக்கப்போகின்றார்கள் என்றும் பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் உணர்வலைகள்

அதேவேளை யில் இந்த விவகாரம் குறித்த தமிழ் மக்களின் உணர்வலைகள் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளன. இந்த அறிவிப்பு தமிழீழ விடுதலைப் புலிகள் மூலமாக ஏன் வெளிவரவில்லை. தலைவர் மூலமாகவோ அல்லது விடுதலைப் புலிகள் மூலமாகவோ இந்த அறிவிப்பு வெளிவராமல் மூன்றாம் தரப்பின் மூலம் வெளிவருவது மர்மம் நிறைந்ததாக உள்ளமை சிந்திக்க வேண்டியதாக இருக்கின்றது.

பிரபாகரன் என்ற குண்டைத் தூக்கிப்போட்டு அதானி விவகாரத்தை மூடிமறைத்துவிட்டது இந்திய மத்திய அரசு. தமிழ் மக்களை மீண்டும் பலி கொடுக்க இந்தியா தயாராகிவிட்டது.

தமிழக மக்களே இதனை நம்பாதீர்கள்.

ஈழத் தமிழர்களை மீண்டும் புதைகுழிக்கு இழுத்துச் செல்லாதீர்கள். இந்திய அரசியல் நலன்களுக்குள் தமிழர் வாழ்வை புதைக்காதீர்கள்.

இவ்வாறு பல விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. மொத்தத்தில் தமிழ்மக்களை மீண்டும் ஒரு முள்ளிவாய்க்கால் நோக்கி இழுத்துச் செல்வதாகவே இந்திய அரசின் பின்புலத்திலான பழ.நெடுமாறனின் அறிவிப்பு அமைந்துள்ளது என்பதே பெரும்பாலான தமிழ் மக்களின் கருத்தாக இருக்கின்றது.

சுபாஷ் சந்திரபோலின் செய்தியைப் போலவே பிரபாகரனின் மரணமும் மர்மமாகவே இருக்கும்

உள்நாட்டுப் போருக்குப் பிறகு உடனடியாக இலங்கை அரசால் அறிவிக்கப்பட்ட போர்க்களத்தில் பிரபாகரன் இறந்தார் என்பதை என்னால் உறுதிப்படுத்த முடியாது. பிரபாகரன் போர்க்களத்தில் இறந்திருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். அவரது மரணத்தில் உச்சக்கட்ட சந்தேகங்கள் இருப்பதால் இந்திய தேசியவாத மாவீரன் சுபாஷ் சந்திரபோலின் செய்தியைப் போலவே அவரது மரணமும் தொடர்ந்து மர்மமாகவே இருக்கும் என்று மலேசியாவின் பினாங்கு துணை முதல்வர் பேராசிரியர் ராமசாமி தெரிவித்துள்ளார்.

போஸைப் போலவே பிரபாகரனும் சாதாரண தலைவர் இல்லை. போர் 2009இல் மௌனிக்கப்படும்வரை உலகின் கடுமையான தேசிய விடுதலை இயக்கங்களில் ஒன்றான விடுதலைப் புலிகளின் தலைவராக இருந்தார். பிரபாகரன் மீதான மரியாதை மற்றும் அதனை கருத்தில்கொண்டு அவரது மரணம் உண்மையாக இருந்தாலும் கூட, உணர்வு ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாத பிரிவினர் தமிழர்களிடையே உள்ளனர். நிச்சயமாக, பிரபாகரன் சாகவில்லை என்பதை தமிழ்த் தேசியவாத இயக்கத்தின் தமிழ்நாட்டின் சில தலைவர்கள் அவரை உயிரோடு வைத்திருக்கிறார்கள். நெடுமாறன் அப்படிப்பட்ட தலைவர் என்றும் பேராசிரியர் ராமசாமி குறிப்பிடுகின்றார்.

அரசியல் நோக்கம் உள்ளது

பிரபாகரன் இறக்கவில்லை என்ற உண்மையை உயிருடன் வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் உளவியல் கூறுகளைக் கொண்டுள்ளது. ஆனால் அரசியல் நோக்கமும் உள்ளது எனக் கூறும் பேராசிரியர் ராமசாமி இது இந்தியாவில் மட்டுமல்லாது ஏனைய நாடுகளிலும் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கான நகர்வுகளை சிக்கலாக்கி ஏமாற்றமடையச் செய்யலாம்.

இரண்டாவதாக, பிரபாகரனின் உடனடித் திரும்புதல் பற்றிய தவறான நம்பிக்கையை இலங்கையிலும் பிற இடங்களிலும் உள்ள தமிழ் அமைப்புகளுக்கு வழங்கலாம். பிரபாகரன் இறந்தாலும் உயிரோடு இருந்தாலும் பரவாயில்லை. தற்போதைய தமிழினத் தலைமைகள் பல்வேறு பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சூழ்நிலைகளின் கீழ் விடுதலைப் போராட்டத்தைத் தக்கவைப்பதற்கான வழிகளையும் வழிமுறைகளையும் கண்டறிய வேண்டும் என்றும் தமிழ்த் தலைமைகளுக்கு அவர் அறிவுரையும் வழங்கியுள்ளார்.

புலிகளின் தலைவர் வந்தால்?

பழ.நெடுமாறனின் கூற்றை அடுத்து தென்னிலங்கை ஊடகங்களின் விமர்சனங்கள் இவ்வாறு இருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் புலித் தலைவரை வன்னிக்காடுகளுக்குச் சென்று அவரது உத்தரவை ஏற்று அவரது ஊதுகுழலாகச் செயல்பட வேண்டும்.

அவர்கள் விடுதலைப் புலிகளை தமிழ் சமூகத்தின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள வேண்டும்; வழியில் கடத்திச் செல்லப்பட்டு புலிகளால் பீரங்கித் தீவனமாக மாறிவிடுவார்களோ என்ற அச்சத்தில் வடக்கு, கிழக்கில் உள்ள பிள்ளைகள் மீண்டும் பாடசாலை செல்வதை நிறுத்த வேண்டும். தற்போது வடக்கு மற்றும் கிழக்கில் ஜனநாயகத்திற்காகப் போராடுபவர்கள் தமது போராட்டங்களைக் கைவிட்டு விடுதலைப் புலிகளின் கட்டளைகளுக்கு அடிபணிய வேண்டும் அல்லது ஒழிக்கப்பட வேண்டும்.

மனிதாபிமானப் போர் தந்த பரிசு

தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்ட மனிதாபிமானப் போர் தமிழ் மக்களுக்கு விடுதலையைக் கொடுத்ததா? என்பதற்கு தென்னிலங்கை பதில் கூறவேண்டும். பாலியல் வல்லுறவு, வான்வெட்டுக் கலாசாரம், கொள்ளை, களவு, பாதுகாப்பின்மை என தமிழ்ச் சமூகமே சீரழிந்து தமிழ்ச் சமூகக் கட்டமைப்பே சிதைந்து கிடக்கின்றது.

இளைஞர் சமூகத்தை போதைவஸ்து கலாசாரம் காவு கொண்டுவிட்டுள்ளது. மனிதாபிமானப் போர் தமிழ் மக்களுக்கு இதுபோன்று பல பரிசுகளை வழங்கியுள்ளது. மொத்தத்தில் தமிழ் மக்கள் இலங்கையின் பெரும்பான்மை இன ஆளும் வர்க்க ஜனநாயகத்திற்குள் தள்ளப்பட்டுள்ளனர். கடந்த 75 வருடங்களுக்கு மேலாக தென்னிலங்கை ஊடகங்கள் தமிழ் மக்களை பெரும்பான்மை இன ஆளும் வர்க்க ஜனநாயகத்திற்குள் தள்ளுவதற்கு துணை நின்றன.

சுதந்திர இலங்கையில் கடந்த 75 வருடங்களாக தென்னிலங்கை ஜனநாயகத்திற்குள் வாழ இயலாது என்று தொடர்ச்சியாகக் கூறி போராட்டங்களை நடத்தியபோதெல்லாம் ஆளும் வர்க்கத்துடன் இணைந்து தென்னிலங்கை ஊடகங்களும் தமிழ் மக்களுக்கு பயங்கரவாத முத்திரை குத்தினர். தமிழ் மக்களுக்கு எதிராக இரக்கமின்றி ஊடகப் போர் தொடுக்கப்பட்டது. வெற்றிகளும் ஈட்டப்பட்டன. அந்தவகையில் பிரபாகரனின் தோற்றத்திற்கு பெரும்பான்மை இன ஆளும் வர்க்க ஜனநாயகமும் தென்னிலங்கை ஊடகங்களுமே பொறுப்பேற்க வேண்டும்.

தமிழ் மக்கள் கூறியதை தென்னிலங்கை இன்று கூறுகின்றது

ஆனால், தமிழ் மக்கள் 75வருடங்களாகக் கூறியதை இன்று தென்னிலங்கை மக்களும் ஊடகங்களும் கூறுகின்றன. நாம் ஜனநாயகம் இல்லாத ஜனநாயக சுதந்திர நாட்டில் வாழ்ந்து வந்துள்ளோம். அந்த ஜனநாயகத்திற்கும் பிரியாவிடை கொடுக்கும் நிலைக்குத்தள்ளப் பட்டுள்ளோம் என மனம் குமுறுகின்றீர்கள். ஆனால், ஜனநாயகம் இல்லாத ஜனநாயக நாட்டில் வாழ்ந்ததாக்கூறும் தென்னிலங்கை மக்களும் ஊடகங்களும் 75 வருடங்களாக உரிமைக்காப் போராடும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமையை மறுதலித்துக் கொண்டிருப்பது விசித்திரமாக இருக்கின்றது.

தென்னிலங்கை இன்று ஜனநாயகத்தின் காவலனான தோ்தல் உரிமையே நிலை நிறுத்திக்கொள்ள முடியாத நிலையிலும் தமிழ் மக்களுக்கென அரசியலமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச்சட்டத்தைக்கூட நிறைவேற்ற வேண்டாமென வீதியில் நிற்கின்றீர்கள்.

தமிழ் மக்களை போக்கிய தென்னிலங்கையின் நகர்வுகள் அனைத்துமே தமிழ் மக்களை பிரபாகரன் என்ற மையப் புள்ளியை நோக்கி நகர்த்துவதாகவே உள்ளது என்ற யதார்த்தத்தை உணராதவரை தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல தென்னிலங்கைக்கும் சுதந்திரம் காலவ் நீரே.

பெரும்பான்மை இன ஆளும் வர்க்க ஜனநாயகத்தின் கோரமுகத்தை கண்டவர்கள் தமிழ் மக்கள். எனவேதான் 75 வருடங்களாக தமிழ் மக்கள் அதற்கு எதிரான போராட்டத்தில் தொடர்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ் மக்கள் கண்ட கோரமுகத்தை தென்னிலங்கை மக்கள் 75 வருடங்களுக்குப் பிறகே இனங்கண்டுள்ளனர். ஆனால் பெரும்பான்மை இன ஆளும் வர்க்க ஜனநாயகவாதிகள் காலிமுகத்திடல் போராட்டத்துக்கு பிறகு தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட அனைத்து அஸ்திரங்களையும் தென்னிலங்கை மீது பிரயோகிக்கத் தயாராகிவிட்டனர். அவர்களுக்கு இது "Do Or Die" பயணமாகும்.

பழ.நெடுமாறன் ஐயா கூறியதில் ஒரு உண்மை தொக்கி நிற்கின்றது.

ஆனால், பழ.நெடுமாறன் ஐயா கூறியதில் ஒரு உண்மை தொக்கி நிற்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் மரணிக்கவில்லை என்பது உண்மைதான்.

2009ஆம் ஆண்டு மே 19ஆம் திகதி அதிகாலையில் இலண்டனில் இருந்து ஒரு தொலைபேசி அழைப்பு எனக்கு வந்தது. அந்த அழைப்பை ஏற்படுத்தியவர் எனது பல்கலைக்கழக சகாவான பத்தர். அதாவது கேபி என்று அழைக்கப்படும் பத்மநாதன். தலைவர் இறந்துவிட்டார். தமிழ் மக்கள் அவருக்கு மாபெரும் அஞ்சலி செலுத்த வேண்டும் என்றார். அவ்வேளையில் எனது மனதும் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்தது.

இந்தச் சம்பவம் நடைபெற்று சிறிது காலத்திற்குப் பிறகு எனது கேசரி இணைப் பத்திரிகையாளர்களுடன் போர் நடந்த பகுதி களுக்கு செய்தி சேகரிப்புக்காகவும் மக்களின் போர்க்கால நேரடி அனுபவங்களை பெறுவதற்காகவும் சென்றிருந்தோம்.

அவ்வேளையில் அனுமதிக்கப்பட்ட நந்திக் கடல் பகுதியில் ஒரு உருவம் கடலை வெறித்து பார்த்துக் கொண்டிருந்தது. போரின்போது ஷெல்கள் அவரது உடம்பைப் பதம் பார்த்ததுடன் ஒரு காலையும் ஊனமாக்கி இருந்தது. தமது உறவுகளையும் சுற்றத்தாரையும் இழந்து தனி மரமாக நின்று கொண்டிருந்த அவரை அணுகினேன்.

தலைவரின் வரவுக்காகக் காத்திருக்கின்றோம்

இளைஞர்களின் வீரம் விளைந்த மண் இது என்றார். ஷெல் வீச்சுக் குள்ளும் நாம் எல்லோரும் சுதந்திரக்காற்றை சுவாசித்தோம். அந்த சுதந்திரம் முழுமையாக எமக்குக் கிடைக்காது போய்விட்டது. இந்தக் கனம் எம்முன் அவர் வந்து நின்றால் நாங்கள் அனைவரும் அணிவகுத்து அவர் பின்னால் போய்விடுவோம் என்றவர் தலைவரின் வரவுக்காகக் காத்திருக்கின்றோம் என்று கூறி முடித்தார்.

தலைவர் மரணிக்கவில்லை

இவருக்கு தலைவர் மரணிக்கவில்லை. இதே மன நிலையில்தான் ஒட்டுமொத்த தமிழினமும் உள்ளது என்பதை ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற வாசகத்தை போரின் எச்சமாக நின்றபோதும் நெஞ்சை நிமிர்த்தி அவரின் வரவுக்காகக் காத்திருக்கின்றது அந்த ஜீவன்.

தலைவர் மரணிக்கவில்லை. காலத்தை வென்று தமிழ் மக்களின் மனங்களில் வாழ்கின்றார் என்பதையே பழ.நெடுமாறன் ஐயாவின் கூற்று 2009க்குப் பிறகு உணர்த்தி நின்றது.

ஆனால் இன்றைய அவரது கூற்று? பல்வேறு விமர்சனங்களையும் கண்டனக் கணைகளையும் தோற்றுவித்துள்ளது.

சண்டே சாம்பார்

ஆர்.சிவராஜா
mesivaraj@yahoo.com

தேர்தல் தொடர்பில் அரசுக்கு கலக்கத்தை கொடுத்த புலனாய்வுத்துறை அறிக்கை

தேர்தல் எவ்வளவு காலத்திற்கு ஒத்திவைக்கப்படும் என்ற தகவல் வெளியானது

மீண்டும் மஹிந்தவை பிரதமராக்க நடக்கும் ஏற்பாடுகள்

அமெரிக்க, சீன பாதுகாப்புக் குழுக்கள் கொழும்பில் முகாம்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திகதியில் நடத்தப்படுமா இல்லையா என்பது தான் இலங்கையில் இப்போதுள்ள விடை தெரியாத கேள்வி.

தேர்தலை எதிர்கொள்ள தயாராக இருப்பதாக ஆளுங்கட்சி வெளியில் காட்டிக்கொண்டாலும் தேர்தலை அறிவிக்கப்பட்ட திகதியில் நடத்தாமல் அதனை இழுத்தடிக்கும் அத்தனை வேலைகளையும் ஆட்சியாளர்கள் செய்துவருகின்றனர்.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட கையோடு தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் இராஜினாமா செய்தது முதல் இப்போது தபால் மூல வாக்குச்சீட்டுகள் அச்சடிப்பில் நடக்கும் இழுபறி நிலைமை வரை எல்லா வேலைகளையும் ஆட்சியாளர்கள் நுட்பமாக செய்துவருகின்றனர்.

தேர்தல் நடத்த தேவையான நேரத்தில் நிதி ஒதுக்கீடுகளை செய்யத் தயாரென திறைசேரி கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் கூறியது. கடந்த வரவு - செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை தரலாமென கூறிய திறைசேரி, இப்போது கடந்த வியாழனன்று தேர்தல் ஆணைக்குழு அழைத்த கூட்டமொன்றையும் புறக்கணித்தது.

கடந்த தேர்தல் காலங்களில் நடைபெற்ற தேர்தல்களின்போது முற்பணம் தொடர்பில் அக்கறை காட்டாத அரசாங்க அச்சகத் திணைக்களம் இப்போது அதிலும் கறாராக இருக்கிறது. முற்பணம் கொடுத்தால்தான் தபால்மூல வாக்குச்சீட்டுகளை அச்சிடுவோம் என்று கூறுகிறது அரச அச்சகம், எந்தவொரு வேலைகளையும் கடன் அடிப்படையில் செய்யவேண்டாமென ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள விசேட சுற்றறிக்கையின் பிரகாரம், கொடுப்பனவை பெறாமல் வாக்குச் சீட்டுகளை அச்சிட முடியாது என்பதுதான் அரச அச்சகரின் வாதம்.

ஊடக அமைச்சின் கீழ் வரும் அரச அச்சகத் திணைக்களம் இப்போதைய இந்த சர்ச்சைக்கு முடிவைத் தருமாறு கோரி அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு கடிதமொன்றையும் அனுப்பி வைத்தது. இதற்கப்பால் இன்னுமொரு முக்கிய விடயத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். அதுதான் பாதுகாப்பு சம்பந்தமான பிரச்சினை. அரச அச்சகத்தில் வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்டு நிறைவு செய்யும்போது அதற்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு இடப்படவேண்டும். ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை வரை அப்படியான எந்த பாதுகாப்பும் இடப்படவில்லை.

இதனையடுத்து, பொலிஸ் மா அதிபருக்கு அவசர கடிதமொன்றை அனுப்பிய அரச அச்சகர் கங்கானி, அரச அச்சகத்திற்கு பொலிஸ் பாதுகாப்பை வழங்கும்படி கோரியிருந்தார். எனினும் அதுவும் வெள்ளிக்கிழமை மாலை வரை செய்யப்பட்டிருக்கவில்லை. தேர்தல் பணிகளுக்காக பொலிஸாரை பாதுகாப்பு கடமைகளுக்கு அனுப்புவதற்கு பொலிஸ் திணைக்களத்திற்கு போதியளவு நிதிவசதி இல்லையென அங்கேயும் பிரச்சினை எழுந்திருக்கிறது.

ஆளுங்கட்சி அச்சப்படுவதன் பின்னணி

தேர்தலை எப்படியாவது நடத்தாமல் ஒத்திவைக்க அரசாங்கம் விரும்புவதன் பின்னணி குறித்து இங்கு நிச்சயம் குறிப்பிட வேண்டும். உள்ளூராட்சி சபைத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நாள் முதல் தேர்தல் கள நிலைவரங்களை அரச மேல்மட்டம் ஆராய்ந்துவருகிறது. அரச புலனாய்வுத்துறையினர் முதற்கட்டமாக நடத்திய ஆய்வில் தேர்தல் முடிவுகள் ஆளுங்கட்சிக்கு சார்பானதாக இல்லை என்ற தகவல் வெளிவந்தது. இதன்பின்னரே தேர்தலை இழுத்தடிக்கும் முயற்சிகள் ஆரம்பமாகின. ஆனாலும் அந்த நிலைமை சீராகிவிடும். மார்ச் மாதம் 9ஆம் திகதி தேர்தலை நடத்தலாம் என்றுதான் ஆளுந்தரப்பு எண்ணியிருந்தது.

ஆனால், கடந்தவாரம் வெளியான மற்றுமொரு புலனாய்வுத்துறை அறிக்கையால் ஆளுங்கட்சி ஆடிப்போனது.

அரச புலனாய்வுத்துறை கிராம மட்டத்தில் நடத்திய ஆய்வில், தேசிய மக்கள் சக்தி கிராமங்களில் மக்களின் மனங்களை வென்றுள்ளமையும், அவர்களின் கூட்டங்களில் கலந்துகொள்ள பெருமளவு மக்கள் வருவதையும் புள்ளிவிபரங்களாக புலனாய்வுத்துறை அரச மேலிடத்திடம் சமர்ப்பித்தது. கடந்தவாரம் தேசிய மக்கள் சக்தி ஹொரணையில் நடத்திய கூட்டமொன்றில் எதிர்பார்க்கப்பட்ட கூட்டத்தைவிட அதிகமான அளவில்லாத மக்கள் கலந்துகொண்டதையும் புலனாய்வுத்துறை புள்ளிவிபரங்களுடன் அறிக்கையாக சமர்ப்பித்தது.

தேசிய மக்கள் சக்தி என்ற அரசியல் கட்சியான ஜே.வி.பி சிங்கள கிராமங்களில் மூன்றாவது அல்லது நான்காவது சக்தியாக இருந்தது. கடந்த காலங்களில் இடம்பெற்ற ஆயுதப்புரட்சியால் பெருமளவு உயிரிழப்புகளுக்கு அவர்கள் காரணம் என்ற அடிப்படையில் அவர்கள் மீது இருந்த வெறுப்பு, பின்னர் எப்படி காலப்போக்கில் இப்போது விருப்பாக மாறியுள்ளது என்பதுபற்றி புலனாய்வுத்துறை அதிர்ச்சியடைந்துள்ளது.

அரச புலனாய்வுத்துறையினர் மேற்கொண்ட ஆய்வுகளின்படி தேசிய மக்கள் சக்தி மக்கள் ஆதரவைப் பெற்று முதல் இடத்திலும், ஐக்கிய மக்கள் சக்தி இரண்டாமிடத்திலும் உள்ளன. விமல் வீரவங்ச, உதய கம்மன்பில கொண்ட சுதந்திர மக்கள் கூட்டணிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் மூன்றாவது இடத்திற்கு போட்டி நிலவுகிறது. அதிலும் சிங்கள மக்கள் பெரும்பான்மையான இடங்களில் ஹெலிகொப்டர் சின்னக் கட்சியான சுதந்திர மக்கள் கூட்டணி மீது தமது விருப்பை மக்கள் வெளியிட்டுள்ளனர். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்த கூட்டணி மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை சம்பாதித்துள்ளமை புலனாய்வுத்துறையின் அறிக்கையில் விரிவாக தெரியவந்திருப்பதால் தேர்தலை முடிந்தளவு தூரத்திற்கு இழுத்தடிக்க ஆளுங்கட்சி உத்தேசித்துள்ளது.

தேர்தல் தபால் மூல வாக்கெடுப்பை காலவரையின்றி ஒத்திவைக்க தேர்தல் ஆணைக்குழு கடந்த வெள்ளிக்கிழமை தீர்மானித்தது. தேவையான நிதிகிடைக்காத காரணத்தினால் தேர்தலை நடத்த முடியாத நிலை இருப்பதாக எதிர்வரும் 23ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் தனது நிலைப்பாட்டை தேர்தல் ஆணைக்குழு விளக்கிக் கூறுமென சொல்லப்படுகிறது. கிட்டத்தட்ட 6 மாதக்காலத்திற்கு தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என்று உள்ளக தகவல்கள் சொல்கின்றன. எவ்வாறாயினும் தேர்தலை உரிய திகதியில் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளமை தொடர்பில் அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணைக்குழு மீது கடும் விமர்சனங்களை முன்வைக்க ஆரம்பித்துள்ளன. திங்கட்கிழமை(20) கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டமொன்றை செய்யப்போவதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. அதேசமயம் தேர்தலை ஒத்திவைத்தால் மக்களை வீதிக்கு இறக்கப்போவதாக தேசிய மக்கள் சக்தியும் எச்சரித்துள்ளது. தேர்தல் ஒத்திவைக்கப்பட்டாலும் அரசாங்கத்தின் மீதான மக்களின் அதிருப்தி மாறும் சாத்தியம் குறைவென்பதே அரசியல் நோக்கர்களின் கருத்தாக இருக்கிறது.

மஹிந்த மீண்டும் பிரதமரா?

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமர் பதவியில் அமர்த்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதாவது, தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் அப்படி ஒரு ஏற்பாட்டைச் செய்தால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு கூடும் என அந்தக் கட்சிக்குள் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், தேர்தல் எப்போது நடக்கும் என்ற விடயம் உறுதியாக இல்லாதபடியால் அந்த தீர்மானமும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை ஆற்றி கடந்தகால கோட்டாபயவின் தவறுகளுக்கு பொறுப்பேற்று மஹிந்த ராஜபக்ஷ மக்களிடம் மன்னிப்பை கேட்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மூத்த உறுப்பினர்கள் பலர் இதற்கான முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

பிரதமர் பதவியில் இப்போது இருக்கும் தினேஷ் குணவர்தன தனது பதவியை விட்டுக் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார் என்றே சொல்லப்படுகின்றது. ஆனால், பலம் வாய்ந்த அமைச்சுப் பதவி ஒன்றை அவர் இதற்கு பிரதியுபகாரமாக கூறுவதாகவும் சொல்லப்படுகின்றது. குறிப்பாக நிதி அல்லது வீடமைப்பு அமைச்சுப் பொறுப்பு அவருக்கு வழங்கப்படலாமென தெரிகிறது.

எவ்வாறாயினும், மஹிந்த ராஜபக்ஷவிற்கு மீண்டும் பிரதமர் பதவியை வழங்கினால் தேவையற்ற சர்ச்சைகள் ஏற்படுமென ஜனாதிபதிக்கு அவரது நெருக்கமான தரப்பினர் அறிவுரைகளை வழங்கியுள்ளனர்.

கொழும்பில் முகாமிட்டுள்ள அமெ.உயர்மட்ட பாதுகாப்புக் குழு

உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகளை உள்ளடக்கிய 20 பேர் கொண்ட அமெரிக்க தூதுக்குழுவினர் கடந்த திங்கட்கிழமை இரவு கொழும்பு வந்தனர். அமெரிக்க விமானப்படையின் இரண்டு சிறப்பு விமானங்களில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அவர்கள் வந்தடைந்தனர்.

இந்த தூதுக்குழுவில் தலைமைதாங்கிய இந்தோ-பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமெரிக்க துணைப் பாதுகாப்புச் செயலர் ஜெடி றோயல் கொழும்பில் பல முக்கிய சந்திப்புகளை நடத்தினார். அமெரிக்க தூதுக்குழுவின் வருகையை முன்னிட்டு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த சில நாட்களாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

குழுவானது போயிங் C-17 Globemaster III சிறப்பு விமானத்தில் இலங்கை வந்தடைந்தது.

தூதுக்குழுவினர் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் விமான நிலையத்திலிருந்து கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் கொழும்பு நோக்கிய பாதை போக்குவரத்திற்காக மூடப்பட்டிருந்தது.

திருகோணமலை துறைமுகத்தின் முக்கிய பகுதியொன்றை அமெரிக்கா கோரியுள்ளதாகவும் அதனால் தான் இந்தக் குழு வந்ததாகவும் செய்திகள் வெளிவந்தன. ஆனால் உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு விடயத்தில் அமெரிக்கா ஏதேனும் நகர்வுகளை செய்தால் அதற்கு இலங்கையை பயன்படுத்துவது தொடர்பில் அமெரிக்க குழு கொழும்புடன் பேச்சு நடத்தியுள்ளதாக தெரியவருகிறது.

தியேகோ கார்சியா தீவில் இருந்தே அமெரிக்க குழு இலங்கை வந்தது. இலங்கை வருவதற்கு முன்னர் இந்தியாவுக்கும் இந்தக் குழு சென்றது. தியேகோ கார்சியா என்பது இந்தியப் பெருங்கடலின் நடுப்பகுதியில் நிலநடுக்கோட்டிற்கு தெற்கே அமைந்துள்ள ஒரு பவளத் தீவாகும். இது பிரித்தானிய இந்தியப் பெருங்கடல் மண்டலத்தின் ஒரு பகுதியும், இம்மண்டலத்தில் அமைந்துள்ள ஆயிரக்கணக்கான சிறிய தீவுகளில் ஒன்றும் ஆகும். 1814ஆம் ஆண்டில் பிரித்தானியா இத்தீவுகளை உரிமை கோரியது. பின்னர் 1965ஆம் ஆண்டில் இவற்றைப் பிரித்தானியா தனது பிராந்தியமாக இணைத்துக்கொண்டது. இத்தீவுகளில் தியேகோ கார்சியா மிகப் பெரியதும், குடிமக்கள் அற்ற ஒரேயொரு தீவுமாகும்.

தியேகோ கார்சியா தான்சானியா கரையின் கிழக்கே 3,535 கி.மீ. (2,197 மைல்) தூரத்திலும், இந்தியாவின் தென்முனையில் (கன்னியாகுமரியில்) இருந்து தென்-தென்மேற்கே 1,796 கி.மீ. (1,116 மைல்) தூரத்திலும், அவுஸ்திரேலியாவின் மேற்குக் கரையில் இருந்து 4,723 கி.மீ. (2,935 மைல்) தூரத்திலும் அமைந்துள்ளது.

தியேகோ கார்சியாவில் அமெரிக்கக் கடற்படை தனது தேவைக்கான உதவித் தளத்தை இங்கு வைத்துள்ளது. பெரும் கடற்படைக் கப்பல் மற்றும் நீர்மூழ்கி உதவித் தளம், படைத்துறைத் தேவைக்கான வான்படைத் தளம், தகவல் தொடர்பு, விண்வெளித் தொடர்புத் தளம் ஆகியவை இங்கு பேணப்படுகின்றன. எனவே அமெரிக்கா திடீரென உயர்மட்ட குழுவை இங்கு அனுப்பியமை பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் பேசுபொருளாகியது. அமெரிக்க தூதுக்குழுவொன்று வந்த அடுத்த நாளே சீனாவின் உயர்மட்ட பாதுகாப்பு குழுவொன்று இலங்கை வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நெடுமாறனுக்கு ஒரு கடிதம்...

ஐயா வணக்கம்... எப்பிடி நல்லா இருக்கிறியளே.. உங்களுக்கென்ன நல்லாத்தான் இருப்பியள் எண்டு நினைக்கிறன். உண்ணான உங்களுக்கெல்லாம் கடுதாசி போடுவன் எண்டு இந்தப் பேரம்பலம் அஞ்சாத்துக்கும் நெச்சு இருக்கேல்லை. வேறை ஒண்டும் இல்லை நீங்கள் இருக்கிறியளோ இல்லையோ எண்டு தெரியாமல் கிடந்தது அதாலதான் நான் ஒண்டும் உங்களுக்கு எழுதேல்லை. ஆனால் நிண்டாப்போல போன கிழமை பிரபாகரன் உயிரோடை இருக்கிறார் எண்டு ஒரு குண்டைப் போட்டு எல்லாற்றை வயித்திலையும் சாக்குக் கணக்கா புளியைக்கரைச்சியள் எல்லே. அப்பதான் நீங்கள் இன்னும் இருக்கிறியள் எண்ட விஷயம் என்னை மாதிரியான ஆக்களுக்கு விளங்கினது. அதாலதான் இந்தக் கடுதாசியை எழுதுவம் எண்டு போட்டு எழுதிறன் கண்டியளோ...

உண்ணான உங்களிலை எங்களுக்கு ஒரு நல்ல மதிப்பு இருந்தது எண்டுதான் சொல்லவேணும். ஏனெண்டால், 1982ஆம் ஆண்டு இப்பத்தே எங்கட ஜனாதிபதியின்ரை மாமா ஜே.ஆரின்ரை காலத்திலை தெற்காசியாவிலேயே பெரிய யாழ்ப்பாணம் லைப்றறியைக் கொளுத்திப்போட்டங்கள் எண்டு அறிஞ்சதும் இஞ்சை நேரை வந்து பாத்து அப்பத்தே தமிழ்நாடு முதலமைச்சர் எம்ஜீஆருக்கு அறிக்கை ஒண்டைக்குடுத்து பேந்து அவரோடை சேந்து டெல்லிக்குப் போய் இந்திராகாந்தியிட்டை நீங்கள் கண்டது கேட்டது எல்லாம் சொன்னனியள். அதுமாதிரி அப்ப நீங்கள் தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினரா இருக்கேக்கை எண்பத்தி இரண்டிலை எண்டு நினைக்கிறன் அவங்கள் குட்டிமணி தங்கத்துரை ஆக்களை சிறையிலை இருந்து விடுவிக்க வேணும் எண்டு ஒரு தனிநபர் பிரேரணையைக் கொண்டு வந்து நிறைவேற்றினனியள். இஞ்சை எண்பத்தி மூண்டிலை ஆயிரக்கணக்கிலை தமிழ்ச்சனம் சாகேக்கை அவையின்ரை சொத்துக்கள் எல்லாம் அழியேக்கை நீங்கள் ஆயிரக்கணக்கான ஆக்களைத் திரட்டி உந்த அழிவுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிச்சு மதுரையிலிருந்து இராமேஸ்வரம் வரை வந்து உலகத்துக்கு எல்லாம் எங்கடை சனத்தின்ரை அழிவுகளைப் பற்றி ஒரு விழிப்புணர்வு ஊட்டினநீங்கள் எண்டதெல்லாம் ஞாபகம் வருகுது.

அதேமாதிரி எண்பத்தி அஞ்சாம் ஆண்டு இஞ்சை இரகசியமா வந்து எங்கடை சனம் பட்ட அவலங்களை எல்லாம் ஆவணப்படுத்திக்கொண்டு போய் உலகத்துக்கு அறிவிச்ச நீங்கள். பேந்து அதேமாதிரி தொண்ணூற்றி ஒண்டில திரும்பவும் வந்து இந்தியன் ஆமி இஞ்சை இருக்கேக்கை எங்கட சனங்கள் பட்ட அவலங்களை ஆவணமாக்கி அப்பத்தே இந்தியப் பிரதமர் வி.பீ.சிங்கிட்டை குடுத்தனியள். உப்பிடி நீங்கள் இஞ்சை இருக்கிற தமிழ் ஆக்களுக்கு சப்போர்ட்டா எத்தினையோ ஆர்ப்பாட்டங்களை ஊர்வலங்களை ஹர்த்தால்களை எல்லாம் செய்தனியள் எண்டது இப்பத்தேப் பெடியளுக்குத் தெரியாட்டிலும் என்னைப் போல ஆக்களுக்கு வடிவாத் தெரியும். அதிலும் நீங்கள் அப்ப சண்டை நடந்த காலத்திலை இராமேஸ்வரத்திலை இஞ்சை சண்டையை நிப்பாட்ட வேணும் சனத்துக்கு சாப்பாடு தண்ணி வென்னி மருத்துகள் குடுக்க வேணும் எண்டு நடத்தின படகுப் போராட்டங்கள் எல்லாம் அப்ப வலு பேமஸ் கண்டியளோ. அங்கை இந்தியாவிலை சந்தேகத்திலை பிடிபட்ட கன எங்கடை ஆக்களை விடுவிக்க வேணும் எண்டுபோட்டு கன வழக்குகளைப் போட்டு அவங்களை எல்லாம் வெளியில எடுத்தனீங்கள். அதிலும் குறிப்பா தமிழ்நாட்டுச் சிறைகளிலை இருந்த எத்தினையோ கைகால் இல்லாத ஊனமுற்ற எங்கடை இயக்கப் பெடியளை எல்லாம் கேஸ் போட்டு வெளியிலை எடுத்து இருக்கிறியள் எண்டது எல்லாம் தெரியும்.

தொடக்கத்திலை நீங்கள் மகாத்மா காந்தி, காமராசர் மாதிரியான தலைவர்களில கொண்ட விருப்பத்தாலை இந்திய தேசிய காங்கிரசிலை சேந்து முக்கியமான ஒரு மதிப்பு உள்ள தலைவரா இருந்து இருக்கிறியள். பேந்து அங்கை என்னவோ பிரச்சினைப் பட்டுக்கொண்டு வெளியில வந்து காமராசர் காங்கிரசு எண்டு ஒரு கட்சியைத் தொடங்கினியள். முதல் தேர்தல் அரசியலிலை இருந்தாலும் எப்ப நீங்கள் தமிழர் தேசிய இயக்கத்தைத் தொடங்கினியளோ அதுக்குப்பிறகு தேர்தல் அரசியலை விட்டுப்போட்டு இலங்கையில சரி இந்தியாவிலை சரி தமிழர்களுக்கு எது நடந்தாலும் முன்னுக்கு நிண்டு போராடினியள். உந்தப் போராட்டங்களிலை ஈடுபட்டதாலை எத்தினையோ முறை தடா பொடா சட்டங்களுக்குக் கீழை மாதக்கணக்கா மறியல் இருந்தனியள். என்ரை தமிழ்நாட்டுக் கூட்டாளி ஒருத்தன் நீங்கள் அநேகமா தமிழ்நாட்டிலை உள்ள எல்லாச் சிறையளிலையும் இருந்தனியளாம் எண்டு சொன்னவன்.

நல்ல ஒரு பேச்சாளரா இருந்த நீங்கள் பல பேப்பர்களிலை ஆசிரியரா இருந்து, இப்பவும் இருக்கிறியள், பல கட்டுரைகளை தமிழர்களின்ரை பிரச்சினை தொடர்பா எழுதி இருக்கிறியள் அதமாதிரி எத்தினையோ புத்தகங்கள் எழுதி விழிப்புணர்வு ஊட்டி இருக்கிறியள். அதிலும் இலங்கையில தமிழர்களின்ரை பிரச்சினைகள் தொடர்பாக எக்கச் சக்கமான புத்தகங்களை எழுதி இருக்கிறியள்.. அதமாதிரி பல நாவல்களை எழுதின நீங்கள் தமிழ் இலக்கிய ஆய்வு நூல்கள் எல்லாம் எழுதி இருக்கிறியள். உப்படியான விசயங்களாலைதான் உங்களிலை எனக்கு கடும் மரியாதையும் மதிப்பும் இருந்தது. ஆனால் போன கிழமை நீங்கள் நிண்டாப்போலை பிரபாகரன் உயிரோடை இருக்கிறார் எண்டு சொன்ன பிறகு எனக்கு உங்களிலை இருந்த மதிப்பு இல்லாமல் போனது மட்டும் இல்லாம உங்களிலை கடும் ஐமிச்சமாவும் கிடக்குது கண்டியளோ. உண்ணான இஞ்ச நடந்த அழிவுகளுக்குப் பிறகு சரி.. சரி என்னவோ நடந்தது நடந்து போச்சுது உந்த அழிவுகளுக்கு இருபகுதியும்தான் காரணம் எண்டு மனசை ஆறுதல்படுத்திக்கொண்டு மிச்சமா இருக்கிறதை எண்டான்னை காவாந்து பண்ண வேணும் எண்டு போட்டுத்தான் இஞ்சை உள்ள தமிழ்ச் சனம் சீவிக்குதுகள் கண்டியளோ. அதுமட்டும் இல்லை உங்கை தமிழ்நாட்டிலை இருந்து கொண்டும் புலம்பெர்ந்துபோன இடங்களிலை எல்லா வசதியளோடையும் இருந்து கொண்டும் அறிக்கை விடுகிற ஆக்களுக்கு பேட்டி குடுக்கிற ஆக்களுக்கு ஒரு விஷயம் வடிவா விளங்க வேணும் என்னண்டால் இஞ்சை இலங்கையில தமிழ்ச் சனம் தனிய வடக்கு கிழக்கில மட்டும் இல்லை அதுக்கு வெளியிலையும் மில்லியன் கணக்கில சீவிக்குதுகள். அதிலும் குறிப்பா மலையகத்திலை எவ்வளவு பேர் இருக்கினம் எண்டது தெரிய வேணும்.

நீங்கள் உப்படி முட்டாள்த்தனமா அறிக்கை விடுகிறதாலை தனிய வடக்கு கிழக்கிலை மட்டும் இல்லை வெளியிலை இருக்கிற ஆக்களுக்கும் பிரச்சினை எண்டது வடிவா விளங்கவேணும். உங்களுக்கு ஒண்டு தெரியுமே தனிநாடு கேக்காமலே தமிழர்கள் எண்ட ஒரு குற்றத்துக்காகவே மலையகத் தமிழர்கள் ஒவ்வொரு இனக்கலவரத்திலையும் பாதிக்கப்பட்டு இருக்கினம். உயிர்களை சொத்துக்களை இழந்து இருக்கினம். சண்டை நடந்த காலத்திலை அவைக்கும் ஊரிப்பட்ட அநியாயங்கள் நடந்து இருக்குது. கைதுகள், மறியல், சித்திரவதை, காணாமல் போனது எண்டு நிறையவே துன்பபட்டு இருக்கினம். உண்ணான வடக்கு கிழக்கில இருக்கிற தமிழர்களின்ரை பிரச்சினைகளுக்கும் மலையகத்திலை உள்ள தமிழர்களின்ரை பிரச்சினைகளுக்கும் இடையில கன வித்தியாசங்கள் இருக்குது. அப்ப நீங்கள் இலங்கையில தமிழர்கள் எண்டும் அவையின்ரை பிரச்சினைகள் எண்டும் கதைக்கேக்கை இந்த விசயங்களை உங்கட மண்டையளுக்கை வைச்சுக் கொள்ள வேணும் கண்டியளோ...

சரி.. சரி அது கிடக்கட்டும், நெடுமாறன் ஐயா நீங்கள் வரியக்கணக்கா வாயை மூடி இருந்துபோட்டு நிண்டாப்போல பிரபாகரன் இருக்கிறார் எண்டு அறிக்கை விட்டதிலை ஏதும் உள்நோக்கம் இருக்கும் எண்டு நான் நம்பிறன். இல்லாட்டில் திருநாவுக்கரசு நாயனார் பாம்பு கடிச்சுச் செத்த அப்பூதி அடிகளின்ரை பெடியை உயிர்ப்பிச்ச மாதிரி இல்லாட்டில் பானையுக்கை சாம்பலாக் கிடந்த பூம்பாவையை திருஞானசம்பந்தர் உயிர்ப்பிச்சு அற்புதங்கள் செய்தமாதிரி செத்துப்போன ஆக்களை உயிர்ப்பிக்கிற சக்தி உங்களுக்கும் வந்திட்டுதோ. ஆனால் ஒண்டு சம்பந்தர் எண்டதும்தான் ஞாபகம் வருகுது எங்கட சம்பந்தர் அதுதான் சாம் ஐயாவும் செத்துப்போன அறிக்கையளை எல்லாம் தேடி எடுத்து தீபாவளி, தைப்பொங்கல், வரியப்பிறப்பு எண்டு வரேக்க இந்தா தீர்வு வருகுது எண்டு உயிர்ப்பிச்சு அற்புதம் செய்வார். நான் நினைக்கிறன் வயது போகப்போக இப்பிடியான கோளாறுகள் வரும்போல கிடக்கு.

நீங்கள் சொன்ன செய்தியாலை இக்கணம் சிங்களச் சனம் கெம்பி வெளிக்கிட்டு வாற எலக்சன்களிலை சிங்களத் தீவிரவாதக் கட்சியளுக்கு வோட்டுப்போட்டு இந்த நாட்டிலை தமிழ்ச் சனத்துக்கு ஒண்டும் கிடைக்கவிடக் கூடாது எண்டு போட்டுத்தான் இந்த செய்தியைச் சொன்னியளோ. ஏனென்டால் ரணில் பதின்மூன்டை என்னவிதப்பட்டும் அமுல்படுத்துவன் எண்டு சொன்ன நேரம் பாத்து இஞ்சை உள்ளூராட்சி சபையளுக்கு எலக்சன் நடக்க இருக்கிற நேரம் பாத்து நீங்கள் உதைச் சொல்லி இருக்கிறியள் எண்டதாலை நான் உதை யோசிக்க வேண்டிக் கிடக்குது. ஆனால் உங்கட செய்தியால தனியச் சிங்களத் தீவிரவாதியள் மட்டும் எண்டு இல்லை தமிழரின்ரை உணர்வுகளையும் உணர்ச்சியளையும் உசுப்பேத்தி அரசியல் செய்து வசதி வாய்ப்புகளை அனுபவிக்கிற தமிழ் அரசியல்வாதியளும் சந்தோசப்படுவினம் கண்டியளோ.

உதுமட்டுமே உங்க வெளிநாடுகளிலை புலியளின்ரை பில்லியன் கணக்கான சொத்துகளை ஆட்டையப்போட்டு வைச்சிருக்கிற போலித்தமிழ்த் தேசிய வாதியள், உவங்கள்தான் இஞ்சை உள்ள போலித்தமிழ்த் தேசியவாதியளுக்கு காசு அனுப்பிச் சனத்தை உசுப்பேத்திறவங்கள், பேந்தென்ன பிரபாகரன் உயிரோடை இருக்கிறார் அவர் வந்ததும் நாங்கள் உந்த சொத்துக்களை அவரிட்டைக் குடுக்கப்போறம் எண்டு சொல்லி அனுபவிக்க நல்ல சந்தர்ப்பம் எண்டு சந்தோசப்படுவாங்கள். சரி.. சரி.. எனக்கு கொஞ்சம் வெளியிலை போற வேலை கிடக்கு எண்டபடியால இந்தக் கடுதாசியை இதோட நிப்பாட்டிறன் பேந்து ஒரு கடுதாசி ஆறுதலா எழுதிறன் கண்டியளோ..

பிற்குறிப்பு : முந்திப்படகுப் போராட்டம் நடத்தின மாதிரி இப்பவும் நடத்த விருப்பம் எண்டால் வயசு போன நேரம் படகுகளைத் தேடி அலைய வேண்டாம். உங்க ஒவ்வொருநாளும் எங்கட கடக்கரைக்கு தமிழ்நாட்டு மீன்பிடிகாறரின்ரை றோலர்கள் நூற்றுக் கணக்கிலை மீன் பிடிக்க வருகுது. அதிலை ஒண்டு ரெண்டிலை நீங்களும் உங்கடை ஆக்களும் ஏறினியள் எண்டால் அவங்கள் உங்களைக் கொண்ணந்து இஞ்சை இறக்கி விடுவாங்கள். மற்றது உங்களோடை மறக்காம காசியானந்தனையும் கூட்டியாங்கோ அப்பதான் பயணக்களைப்புத் தெரியாமல் இருக்க அவர் பாடிக்கொண்டு வருவார்.

நன்கொடை மருந்துகள் விற்கப்படும் துயரநிலை

ஹேமந்த லியனபத்திரன

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியின் மத்தியில் மருந்துகளுக்கான தட்டுப்பாடு அதிகரித்து வருவதுடன், அவற்றுக்கான விலையும் உச்சத்தைத் தொட்டுள்ளது. அதனால், மருந்துகளை பெற்றுக்கொள்வதிலும் மக்கள் பெரும் அசௌகரியத்தை சந்தித்திருக்கிறார்கள். அத்தியாவசிய மருந்துகளை விட புற்றுநோய்க்கான மருந்துகளின் விலை மிக அதிகமாகும். அவற்றுக்கான தட்டுப்பாடும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

மஹரகம நகரை நாட்டிலுள்ள அனைவரும் அறிந்துவைத்திருப்பதற்குப் பிரதான காரணம், தேசிய புற்றுநோய் மருத்துவமனை இந்த

பிரதேசத்தில் அமைந்திருப்பதாலாகும். 1956ஆம் ஆண்டு 10 சிகிச்சைப் பிரிவுகளுடன் ஆரம்பமான மஹரகம அபேக்ஷா புற்றுநோய்க்கான மருத்துவமனை, இன்று பெரும் எண்ணிக்கையிலான கட்டடங்களுடன் இயங்கிவரும் நாட்டிலுள்ள மிக பெரிய புற்றுநோய்க்கான மருத்துவமனையாகும். இரண்டாயிரம் பேருக்கும் அதிகமானோர் தற்போதுவரையில் அங்கு சிகிச்சைபெற்று வருகிறார்கள். மஹரகம பிரதேசத்தில் இந்த மருத்துவமனை பாரியளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தாலும் பல வருடங்களாகவே இங்கு பல்வேறு குறைபாடுகளும் ஊழல்களும் இடம்பெறுவதாக தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் தேடிப்பார்க்க நாங்கள் அபேக்ஷா மருத்துவமனைக்குச் சென்றிருந்தோம். இந்த மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் சகலரும் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் வருகின்றார்கள் என்பதை அறிந்துகொண்டோம். இதனிடையே அங்கு சிகிச்சைபெறும் நோயாளர்களுடன் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பும் கிடைத்தது.

பாணந்துறை பிரதேசத்திலிருந்து வந்த பெண்ணொருவர், "எனக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோய் இருக்கிறது. அதற்கு கீமோதெரபி என்றழைக்கப்படும் மருந்து 600 மில்லிகிராம் தேவைப்படும். அந்த மருந்து வைத்தியசாலையில் இல்லை என்று கூறுகிறார்கள். வெளியில் பெற்றுக்கொள்ளுமாறு கூறுகிறார்கள். என்ன செய்வதென்று புரியவில்லை?" என்று குறிப்பிட்டார்.

"தற்போது என்ன செய்வது? மருந்தை பெற்றுக்கொள்ள முடியுமா?" என்று நாங்கள் அவரிடம் கேட்டிருந்தோம்.

அதற்கு அவரின் பதில், "இங்கு கடமையாற்றும் உதவியக எனவரின் தொலைபேசி இலக்கமொன்றை கொடுத்திருக்கிறார்கள். அவருக்கு அழைப்பு விடுத்து மருந்துப் பெற்றுக்கொள்ளுமாறு குறிப்பிட்டார்கள். விலையும் குறைவு என்றும் கூறினார்கள்" என்றமைந்தது.

நாங்கள் அந்த இடத்துக்குச் சென்றதும், எங்களின் தேடுதல் நடவடிக்கையின் முதல் கட்டமாக மருந்து விநியோகத்தர் குறித்த இடத்துக்குப் பயணித்தோம். எங்களுக்கும் மருந்து கொள்வனவு செய்யவேண்டியுள்ளதாக தெரிவித்து உதவிய என்பவரின் தொலைபேசி இலக்கத்தை குறித்த பெண்ணிடமிருந்து பெற்றுக்கொண்டோம்.

கர்ப்பப்பை வாய் புற்றுநோயாளர் ஒருவருக்கு அவசியமான கீமோதெரபி 600 மில்லிகிராம் அவசியமாக இருப்பதாக தெரிவித்து, அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட கைபேசி இலக்கத்துக்கு அழைப்பெடுத்திருந்தோம். உண்மையாக அவரிடம் மருந்து இருக்கிறதா என்பதை அறிந்துகொள்வதற்காகவே அழைப்பெடுத்திருந்தோம். எங்களின் அழைப்புக்கு மகிழ்ச்சிகரமான தகவலே கிடைத்திருந்தது. 22 ஆயிரம் ரூபாவுக்கு 600 மில்லி கிராம் காபோ பிலட்டின் மருந்தைப் பெற்றுக்கொடுக்க உதவுங்க இணக்கம் தெரிவித்தார்.

மருந்து தேவையென்றால் பணத்தை எடுத்துக்கொண்டு மஹரகம அபெக்ஷா மருத்துவமனைக்கு அருகில் வருமாறு அவர் அழைப்பு விடுத்திருந்தார்.

அதன்போது, உண்மையாக இது ஊழல் செயற்பாடா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான அவகியம் எங்களுக்கு ஏற்பட்டது. உதவுங்க என்பவர் யார் என்பதை தேடிக் கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம். மிஸ்ஸக உதவுங்க என்பவர் மஹரகம அபேக்ஷா மருத்துவமனையில் மருந்தாளராக கடமையாற்றும் நபராவார். அவருக்கு எந்தவொரு வகையிலும் மருந்து வகைகளை

மஹரகம அபேக்ஷா புற்றுநோய் மருத்துவமனையில் வெளியான அதிர்ச்சித் தகவல்

சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டபோது

தன்னிடம் வைத்திருக்கவோ விற்பனை செய்யவோ முடியாது என்பதையும் உறுதிப்படுத்திக்கொண்டோம்.

பாதாள குழு உறுப்பினர்கள் இந்த வியாபாரத்தின் பின்னணியில் இருக்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டமையால் மனிதாபிமானமற்ற இந்த ஊழலை நிறுத்த வேண்டும் என்பதால், இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினரின் உதவியைப் பெற்றுக்கொண்டோம். இலஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைப் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நுவன் அசங்கவுக்கு தெரியப்படுத்தியதையடுத்து, அவர் குறித்த வியாபாரிகளை கைதுசெய்ய உத்தரவு கற்றிவளைப்புப் பிரிவினரை கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்திருந்தார். அதற்கமைய பாதுகாப்புப் பிரிவினரின் உதவியுடன் 600 மில்லிகிராம் காபோபிலட்டின் மருந்தை கொள்வனவு செய்வதற்கு வருவதாக அறிவித்து உதவுங்கவுக்கு அழைப்பெடுத்திருந்தோம்.

அதற்கு அவர் மஹரகம மருத்துவமனைக்கு அருகில் இருக்கும் தனியார் பாடசாலைக்கு அருகில் வந்து பணத்தை வெறுத்தி மருந்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்திருந்தார். இலஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகளினால் இலக்கம் அடையாளப்படுத்தப்பட்ட 22 ஆயிரம் ரூபா பணத்தை எடுத்துக்கொண்ட, உளவாளியொருவருடன் இந்த மருந்து வியாபாரத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைதுசெய்ய அவ்விடத்துக்கு வருகை தந்திருந்தனர்.

மஹரகம பிரதேசத்துக்கு வந்த அதிகாரிகள், இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருந்த திட்டத்தின் அடிப்படையில் குறித்த தனியார் பாடசாலைக்கு அருகில் காத்திருந்தார்கள். பாதுகாப்புப் பிரிவினரால் அனுப்பிவைக்கப்பட்ட உளவாளி, வியாபாரியான உதவுங்க என்பவருக்கு பணத்தைக் கொடுத்து 600 மில்லிகிராம் காபோபிலட்டின் மருந்து அடங்கிய இரண்டு பொதிகளை பெற்றுக்கொண்டதும், உளவாளியுடன் இருந்த விசாரணை அதிகாரியினால் வழங்கப்பட்ட சமிக்ஞையின் பிரகாரம் அங்கிருந்த அதிகாரிகள் சந்தேகநபரை கைதுசெய்ய நடவடிக்கை எடுத்திருந்தனர். அதன்பின்னர் சந்தேகநபரை அழைத்துக்கொண்டு, சந்தேகநபரின் இல்லத்துக்கு சென்றிருந்தார்கள்.

குறித்த இல்லத்தின் இரண்டு அறைகளை பரிசோதனைக்கு உட்படுத்திய அதிகாரிகள் திகைத்துப்போகிறார்கள். பல்வேறு வகைகளைச் சேர்ந்த மருந்துகள், வையுறைகள், கெனிடைசர், கேலைன் வகைகள் என்பன அந்த இரு அறைகளிலும் களஞ்சியப்படுத்துப்பட்டிருந்ததை அவதானிக்கிறார்கள். ஒரு அறையிலிருந்த அலுமாரியொன்றில் வெவ்வேறாக பிரித்து மறைத்துவைக்கப்பட்டிருந்த ஐந்து இலட்ச ரூபா பணத்தையும் அதிகாரிகள் கைப்பற்றியிருந்தார்கள்.

அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த மருந்துகளில் அரச இலச்சினை பொறிக்கப்பட்டிருந்ததுடன், ஒருசில மருந்து வகைகள் காலாவதியாகியிருந்ததையும் அதிகாரிகள் அவதானித்தனர். அதனைத் தொடர்ந்து அவரின் இல்லத்தை முழுமையாக பரிசோதனைக்கு உட்படுத்தியதன் பின்னர் கைப்பற்றப்பட்ட மருந்துகளையும் சந்தேகநபரையும் அழைத்துக்கொண்டு மீண்டும் அபேக்ஷா மருத்துவமனையை நோக்கி அதிகாரிகள் சென்றார்கள்.

மருத்துவமனை வளாகத்தில் அந்த மருத்துவமனையின் பணிப்பாளர் வைத்தியர் அருண ஜயசேகர உள்ளிட்ட குழுவினரிடம் சந்தேகநபரான மிஸ்ஸக உதவுங்க மற்றும் மருந்துகளையும் அடையாளம் காணும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். இந்த அடையாளம் காணும் செயற்பாட்டின்போது குறித்த மருந்துகள் அபேக்ஷா மருத்துவமனைக்குரியது என்பது உறுதியாகிறது. அதன்பின்னர் சந்தேகநபர் இலஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இவ்வாறு மஹரகம மருத்துவமனையில் இடம்பெற்ற மருந்து மோசடி தொடர்பான கற்றிவளைப்பு சம்பவம் நிறைவுக்கு வருகிறது.

இருந்தபோதும், மருத்துவமனைக்குள் இடம்பெறுகிட்டமிட்டதாக குறிப்பிடப்படும் பல்வேறு ஊழல் செயற்பாடுகள் குறித்தும் அந்த மருத்துவமனையின் வளாகத்தில் வைத்து அறிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. இதுவரையில், அந்த மருத்துவமனையிடம் இருந்து புற்றுநோய் தடுப்பு மருந்துகளை வகைப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் இரண்டு இயந்திரங்கள் காணாமல் போயுள்ளதாகவும் தகவல்கள் உறுதியாகின.



3 கோடி ரூபா பெறுமதியான இவ்விரு இயந்திரங்களும் பயன்படுத்த முடியாது என்று ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், அவ்விரு இயந்திரங்களும் மருத்துவமனையின் வளாகத்திலிருந்து காணாமல்போயுள்ளன. இந்த இயந்திரங்கள் தொடர்பில்



அறிக்கை புத்தகத்தில் போலி ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளமையும் ஆதாரங்களுடன் நிரூபணமாகியது.

சிகிச்சைக்காக தூர பிரதேசங்களிலிருந்து இந்த மருத்துவமனைக்கு வரும் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகுவதாகவும், மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்காக பல மணிநேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலையும் இதன்போது உறுதியானது. மருந்து பெறுவதற்காக அமைக்கப்பட்டிருந்த இரு பிரிவுகள் மூடப்பட்டுள்ளமையினாலேயே இந்த நிலை உருவாகியுள்ளது.

இதுதொடர்பில் உயர் அதிகாரிகளிடம் வினவியபோது, ஊழியர்களின் பற்றாக்குறையினால் குறித்த பிரிவுகளை மூடிவிட்டதாக கூறினார்கள். ஆனால், போராட்டத்தில் வலந்துகொள்ளாத ஊழியர்களை இடமாற்றம் செய்துவிட்டு, மருத்துவமனையில் ஊழியர்கள் இல்லை என்று கூறுவதாக அந்த மருத்துவமனையின் சிற்றூழியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இந்த மருத்துவமனையின் வளாகம் பொழுதுபோக்குக்காக பயன்படுத்துவதையும் நாங்கள் உணர்ந்துகொண்டோம். எந்தவொரு ஊழியரும் தமக்கு ஏற்ற

மருந்து விற்பனைசெய்யப்பட்டமைக்கான கணக்குச் சீட்டு

நேரத்தில் மருத்துவமனைக்கு வரவும், பின்னர் தேவைக்கேற்ப வெளியேறவும் முடியும். மேற்குறிப்பிட்ட சம்பவத்தில் கையெய்யப்பட்ட மருந்தாளரும் தனது கடமை நேரத்திலேயே இந்த மருந்து மோசடி வியாபாரத்தை முன்னெடுத்திருக்கிறார்.

அம்பிபியுலன்ஸ் உதவியாளர்களின் அலைக்கு அருகில் சூதாட்டம் மேற்கொள்ளும் இடமொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சூதாட்டச் செயற்பாடு மருத்துவமனையின் பாதுகாப்பு அதிகாரிகளின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எந்தவொரு ஊழியரும் அவர்களுக்கு ஏற்ற நேரத்தில் சூதாட்டத்தில் ஈடுபடுவதற்கான சூழல் இந்த மருத்துவமனையின் வளாகத்தில் உருவாக்கப்பட்டிருந்ததையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

மதுபான பிரியர்கள் மற்றும் கஞ்சா பிரியர்களின் இராச்சியமாக மாறியுள்ள இந்த மருத்துவமனையின் வளாகத்துக்குள் மோட்டார்சைக்கிள் திருட்டு சம்பவங்களும் பதிவாகியுள்ளன. அண்மையில், கதிர்வீச்சு பிரிவில் கடமையாற்றும் ஊழியர்கள் சிலரின் பிரத்தியேக கார்களில் இருந்த எரிபொருள் திருடப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இந்த அனைத்து பிரச்சினைகளுக்கும் அப்பால் வியாபாரத்தை அடிப்படையாகக்கொண்ட இந்த மாபியா உயர்ந்ததாகக் கருதப்பட்டதால் இது தொடர்பில் பேசுவதற்கு யாரும் முன்வந்திருக்கவில்லை. யாராவது இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தால் அவர்களுக்கு எதிராக சூழ்ச்சிசெய்து அவர்களை தொழிலிருந்து வெளியேற்றுமளவுக்கு இந்த மாபியா இங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளதாக அங்கிருந்த சேவையாளர் ஒருவர் எங்களிடம் தெரிவித்தார்.

மருத்துவமனைக்கு வரும் நன்கொடைகளை பெற்றுக்கொள்வதற்கு முறையான திட்டங்கள் எதுவும் இருக்காமை இன்னுமொரு பிரச்சினையாக மாறியுள்ளதையும் அறிந்துகொண்டோம். அண்மையில், இந்த மருத்துவமனைக்கு 10 ஆயிரம் முட்டைகள் நன்கொடையாக கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் அரைபங்கு பழுதான நிலையில், வீசப்பட்டுள்ளன. மிகுதி முட்டைகளுக்கு என்னவானது என்பது யாருக்கும் தெரியாது.

இந்த நன்கொடைகளைப்

பெற்றுக்கொள்வதற்கு சரியான திட்ட முறையொன்றை அமைத்துக் கொடுக்குமாறு மருத்துவமனை சேவையாளர்கள், உயர் அதிகாரிகளிடம் பல சந்தர்ப்பங்களில் கோரியிருந்தபோதும் இதுவரையில் அதற்கு எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை என்பது சேவையாளர்களின் குறைச்சாட்டாக இருக்கிறது. தூர பிரதேசத்திலிருந்து வரும் நோயாளர்கள் மருந்துக்காக வரிசையில் காத்திருப்பவர்களின், வரிசையின் பின்னால் இருப்பவர்கள் முன்னால் சென்று மருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமெனில் அங்கிருந்த சேவையிலிருக்கும் பணியாளர் ஒருவருக்கு 300 – 500 ரூபா பணம் வெறுத்தினால் முன்னால் சென்று மருந்தை பெற்றுக்கொள்ள முடியும். குறித்த நோயாளர்கள் தமது உறவினர்கள் என்று குறிப்பிட்டு இந்த செயற்பாட்டை முன்னெடுத்து வந்திருக்கிறார்கள். இதனை மருத்துவமனையின் வைத்தியர்கள் அறிந்திருந்தாலும், கவனத்திற்கொள்வதில்லை.

மருத்துவமனையின் உயர் அதிகாரிகள் என்று குறிப்பிட்டுக்கொள்பவர்கள் முதல் மருத்துவமனையின் மதிலுக்கு வெளியில் இருப்பவர்கள் வரை இந்த மோசடியை வலையமைப்பாக முன்னெடுத்து வந்திருக்கிறார்கள். அபேக்ஷா மருத்துவமனையில் இடம்பெறும் இந்த மோசடி நிலமை குறித்து முறையான விசாரணைகளை முன்னெடுக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

இந்த சகல ஊழல் சம்பவங்கள் தொடர்பிலும் உடனடி விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் என்ற அடிப்படையிலும் தனிப்பட்ட ரீதியில் அதிகாரிகளுக்கு ஆலோசனை பெற்றுக்கொடுப்பதாகவும் சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இந்த மருத்துவமனைக்கு வரும் நோயாளர்களின் நம்பிக்கையை சீர்குலைக்கும் மாபியா குழுவினரை அடியோடு அழித்து சிறந்த மருத்துவமனைக் கான சூழலை உருவாக்கிக் கொடுக்குமாறு இங்கு நேர்மையாக சேவையாற்றும் மருத்துவமனை பணியாளர்கள் கோருகிறார்கள். மேலும், பல வருடங்களாக இந்த பிரச்சினையின் மத்தியில் சேவையாற்றியது போதும் என்றும் அவர்கள் ஜனாதிபதியிடம் கோருகிறார்கள்.



எம்.எஸ்.அமீர் ஹுசைன்

மக்களை நெருக்கடிக்குள் தள்ளும் மின்கட்டண அதிகரிப்பு வாபஸ் பெறப்பட வேண்டும்

மின்சாரக் கட்டண அதிகரிப்பா அல்லது 06 மணித்தியால மின்சாரத் துண்டிப்பா என்று நடத்தப்பட்டுவந்த போராட்டத்தில் மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் வெற்றிபெற்றுள்ளார். ஏற்கனவே ஜனவரி முதல் 06 மணித்தியாலங்களுக்கு மேல் மின்சாரத் துண்டிப்பு நடைபெறும் அல்லது 60 வீதம் முதல் 65 வீதம் வரையான கட்டண உயர்வொன்றை செய்யவேண்டிய நிலை ஏற்படலாம் என்று மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர 2022.12.27ஆம் திகதி எச்சரிக்கை விடுத்திருந்தார். அதன்படி 2022 பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி 66 வீத மின்சாரக் கட்டண உயர்வுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த மின்சாரக் கட்டண உயர்வு காரணமாக ஏற்கனவே பொருளாதார நெருக்கடியாலும் அத்தியாவசியப் பொருட்கள், சேவைகளின் விலை உயர்வாலும் பாதிக்கப்பட்டு வாழ வழி தெரியாது தினட்டாடும் மக்களை அரசாங்கம் மேலும் நெருக்கடியில் தள்ளியிருக்கின்றது.

இந்தக் கட்டண உயர்வு அமைச்சரவை அங்கீகாரத்துடன் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி ஜனக் ரத்நாயக்கா வெளிநாடு சென்றிருந்த நேரத்தில் ஆணைக்குழுவின் இரண்டு அதிகாரிகளை ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்து அங்கீகாரம் பெறப்பட்டே செய்யப்பட்டிருப்பதாக குற்றச்சாட்டுகள் கிளம்பியிருக்கின்றன. மின்சாரக் கட்டணத்தை 66 வீதத்தால் உயர்த்த பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அங்கீகாரம் வழங்காவிட்டால் ஜனவரி முதல் நீண்ட நேரம் மின்வெட்டு வரும் என்று கடந்த 2022 டிசம்பர் 27ஆம் திகதி அமைச்சர் நாட்டு மக்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் தொனியில் அறிவிப்பு செய்திருந்தார்.

இந்த வேண்டுகோளை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் தைரியமாக நின்று நிராகரித்ததோடு, அமைச்சரோடு நாட்டு பொதுமக்களுக்காக போராட்டம் நடத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டார். இவ்வாறு கட்டண உயர்வுக்கு அங்கீகாரம் வழங்கினால் ஜனவரி மாதம்முதல் மின்சார வெட்டு இருக்காது என்றும் அப்போது அமைச்சர் அறிவித்திருந்தார். இவ்வாறானதொரு பின்னணியில் க.பொ.த. (உ/த.) பரீட்சைகள் நடைபெறுகின்றதென்றும் பார்க்கமல் கருணையே இல்லாமல் மின்சாரத் துண்டிப்பு செய்யப்பட்டது.

அத்துடன், பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கும் மின்சக்தி அமைச்சருக்கும் இடையில் முரண்பாடு உருவாகியது. இதற்கிடையில் ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினரான மொஹான் சமரநாயக்க அரசாங்கத்தின் போக்கிற்கு அல்லது அமைச்சருக்கு சாதகமான நிலையை ஏற்படுத்தும் வகையில் ஆணைக்குழுவின் தலைவர் தன்னிச்சையான போக்கில் செயற்படுவதாகவும் அவர் எடுக்கும் தீர்மானங்களை ஏனைய ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அறிவிப்பதில்லை என்றும் முரண்பாடான தகவல்களை வெளியிட்டார்.

இந்தத் தகவல்களை அடிப்படையாக வைத்து அமைச்சர் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை கண்டித்துவந்த நிலையில், ஆணைக்குழுவின் தலைவரை பதவி நீக்கும் முயற்சிகளையும் மேற்கொண்டு வந்தார். இவ்வாரம் அவர் வெளிநாடு சென்றிருந்த சந்தர்ப்பத்தில் இந்த மின்சார அதிகரிப்பு செய்யப்பட்டிருக்கின்றது. அத்துடன், கோட்டை மஜிஸ்ரேட்டின் அனுமதி பெற்று அவரது ஆணைக்குழு அலுவலகத்திற்கும் கடந்த வியாழனன்று சீல்வைத்து மூடப்பட்டிருக்கின்றது.

அமைச்சர் இந்தக் கட்டண அதிகரிப்பு பற்றி தெரிவிக்கையில், இவ்வாறாக மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை ஈடுசெய்ய கட்டண அதிகரிப்பு செய்யப்படவில்லை. அடைக்கவேண்டிய கடனை அடைக்கத்தான் அதிகரிப்பு என்று அறிவித்துள்ளார். அத்துடன், இனிமேல் மின்சார வெட்டு இல்லை என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே நடைமுறையிலிருந்து வந்த மின்சாரக் கட்டணத்தை 2022 ஒகஸ்ட் 10ஆம் திகதியிலிருந்து 75 வீதத்தால் அதிகரிக்க பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு அங்கீகாரம் வழங்கியது. மீண்டும் 06 மாத கால இடைவெளியில் 66 வீத மின்சார கட்டண அதிகரிப்பை மக்கள் எவ்வாறு தாங்கிக்கொள்வார்கள் என்பதுதான் பிரதான பிரச்சினையாக அமைகின்றது. 2013ஆம் ஆண்டு மின்சாரக் கட்டணம் 25 வீதத்தால் அதிகரிக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டிலிருந்து 13 வருடங்களில் இரண்டு முறை மக்களால் தாங்கிக்கொள்ள முடியாதபடி மின் கட்டண அதிகரிப்பு செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவிக்கையில், இலங்கை வங்கிக்கு மின்சார சபை 2,200 கோடி (22 பில்லியன்) ரூபாவும் மக்கள் வங்கிக்கு 5,000 கோடி (50 பில்லியன்) ரூபாவும் நிலக்கரி கொள்வனவுக்காக 11,800 கோடி (118 பில்லியன்கள்) ரூபாவும் செலுத்த வேண்டி இருக்கின்றது. அதன்படி மொத்தமாக 19,000 கோடி ரூபா கடனாக இலங்கை மின்சார சபை செலுத்த இருப்பதால் அந்தத் தொகையை ஈடு செய்வதற்காகவே இந்த கட்டண அதிகரிப்பு என்று நியாயம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் எப்படியோ மக்களை நெருக்கடியில் தள்ளி செலுத்தவேண்டிய கடன்களை செலுத்த நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அத்துடன், மக்களை ஏறி மிதித்தாவது ஆட்சியை தக்கவைக்கவும் இருப்பை பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. கடந்த 2019ஆம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட கன்றமுத்தனமான பொருளாதார செயற்பாட்டின் விளைவே இவ்வாறான மக்களை நெருக்கடியில் தள்ளும் நிலையாகும்.

ஆனாலும் மக்களுக்கு இருக்கின்ற பிரச்சினை மின்சாரக் கட்டணத்தை முறையாக செலுத்துவது மட்டுமல்ல. ஏற்கனவே தொடரும் பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் மீள முடியாத பொருளாதாரக் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இவ்வாறான மின்சாரக் கட்டண உயர்வு காரணமாக வீட்டுத் துறையினர், வர்த்தக வாணிப நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் கடுமையாக பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன. அத்த வரிசையில் மின்சாரக் கட்டண உயர்வால் மத வழிபாட்டுத்தலங்களும் இன, மத, வேறுபாடு மேலும் பாரிய நெருக்கடியை சந்திக்கவேண்டி ஏற்பட்டிருக்கின்றது.

மின் கட்டண அதிகரிப்பால் நெருக்கடிக்குள்ளாகும் மத வழிபாட்டுத் தலங்களுக்கு தீர்வாக சூரியசக்தியில் இயங்கும் மின்பிறப்பாக்கிகளை பொருத்துவ தென்றும் அதற்கு குறைந்தபட்சம் மூன்று மாத காலங்களாவது செல்லும் என்றும் இந்திய அரசாங்கம் இவ்வாறான திட்டம் ஒன்றுக்கு கடன் வழங்க முன்வந்திருப்பதால் அந்தக் கடனைப் பயன்படுத்தி சோலா பவர் மின் திட்டத்தை ஆரம்பித்து தீர்வு காண்பதென்றும் அமைச்சர் கூறினார்.

தற்போதைய நிலையில் மின்சாரக் கட்டண உயர்வு காரணமாக உற்பத்திப் பொருட்கள் அனைத்தினதும் விலைகள் மேலும் பல மடங்கு உயர்வடையும் அபாயம் நிலவுகின்றது. ஏனெனில், அனைத்து தொழிற்சாலைகளையும் உணவுப்பொருள் உற்பத்தி நிலையங்களையும் இந்த மின்சாரக் கட்டண உயர்வு பாதித்திருக்கின்றது. அதிலும் குறைந்த வருமானம் பெறும் சுடும்பங்களாக 34 இலட்சம் சுடும்பங்கள் அளவில் இருக்கின்றன. தொடர்ச்சியாக இவ்வாறு அத்தியாவசியப் பொருட்களின் கட்டண அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு உயர்வு என்று அதிகரிப்பே தவிர, எதிலும் குறைவு இல்லை. மக்களுக்கான நிவாரணங்கள் இல்லை.

சாதாரணமாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணப்படுகின்ற அளவிற்கு அன்றாட வாழ்க்கைச் செலவை சமாளிக்க எந்தவிதமான வருமானமோ இல்லாத நிலையில், 54 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழும் நாட்டில் இவ்வாறான விலை உயர்வுகளை எவ்வாறு மக்கள் சமாளிப்பது. குறிப்பாக, தற்போதைய பொருளாதார நெருக்கடியால் அனைத்துப் பொருட்கள் சேவைகளதும் விலைகள் சுமார் 300 வீதம் உயர்வடைந்திருக்கின்றன. மக்கள் வாழ்க்கைப் போராட்டம் நடத்தி வருகின்றனர். பாடசாலை மாணவர்கள், சுழந்தைகள் மத்தியில் போசாக்கின்மை பிரச்சினை ஒருபுறம். எதிர்வரும் பாடசாலை தவணையில் புதிய வகுப்புகள் ஆரம்பிக்கின்றபோது அடுத்த முதலாம் தவணைக்கு பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் கொள்வனவுசெய்ய போகின்றபோதும் அப்பியாசப் புத்தகங்களின் விலைகள் இதே அளவில் உயர்வடைந்துள்ளன. கடந்த வருடம் 600 ரூபாவுக்கு வாங்கிய சப்பாத்து இப்போது 3,000 ரூபாவுக்கு மேல்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கம் இருக்கின்ற நிலையை சமாளித்து மக்களுக்கு ஏதாவதொரு வழியில் நிவாரணங்களை வழங்கி வாழ்க்கைச் செலவை குறைக்க நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்த்தால், நிலைமை படுமோசமடைந்திருக்கின்றது. அரசாங்கத்தின் பொறுப்பாக அமைவது நெருக்கடியில் தத்தளிக்கின்ற மக்களை பாதுகாக்கவேண்டியதாகும். அரசாங்கம் பொருளாதார நெருக்கடியை சந்திக்கின்றது என்ற காரணத்தால் அந்த சுமை முழுவதையும் மக்களின் மேல் சுமத்தி அரசாங்கம் பொறுப்பிலிருந்து நீங்கிக்கொள்ளும் வேலையைதான் மின்சக்தி அமைச்சர் செய்துள்ளார். மாறாக, மக்களை பாதுகாக்கும் கட்டத்திலிருந்து மீட்டெடுக்கும் வேலையை அவர் செய்யவில்லை.

ஆனால், உன்மையான மக்கள் மீது அக்கறையுள்ள அமைச்சர், அரசாங்கம் இப்படியாக பளுவை சுமத்தி மக்களை மேலும் துன்புத்திற்கு உள்ளாக்காமல் மின்சார கட்டண உயர்வை வாபஸ் பெற வேண்டும். செலுத்த வேண்டியுள்ள கடன்களை செலுத்த மாற்று வழிகளை கையாள வேண்டும். முன்னைய ஆட்சியாளர்களால் சூறையாடப்பட்ட சொத்துக்களில் இருந்தே இந்த 19,000 கோடி ரூபாவையும் செலுத்த முடியும். அவற்றை கண்டறிந்து நாட்டிற்கு மீள பெற முயற்சி எடுக்க வேண்டும். பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் இந்த மின்சார கட்டண உயர்வு நடவடிக்கை ஒரு சதித்திட்டம் என்றும் அதனை ஆட்சேபித்து நீதிமன்றம் செல்வதாகவும் அறிவித்துள்ளார்.

அகில இலங்கை சிறு கைத்தொழில்துறை சங்கத்தின் தலைவர் நிருக்ஷ குமார தெரிவிக்கையில், ஹோட்டல்களில் தயாரிக்கப்படும் உணவு வகைகளின் விலைகள் 10 வீதம் அதிகரிக்கும் என்று அறிவித்துள்ளார்.

ஐக்கிய கைத்தொழிலாளர் சங்கத்தின் தலைவி தானிய அபேசேகர தெரிவிக்கையில், இந்த மின்சாரக் கட்டண உயர்வு நாட்டில் கைத்தொழில்துறைகளை பாதிப்பதோடு அதனால் ஏற்படும் விளைவை பொதுமக்களே தாங்கிக்கொள்ள வேண்டி வருவது பெரும் அநீதியாகும் என்று கண்டித்துள்ளார்.

'வெடிமணியம்'

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட செய்திகளை மிக ஆழமாக உற்றுநோக்கி உள்ளே பூந்து ஆராய்ஞ்சால் இலங்கையின் இன்றைய அரசியல் நிலைப்பாடு தெளிவாக புரியும்.

தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கையில் உயிர்ப்பிக்க முடியாது என்று அறிந்த இந்தியா அதன் தலைவரை உயிர்ப்பிக்கும் "நாடகத்தை" பல. நெடுமாறன் மற்றும் கசரி ஆனந்தன் மூலமாக அரங்கேற்றியுள்ளது.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரிக்கும் நிலையில்;

சிறிலங்காவை தனது கட்டுக்குள் வைத்திருக்க இந்திய உளவுத்துறை மூலமாக பல "நாடகங்கள்" இனிவரும் காலங்களில் நிகழக்கூடும்.

ஒட்டுமொத்தமாக ஈழத்தமிழர்களை வெறும் "பகடைக்காய்களாக" இந்தியா பாவித்து தன்னுடைய பிராந்திய வல்லாதிக்க நலனை தக்கவைக்க முயற்சிக்கிறது.

இந்த "சூழ்ச்சி நாடகத்தின்" பின்னணியை அறிந்த ஈழத்தமிழர்களும் புலம்பெயர் தமிழர்களும் மிகத்தெளிவாக இந்தியாவை விட்டு கொஞ்சம் விலத்தியே நிக்கிறார்கள்.

ஆனால்;

இந்தியா மிக அவதானமாக "காய்களை" நகர்த்தி முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிதைத்தது.

அண்மையில் சுமந்திரனும் சாணக்கியனும் சிறிலங்காவின் சுதந்திர தினத்தில் மகாத்மா காந்தி, நேரு வேஷம் போட்டு ஆடிய "தெருக்கூத்தின்" பின்னணி யாழ்ப்பாணத்தில் இருந்த இந்தியன் "எம்பசிக்காரர்தான்" என்டுதான் சனம் கதைக்குது.

இந்தியாவின் கைகளில் உள்ள சிறிலங்காவின் "குழப்படிகளை" கட்டுப்படுத்தும் கயிறுதான் "13ஆம் திருத்தச்சட்டம்"!

அதை இல்லாமல் ஆக்குவதற்குத்தான் ரணில் முயல்கிறார்.

ஆனால், மேலோட்டமாகப் பார்த்தால் ரணில் "13 ஐ நடைமுறைப்படுத்த" போராடுகிறார் எண்டமாதிரித்தான் தெரியும்.

"நான் அதை நடைமுறைப்படுத்தப்போறன் எண்டு சொல்லுறன். நீங்கள் அதை இல்லாமல் ஆக்குங்கோ" இதுதான் ரணிலின் நிலைப்பாடு!

தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் நுள்ளி விடுகிற சேட்டை.

இந்தியாவின்ர நிலைப்பாடு இந்த உப்புச்சப்பில்லாத 13ஆம் திருத்தத்தை எப்படியாவது சிறிலங்கா நடைமுறைப்படுத்த வேணும்.

அதனூடாக மீண்டும் தங்களுடைய "பிடியை" இறுக்கவேணும்.

சீனாவைப் பொறுத்தவரை உந்த "13ஐ" இல்லாமல் செய்யவேணும். அப்பதான் இந்தியாவின் தலையீட்டையும் மூக்கையும் உடைக்கலாம்.

உந்த "சிறிலங்கா-சீனா-இந்தியா" பிச்சல் புடுங்கலில் எங்களின் தலைதான் உருளுது!

இந்தியா மீண்டும் ஒருமுறை ஈழத்தமிழர்களை பகடைக்காய்களாக பயன்படுத்தி தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநாட்ட "தலைகீழாக" நிக்கினம்.

அதன் ஒரு கட்டமாகவே ஈழத்தமிழர்களின் நன்மதிப்பைப்பெற்ற பழ.நெடுமாறன் ஐயாவையும் காசி ஆனந்தனையும் வைச்சு செய்த "நகைச்சுவை நாடகம்"!

ஆனால் தூரதிஸ்டவசமாக இந்த "வதந்தி" இந்திய மற்றும் சிங்கள ஊடகங்களில் முக்கியத்துவம் பெற்ற அளவுக்கு;

ஈழத்தமிழ் மற்றும் புலம்பெயர் ஊடகங்களில் முக்கியத்துவம் பெறவில்லை.

ஈழத்தமிழ் மக்களும் இந்த ஈழ விடுதலைப் போராட்டத்தோடு நெருக்கமாக பயணித்த பல தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்த "வதந்தியை" புறங்கையால் தட்டிவிட்டு தங்கட அலுவலைப் பாத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் பாவம் காசி ஆனந்தன் போன்ற இந்தியாவின் "ஏவலாளிகள்" ஒருசிலர் மாரித் தவளைகள் போல இன்னமும் கத்திக்கொண்டுதான் இருக்கிறார்கள். யாரும் அவர்களின் "அண்டப்புழுகுகளை" நம்பத் தயாரில்லை.

ஆனாலும் மிக மிக அவதானமாக நாங்கள் இருக்கவேண்டிய காலம் வருகிறது எண்டு "அடிமனசு" சொல்லுது.

மீண்டும் ஒரு வன்முறையை எங்கள் மண்ணில் நிகழ்த்தி அதனூடாக இந்தியா குளிர்காய நினைக்கிறது.

தமிழகத்தில் "விடுதலைப் புலிகளை" மீள் உருவாக்கம் செய்யும் நாடகத்தை இனிவரும் காலங்களில் "றோ" செய்யும். இருந்தாலுங்கோ கட்டாயம் அது நடக்கும்.

போலியான நபர்களை உருவாக்கி மீண்டும் புலிகள் உயிர்த்தெழுந்து வந்துவிட்டார்கள் என்டு "பூச்சாண்டி" காட்டுவார்கள்.

இதனால் சிறிலங்காவில் மீண்டும் "ராஜபக்ஷ" தரப்பு பலம்பெறும்.

ஆனால், இலங்கை இராணுவம் மிகத்தெளிவாக "விடுதலைப் புலிகளையும்" அதன் தலைவரையும் இல்லாமல் செய்துவிட்டோம் என்று அடித்துக்கூறுகிறார்கள்.

ஆக;

இந்தியா நிச்சயம் விடுதலைப் புலிகள் மீண்டும் வந்துவிட்டார்கள் எண்டு ஏதாவது "அம்புலிமாமா" கதைகளை அவிழ்த்துவிடுவார்கள்.

மொத்தத்தில் வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவம் வெளியேற வாய்ப்பில்லை. ஆயிக்காரன் அடாத்தா பிடிச்சுவைச்சிருக்கிற வீடுகளும் காணிகளும் அப்படியே அவன் வசம்தான் இருக்கும்.

இராணுவ கெடுபிடிகள் அதிகரிக்கும்.

முன்னாள் போராளிகளை இலங்கை புலனாய்வாளர்கள் வேண்டுமென்றே மீண்டும் "மோப்பம்" விடத்தொடங்குவார்கள்.

இதற்குத்தானே ஆசைப்பட்டீர்கள் கெடுமாறன் ஐயா?

இதுவா உங்களுக்கு வேணும் காசி ஆனந்தன் அண்ணை?

இது ஒருபுறம் இருக்க;

மறுபுறத்தே உள்ளூராட்சி தேர்தல் பெரும்பாலும் திட்டமிட்டதுபோல நடக்க வாய்ப்பில்லைப்போலத்தான் கிடக்கு!

உள்ளூராட்சி தேர்தல்களில் பெரும்பாலும் மொட்டுக்கட்சியும் ரணிலும் பெரும்பான்மையான இடங்களில் வெல்ல வாய்ப்பில்லை என்பதுதான் யதார்த்தம்.

ஆகவே தாங்களாகவே "தலையைக் குடுத்து" வீணா ஏன் சிக்கல் என்டு ரணில் நினைத்திருக்கக்கூடும்.

ரணிலுக்கு இன்னும் கொஞ்சம் கால அவகாசம் எப்படித்தேவையோ அதே கால அவகாசத்தைத்தான் இந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசுக் கட்சியும் எதிர்பார்க்கிறது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கஜேந்திரகுமார் அணியும் தேர்தல் தள்ளிப்போவதைப்பற்றி அலட்டிக்கொள்ளவில்லை. அவையளைப்பொறுத்தவரை உள்ளூராட்சி தேர்தலில் இப்ப இருக்கிற உறுப்பினர்களை காப்பாற்றிக்கொள்வதே பெரும்பாடு.

புதிசா முளைச்சிருக்குற "குத்துவிளக்குகாரரும்" "மான் கட்சியும்"தான் தேர்தலை எதிர்பார்த்து காத்திருக்கினம்.

அவையளைப் பொறுத்தவரை அடுத்த பாராளுமன்றத் தேர்தலுக்கான ஆயத்தப்படுத்தல்தான் இந்த உள்ளூராட்சி தேர்தல்.

ஆனால் சனத்துக்கு இருக்கிற 1008 தலையிடிகளுக்குள் "உள்ளூராட்சித் தேர்தல்" பற்றியோ;

அல்லது...

"வாற கிழமை பிரபாகரன் வாறார்" போன்ற பழ.நெடுமாறன் ஐயாவின் அம்புலிமாமா கதைகளையே காதுகுடுத்து கேக்க நேரமில்லை.

அந்தளாந்தான் சொல்லலாம்.

உள்ளூராட்சித் தேர்தல்...?

அக்கினியான்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான களம் அல்லோலகல்லோலப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில், இந்தத் தேர்தலை தங்களின் பலத்தையும் செல்வாக்கையும் நிரூபிக்கும் தேர்தலாக கட்சிகள் ஒத்திகை பார்க்க முற்படுகின்ற நிலையில், தேர்தலுக்கான தபால்மூல வாக்குச்சீட்டு விநியோகம் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இருந்தபோதிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல், அறிவித்தலுக்கமைய உரிய காலத்தில் நடைபெறும். அது தொடர்பில் அச்சமடைய வேண்டாமென எதிர்க்கட்சி மற்றும் தேசிய கட்சிகள் தங்கள் பிரதேச ரீதியான கட்சி வேட்பாளர்களுக்கு ஊக்கமளித்து வருகிறார்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்ட போட்டி நிலைமைகள் தேசிய கட்சிகளுக்கிடையிலான போட்டியாக தலைகாட்டி நிற்க, மாறாக வடக்கு, கிழக்குப் பிரதேச மன்றங்களுக்கான போட்டி நிலைமைகள், ஒருபுறம் பிரதேச கட்சிகள் தங்கள் மக்களின் செல்வாக்கை பரிசோதிக்கும் போட்டியாகவும், மறுபுறம் தேசிய கட்சிகளின் செல்வாக்கை முறியடித்துக் காட்டும் போட்டியாகவும் எடுத்துக்கொண்டு கட்சிகள் முன்படியடித்துக்கொண்டிருக்கின்றன.

இதற்கிடையில் வேட்பாளர் நியமனம், பெண்களை பட்டியலில் இணைத்துக்கொள்ளல் கட்சிகளோடு கூட்டு முயற்சிகளில் இருக்கின்றன.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் 11 அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளும், 2 சுயேச்சைக் குழுக்களும், மன்னார் மாவட்டத்தில் 16 அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளும், 2 சுயேச்சைக் குழுக்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 23 கட்சிகளும் 18 சுயேச்சைக் குழுக்களும், திருகோணமலை மாவட்டத்தில் 14 அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளும், 8 சுயேச்சைக் குழுக்களும் என்ற அடிப்படையில் திருமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், இலங்கை தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன, தேசிய மக்கள் சக்தி, தமிழர் ஜனநாயகக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜ கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஈரோஸ் ஜனநாயகக் கட்சி என ஏகப்பட்ட கட்சிகள் போட்டியிடுகின்றன.

இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 8 மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய 17 மாவட்டங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, சுதந்திர மக்கள் கூட்டணி என தேசிய கட்சிகள் தங்கள் மக்கள் செல்வாக்கைப் பரிசோதிக்க களம் இறங்கியிருக்கும் நிலையில், வடக்கு, கிழக்கில் பிரதேச செல்வாக்கை நிலைநிறுத்தும் போட்டியாக தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், அகில இலங்கை தமிழர் மகா சபை, ஜனநாயக தமிழத் தேசியக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி என்பன களத்தில் இறங்கியுள்ளன.

ஓப்பீட்டுரீதியாக பார்ப்பின் ஏனைய மாவட்டங்களைவிட வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மாவட்டங்களில் போட்டியிடும் கட்சிகளின் போட்டித்தன்மை அதிகமாக காணப்படுகிறதென்பதற்கு இங்குள்ள மாவட்டங்களில் போட்டியிடும் கட்சிகளின் எண்ணிக்கையும், சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கையும் அதிகமாகவே காணப்படுகின்றன. இவ்வாறான போட்டி நிலைமைகள் மூலம் பலமிக்கதொரு ஆட்சியை அமைக்கும் பெரும்பான்மையை எந்தவொரு கட்சியும் பெறமுடியாத சூழ்நிலையையும் அரைகுறை பிரசமாக ஆட்சி கலைந்துபோகும் நிலையையுமே ஏற்பட வாய்ப்பிருக்கிறதென்பதை இலகுவாக புரிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது.

இதற்கு சிறந்த உதாரணமாக காட்டப்படக்கூடியது யாழ். மாநகர சபையின் ஆட்சி மாற்றம். தமது முழுமையான காலத்தை பூர்த்திசெய்யமுடியாத நிலையும் வரவு-செலவுத் திட்டத்தைக்கூட நிறைவேற்ற முடியாத அவலத்தையும் யாழ் மாநகரசபை கொண்டுள்ளது என்பது அறியப்பட்ட விடயம். இதேபோன்றே திருகோணமலையிலுள்ள பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் ஆட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைத்துக்கொண்டாலும் தனது முழுமையான ஆட்சிக்காலத்தைக் கொண்டுசெல்ல முடியாத நிலையில் கூட்டமைப்பின் வசமிருந்த பட்டணமும் சூழலும் பிரதேச சபை கடந்த 2021ஆம் ஆண்டு பொதுஜன பெரமுன கைவசம் மாறியது ஓர் அவகௌரவமாக பார்க்கப்பட்டது. அண்மைக்காலத்தில் வடக்கு, கிழக்கிலுள்ள குறிப்பாக கூட்டமைப்பின் வசமுள்ள பல சபைகளுக்கு இந்த அவலம் ஏற்பட்டுக்கொண்டதை பல சபைகளின் இழப்புகள் எடுத்துக்காட்டுவனவாக இருக்கின்றன.

ஏலவை எவ்வாறிருந்தபோதும் உள்ளூராட்சித் தேர்தல் என்பது ஓர் ஆட்சிமாற்றத்தை கொண்டுவரப் போவதில்லை என்பது தெளிவாக கட்டிக்காட்டப்படுகிற விடயமாக இருந்தாலும் மாகாண சபைத் தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல ஆகியவற்றுக்கான ஒத்திகையாக கருதப்படுவதாலோ அல்லது எதிர்பார்க்கப்படுவதாலோ கட்சிகள் முன்படியடித்துக்கொண்டு இத்தேர்தல் களத்தை பரீட்சார்த்தக் களமாக எடுத்துக்கொண்டு போட்டியில் இறங்கியுள்ளன.

வடக்கு, கிழக்கில் இன்றைய சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனக்கான செல்வாக்கை இழந்துவருகிறது. வாக்குச் சாவடி ஏற்பாட்டுள்ளது என்பதை நிரூபிக்கவேண்டுமென்ற தோரணையிலும் மக்கள் மத்தியில் கூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியை வெளிக்கொண்டுவர வேண்டுமென்ற தோரணையில் பல தமிழக் கட்சிகள் களங்கண்டிருக்கின்றன. இத்தேர்தலை பயன்படுத்த முயல்கிறது. ஆனால், கூட்டமைப்போ வீழ்ந்தாலும் மீசையில் மண்படவில்லை என்ற போக்கில் பெருந்தொகையான சபைகளை நாம் கைப்பற்றுவோமென பாராளுமன்ற உறுப்பினராகிய சுமந்திரன் ஏனைய எதிர்நிலைக் கட்சிகளுக்கு சவால்விட்டு வருகிறார். இதேபோன்றுதான் தெற்கில் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் லங்கா சமாஜ கட்சிகள் தமது மக்கள் செல்வாக்கை மீண்டும் நிலைநிறுத்திக் காட்டுவதுடன், அடுத்த பாராளுமன்றை தமது வசமாக்கிக்கொள்ளும் ஓர் உத்தியாக இத்தேர்தலை பயன்படுத்தப் பார்க்கிறார்கள். கடந்த 2018ஆம் ஆண்டும், 2020ஆம் ஆண்டும் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியவற்றில் வெற்றிபெற்று ஆட்சியை அமைத்துக்கொண்ட பொதுஜன பெரமுன கடந்த வருடம் ஏற்பட்ட விழுக்காட்டை சரிசெய்து மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றி விடவேண்டும் என்ற அதீத கற்பனையில் மிதக்கும் காரணத்தினால் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷ, தாமரை மொட்டு சின்னத்தில் 252 இடங்களில் போட்டியிடுகிறோம். பெரும்பான்மை ஆசனங்களை நிச்சயம் கைப்பற்றுவோம் என அடித்துக் கூறியிருப்பதுடன், வடக்கில் வீணை சின்னத்திலும், கிழக்கில் படகு சின்னத்திலும் போட்டியிட்டு வென்று காட்டுவோம் என்று உறுதிபட கூறியுள்ளார். இதே கருத்தை முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் பகிரங்கமாக கூறியிருப்பது கவனத்துக்குரிய செய்தியாகும்.

இதேவேளை, வடக்கு, கிழக்கிலும் அதற்கு வெளியேயும் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் வேறுவிதமான உத்திகளைக் கையாளும் ஒரு தேர்தலாக இத்தேர்தல் காணப்படுகிறது என்பதற்கு தேர்தலில் வெற்றிபெறும் சூட்சுமம் அனைத்தையும் கைக்கொண்டு முஸ்லிம் கட்சிகள் வேட்பாளர்களை களமிறக்கியிருப்பதுடன், வெற்றியையே நோக்காகக்கொண்டு முஸ்லிம் கட்சிகள் தனித்தும் ஐக்கிய மக்கள் சக்தியுடனும் இணைந்தும் சில பிரதேசங்களில் மறைமுகமாக பொதுஜன பெரமுனவுடன் இணைந்தும் தேர்தலில் குதித்துள்ளதுடன், தங்கள் வெற்றியை உறுதிசெய்யும் வகையில் அதிகாரத்தைப் பெறுக்கொள்ளவேண்டும் என்ற ஒரே நோக்கில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களை இத்தேர்தலில் வெள்ளோட்டம் விட்டிருப்பது ஆச்சரியத்தை தருகிற விடயமாகக் காணப்படுகிறது.

கட்சிகள் இந்தத் தேர்தலை தங்கள் அடுத்தகட்ட வெற்றிக்கான வெள்ளோட்டமாக அல்லது ஒத்திகையாக எடுத்துக்கொண்டு பந்தய திடலுக்கு வந்திருந்தாலும் தேர்தல் நடத்தப்படுமா நடத்தப்படாதா மறுபுறம் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா, செய்யாதா என்பது சர்ச்சைக்குரிய விவகாரமாக அனைத்து தரப்பினராலும் பார்க்கப்படுகிறது. பொருளாதார நெருக்கடிகள், அரசியல் நெருக்கடிகள் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து நாட்டையும் அரசாங்கத்தையும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்ற நிலையில், உலக நாடுகளுக்கு ஒப்புக்கொடுக்கும் நோக்கத்தோடும் தன்னையொரு தராமான ஜனநாயகவாதி என உலக நாடுகளுக்கு காட்டவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொண்டு தேர்தலை நடத்த ஏற்பாடுகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைத்தாலும் தேர்தலை நடத்துவதில் தள்ளாட்டங்களும் தளம்பல்களும் காணப்படுவதை அவதானிக்கின்றோம்.

அரசாங்கம் ஒரு திசையிலும், தேர்தல் ஆணைக்குழு இன்னொரு திசையிலும், திறைசேரி மற்றொரு திசையிலும் பயணித்துக்கொண்டிருப்பதனால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு ஏற்பவோ உத்தரவாதத்துக்கு அமையவோ தேர்தலை நடத்த முடியாமல் மேற்படி மூன்று தரப்பினரும் திண்டாடிக்கொண்டிருப்பதை அவதானிக்கிறோம். தேர்தல் ஆணைக்குழுவோ உச்சநீதிமன்றுக்கு தேர்தலை நடத்துவோம் என உத்தரவாதம் அளித்தபோதும் நிதி விடுவிப்பின்மை காரணமாக தேர்தலுக்குரிய ஆவணங்களை அச்சிடுவதற்கோ வாக்குச்சீட்டுகளை அடிப்பதற்கோ முடியாமல் திண்டாடும் நிலை காரணமாக எதிர்வரும் 22, 23, 24ஆம் திகதிகளில் நடத்தவேண்டிய தபால்மூல வாக்களெடுப்பை காலவரையறையின்றி ஒத்திவைத்திருப்பதாக அறிவித்திருக்கிறது.

6 இலட்சத்துக்கு அதிகமானவர்கள் தபால்மூம் வாக்களிக்க விண்ணப்பித்து தகுதி பெற்றிருந்தபோதிலும் அந்த முதல்கட்ட நடவடிக்கைகளை தேர்தல் ஆணைக்குழுவினால் நடத்த முடியாமல் போய்விட்டது. வேட்புமனுத் தாக்கல் முடிந்த தினமே எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி தேர்தல் நடத்தப்படுமென்று தேர்தல் ஆணையகம் அறிவித்திருந்தும் முதல் கோணல் முற்றும் கோணல் என்பதுபோல் தபால்மூல வாக்குச்சீட்டு விநியோகம் மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இது நடைபெறாமல் ஏனைய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது என்பது யாவரும் அறிந்ததே. அதுமட்டுமன்றி வாக்குச்சீட்டுகள் மற்றும் வாக்கெடுப்பு நிலைய ஆவணங்கள் தேர்தல் நிர்வாக ஒழுங்குகள் என்பவையெல்லாம் ஒழுங்குபடுத்தப்படாத நிலையில் தேர்தலை குறித்த 9ஆம் திகதி நடத்துவது என்பது ஆகாத காரியம்.

திறைசேரியோ இதுவரை எந்தவொரு பணத்தையும், தேர்தல் திணைக்களத்துக்கு விடுவிக்கவில்லை. எனவே, நீதிமன்றத்தை நாடுவதை விட மாற்றுவழியில்லை என தேர்தல் ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா கட்சிகள் அனைத்துக்கும் தெரிவித்திருக்கிறார். இதேநேரம், ஆணைக்குழுவின் செயற்பாட்டிலும் தளம்பல் நிலை காணப்படுகிறது. தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்பு அதன் உறுப்பினராக பி.எல்.எம். சார்ள்ஸ் என்பவர் 25.01.2023 அன்று தனது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளார். இந்தச் செயலை பெயரற்ற அமைப்பு கடுமையாக கண்டித்திருக்கிறது. இன்னொரு சம்பவமாக ஆணைக்குழு உறுப்பினராக எம்.எம்.முகமட்டை பதவி விலகுமாறு மரண அச்சுறுத்தல் விடப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் தேர்தலை இல்லாதாக்கும் சதித்திட்டமென எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தின் மீது கடுமையான குற்றசாட்டுகளை முன்வைத்து வருகின்றன.

அரசாங்கமோ ஜனாதிபதியோ தேர்தலை பிற்போடுவதோ அன்றி இல்லாமல் செய்வதோ அரசாங்கத்தின் நோக்கமல்ல. உரிய காலத்தில் நடத்தியே தீருவோம் என்றும் தேர்தலை பின்போடுவது ஜனநாயகத்துக்கு முரணானது எனவும் நாடகம் ஆடிக்கொண்டிருக்கிறது. தேர்தலை பிற்போட அரசாங்கம் எந்த முயற்சிகளையும் எடுக்கவில்லை. தற்போதை நிதி நெருக்கடிகளுக்கு மத்தியில் கையிருப்பிலுள்ள பணம் அத்தியாவசிய தேவைகளுக்காகவே செலவிடப்படுகிறது. பணத்தையும் அச்சிட முடியாது சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளையும் தட்டிக்கழிக்க முடியாமல் அரசாங்கம் திண்டாடுகிறது என யதார்த்த நிலமையை அமைச்சர் பந்துல குணவர்த்தன வெளிப்படுத்தியுள்ளார்.

தேர்தலை நடத்துவதற்குரிய அறிகுறியென்ற நிலையில் எதுவுமே சாதகமானதாக இல்லை என்பதே அறிஞர்கள், புத்திஜீவிகளின் கருத்தாகவும் விமரிசிப்பாகவும் காணப்படுகிறது. இதேநேரம், இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள உள்ளூராட்சி சபைகள் இன்னும் கலைக்கப்படாமல் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கின்றன. பொதுவாகவே சபைகள் கலைக்கப்பட்டதன் பின்பே அதற்கான தேர்தல் அறிவிப்புகள் இடம்பெறுவது வழக்கம். ஆனால், இம்முறை அது நடைபெறவில்லை.

உள்ளூராட்சி சபைகள் இயக்கத்தில் இருக்கவே புதிய தேர்தலுக்கான அறிவிப்பு செய்யப்பட்டு வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. தேர்தல் தொடர்பான நீதிமன்றில் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. சபைகளை கலைக்காமல் தேர்தலுக்கான அறிவித்தலை ஏன் செய்தீர்கள் என தேர்தல் ஆணையாளரிடம் கட்சிகள் கேட்டால் அதற்கு அவர், உள்ளூராட்சி சபைகளை கலைக்கும் அதிகாரம் எனக்கில்லை. சம்பந்தப்பட்ட அமைச்சே கலைக்கவேண்டும். அரசாங்கத்தின் ஆதரவு, அனுமதியின்றி தேர்தலை என்னால் நடத்தமுடியாது என கைவிரித்துக்காட்டுகிறார். இவையெல்லாவற்றையும் பார்க்கிறபோது

சுதந்திரத்துக்குப் பின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இவ்வாறானதொரு குழப்பநிலையை இலங்கை அரசே அன்றி மக்களோ கண்டதில்லை என்பது திடமாக கூறப்படுகிற விடயம்.

வெளிப்படையாக தெரிவிக்காவிட்டாலும் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கத்திடம் நிதி இல்லை என்பது வெளிப்படையாகவே தெரிவிக்கிற விடயம். இது இவ்வாறிருக்க, 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவேன், ஒற்றையாட்சிக்குள் அதிகாரத்தை முழுமையாக பகிர்ந்தளிப்பேன் என ஜனாதிபதி போகிற இடமெல்லாம் கற்பூரம் கொளுத்தி சத்தியம் செய்வதுபோல் செய்துவருகிறார். இதேநேரம் 13ஆவது திருத்தம் முழுமைப்படுத்தப்பட வேண்டுமாயின் மாகாண சபைகள் இயங்கவேண்டும். மாகாண சபைகள் இயங்கவேண்டுமாயின் தேர்தல் நடத்தப்பட வேண்டும். சில மாகாண சபைகள் காலாவதியாகி ஐந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டபோதும் அதற்கான தேர்தல் நடத்தப்படவில்லை.

இந்தியா இவ்விடயத்தில் கடுமையான அழுத்தத்தைப் பிரயோகித்து வருவதாகக் கூறப்படுகிறது. அதேநேரம், வடக்கு, கிழக்குக் கட்சிகளும் தேர்தலை உடன் நடத்துங்கள் என கோரிக்கைக்குமேல் கோரிக்கை விடுத்து வருகின்றன.

பிள்ளையாருக்கு கய்யாணம் என்பதுபோல் அரசாங்கம் காலத்தை மிக நாசூக்காக கடத்திக்கொண்டிருக்கிறது. 13ஆவது திருத்த சட்டமூலத்துக்கு ளரியூட்டுவதுடன், அதை அமுல்படுத்தக்கூடாது என இனவாதிகளும், இனவாதக் கட்சித் தலைவர்களும், பௌத்தபீடங்களும் கடுமையான எதிர்ப்பை காட்டிவருகிறார்கள்.

மறுபுறம் தேர்தல் நடத்த நிதி இல்லை இவ்வாறானதொரு நெருக்கடி நிலையில் மாகான சபை தேர்தலை நடத்த முடியும், பாராளுமன்றக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்தமுடியும், எல்லாவற்றுக்கும் மேலாக எதிர்க்கட்சிகள் விடும் கோரிக்கைக்கமைய ஜனாதிபதி தேர்தலை நடத்தி மீண்டும் தன்னை ஸ்திரப்படுத்த முடியும் என்பதெல்லாம் நினைத்துப்பார்க்க முடியாத வெற்று திட்டங்களாகும்.

கனத்த போட்டிகளும் குத்துவெட்டுகளும் குளறுபடிகளும் இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

இலங்கை பூராகவுமுள்ள உள்ளூராட்சி அமைப்புகளாக 340 உள்ளூராட்சி அமைப்புகளுக்கான தேர்தலாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அவ்வகையில் 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள், 275 பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கு 80 ஆயிரம் வேட்பாளர்கள் களம் இறக்கப்பட்டிருக்கிறார்கள். நாடுபூராகவும் அங்கீகரிக்கப்பட்ட 58 கட்சிகளும், 133 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். இதனடிப்படையில் நாடுபூராகவுமுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு 4,750 தனி வட்டார உறுப்பினர்களும், இரட்டை அங்கத்தவர்கொண்ட 165 வட்டாரங்களுக்கு 330 உறுப்பினர்களும், மூன்று உறுப்பினர்கள்கொண்ட 4 வட்டாரங்களுக்கு 12 உறுப்பினர்களுமாக மொத்தமாக 5,092 உறுப்பினர்கள் நாடு முழுவதும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இத்தெரிவை வடக்கு, கிழக்கு மாகாண அடிப்படையில் பார்ப்பின் இவ்விரு மாகாணங்களிலும் பின்வருமாறு எண்ணிக்கை கொண்ட சபைகள் காணப்படுகிறது.

மாவட்டம்	மாநகர சபை	நகர சபை	பிரதேச சபை	மொத்தம்
திருகோணமலை	0	1	00	02
மட்டக்களப்பு	0	0		01
அம்பாறை	1	0	0	1
யாழ்ப்பாணம்	0	2	02	0
கிளிநொச்சி			2	2
மன்னார்		0	3	4
முல்லைத்தீவு			3	3
வவுனியா		0	3	4

இவ்வெண்ணிக்கையின அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி சபைகளுக்கும் 13 கட்சிகளும், 15 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட விண்ணப்பித்துள்ளன. அவ்வகையில் யாழ். மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஜனநாயக தமிழத் தேசியக் கூட்டணி, தேசிய மக்கள் சக்தி, தமிழ் மக்கள் கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி, புதிய ஜனநாயக மார்க்சிச வெளிச கட்சி, சமத்துவக் கட்சி சோஷலிச சமத்துவக் கட்சி என 13 அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் போட்டியிடுகின்றன.

பா.அரியநேத்திரன்

பிரபாகரன் இல்லை எனாலும் துரோகம்!

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தொடர்பாக சர்ச்சைகளை ஏற்படுத்தும் விதமான கருத்து முள்ளிவாய்க்கால் மௌனம் 2009, மே 18இல் ஏற்பட்ட பின்னர் தற்போது 2023, பெப்ரவரி 13ஆம் திகதி, 13 வருடங்கள் 09 மாதம் 06 நாட்கள் கடந்த நிலையில், ஏன் பழ. நெடுமாறனுக்கு இப்போது இவ்வாறு கருத்து கூறவேண்டி வந்தது என்பதும் ஆராய்ப்படவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன், நலமுடன் இருக்கின்றார். உரிய நேரத்தில் மக்கள் முன் வருவார். ஆனால், எங்கு உள்ளார் என்பதை தற்போது அறிவிக்க இயலாது என உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறனும் காசி ஆனந்தனும் தமிழ்நாட்டு செய்தியாளர்களை சந்தித்து அறிவித்திருந்தார்கள்.

உண்மையில் பழ. நெடுமாறனும் கவிஞர் காசி ஆனந்தனும் விடுதலைப் புலிகளுக்கு நன்கு வேண்டப்பட்டவர்கள் என்பதைவிட விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பழக்கப்பட்டவர்கள்.

அப்படியான இருவரும் இப்போதைய காலத்தில் இதனை கூறியதன் நோக்கம், இதிலுள்ள அரசியல் இராஜதந்திரம், இப்படிக் கூறுவதற்கு அவர்களுக்கு பின்னால் உள்ள அரசியல் அல்லது அவர்கள் ஆதாரமில்லாமல் பொய் கூறிவிட்டனர் அல்லது ஆதாரத்துடன் உண்மை கூறினர் என்பதையெல்லாம் நான் விமர்சனம் செய்யப்போவதில்லை. இது தொடர்பாக கற்பனையில் கட்டுரை எழுதப்போவதும் இல்லை.

நான் பாராளுமன்ற உறுப்பினராக அந்தக் காலத்தில் செயல்பட்டதால் என்னால் கடந்த 2009, மே 18 தொடக்கம் தொகுக்கப்பட்ட உண்மைகள் இவை.

2009, மே 18இல் இடம்பெற்ற மிகப் பெரிய தமிழினப் படுகொலை முள்ளிவாய்க்காலில் இடம்பெற்று விடுதலைப் புலிகள் மௌனித்தபோது ஒரு சடலத்தை இலங்கையிலுள்ள தொலைக்காட்சிகளில் காண்பித்தபோது, கருணா என்ற விநாயகமூர்த்தி முரளிதரன், தயா மாஸ்டர் ஆகிய இருவரும் - விடுதலைப் புலிகளில் இருந்து காட்டிக்கொடுத்து அரசாங்கப் படைகளிடம் சரணடைந்த இருவரும் அந்த சடலத்தைப் பார்வையிட்டபோது விநாயகமூர்த்தி முரளிதரன் அந்த சடலத்தை இனங்கண்டு அது பிரபாகரனுடையதென படம் காட்டப்பட்டது.

அந்தவேளை, பல முன்னாள் போராளிகளும், பொதுமக்களும் தலைவர் பிரபாகரனின் சடலம் அது அல்ல எனவும் அவர் பாதுகாப்பாக வேறொரு நாட்டுக்கு சென்றுவிட்டார் எனவும் கதைகள் கூறப்பட்டது.

விடுதலைப் புலிகளின் தலைவர் குறித்து அந்தக் காலத்தில் ஊடகங்களில் வெளிவந்த கருத்துகளை ஒருதடவை இப்போது மீட்டுப்பார்ப்பது பொருத்தமாகும்.

கடந்த 2009, மே 18இல் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில், முள்ளிவாய்க்கால், வெள்ளவாய்க்கால் பகுதியில் தமது தளபதிகளுடன் தப்பிச்செல்ல பிரபாகரன் முற்பட்டபோது தமது இராணுவத்தினர் சுட்டுக்கொன்றதாகக் கூறியிருந்தார்.

அதேநாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜோர்தானிலிருந்து விமானம் மூலம் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வந்திறங்கி நிலத்தை தொட்டு வணங்கி பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துவிட்டோம் எனக் கூறினார்.

2009, மே 19இல் நாடாளுமன்றத்தில் விசேட அக்கிராசன உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஆசனத்தில் அமர்ந்தவுடன் பாராளுமன்ற மாபெரும் மீறி அப்போது அமைச்சராக இருந்த அக்கரைப்பற்று பாராளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா மஹிந்தவுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

அன்று பி.ப. ஒரு மணிக்கு கொல்லப்பட்டதாகக் கூறும் ஒருவரின் சடலத்தை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் சடலம் என இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் கமல் குணரட்ண தலைமை யிலான 53ஆவது படைப்பிரிவு கண்டெடுத்ததாகவும் இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார ஊடக சந்திப்பில் அன்று கூறியிருந்தார்.

இதன்பின்னர் அன்று பி.ப. 5 மணிக்கு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த கருணா எனும் விநாயகமூர்த்தி முரளிதரனும், தயா மாஸ்டர் என்பவரும் பார்வையிட்ட பின்னர் அதே இடத்தில் நின்று கருணா ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோது 2009, மே 19 காலையில் சிறு பற்றைக் காட்டில் தலைவர் பிரபாகரன் மறைந்து இருந்தபோது இராணுவத்தினரால் தலையில் சுட்டுக் கொல்லப்பட்டார் எனவும் கூறினார்.

2009, மே 19, இரவு சர்வதேச ஊடகமான பிபிசி (BBC) வானொலிக்கு தம்மை விடுதலைப் புலிகளின் சர்வதேச பொறுப்பாளர் என அடையாளப்படுத்திய கே.பி. எனப்படும் செல்லையா பத்மநாதன் (தற்போது இலங்கை அரசில் இணைந்து பயணிக்கும் கே.பி.) தமது தலைவர் பிரபாகரன் உயிருடன் இருப்பதாகக் கூறியிருந்தார்.

தமிழக முதல்வர் கருணாநிதியிடம் ஊடகவியலாளர் கேட்டபோது, அதே வானொலியில் பிரபாகரன் மரணம் உறுதிப்படவில்லை. அதனால் தம்மால் கருத்துக் கூற முடியாது என மறுத்துவிட்டார்.

2009, மே 20இல் பிரபாகரனின் சடலம் அது அல்ல என பல மட்டங்களிலும் இருந்து பரவலாக கருத்துகள் வந்தபோது தாம் மருத்துவ உற்கூறுப் பரிசோதனை செய்யவுள்ளதாக அரசாங்க தரப்பால் கூறப்பட்டது.

2009, மே 21இல் இலங்கைக்கு வருகை தந்த இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளியுறவுத் செயலர் சிவசங்கர் மேனன் ஆகியோர் ஜனாதிபதி மஹிந்தவை சந்தித்து விருந்துபசாரத்தில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளரிடம் கூறும்போது, பிரபாகரனின் மரணத்தில் தமக்கு சந்தேகம் இல்லை எனவும், உடற்கூறு மரண உறுதிப்படுத்தல் சான்று கிடைத்தால் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கை மூடிவிடுவோம் என தெரிவித்திருந்தனர்.

2009, மே 22இல் ஜனாதிபதி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில், பிரபாகரனை உயிருடன் பிடிக்கவே தாம் விரும்பிய தாகவும் அப்படி பிடித்திருந்தால் தாம் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்குக்காக இந்தியாவிடம் பிரபாகரனை ஒப்படைத்திருப்போம் எனவும் கூறியிருந்தார்.

2009, மே 22இல் விடுதலைப் புலிகளின் வெளிவிவகார ஊவத்துறை பொறுப்பாளர் என அடையாளப்படுத்திய அறிவழகன் என்பவர், தலைவர் பிரபாகரன் உயிருடன் இருப்பதாகவும் தகுந்த நேரத்தில் மக்கள் முன் சமுகம் தருவார் என கூறிய செய்திகள் ஊடகங்களில் வெளிவந்தன.

2009, மே 23இல் பிரபாகரனின் உடலை எரித்து அதன் சாம்பலை கடலில் வீசியதாக இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஊடகங்களுக்கு கருத்து கூறியிருந்தார்.

2009, மே 24இல் ஏற்கனவே தமது தலைவர் உயிருடன் இருப்பதாக 2009, மே 19இல் BBC ஊடகத்துக்கு கருத்து கூறிய கே.பி. எனப்படும் செல்லையா பத்மநாதன், மாறி குத்துக்கரணம் அடித்து பிரபாகரன் உயிருடன் இல்லை எனவும் அவர் 2009, மே 17இல் இராணுவத்துடன் இடம்பெற்ற சண்டையில் கொல்லப்பட்டார் எனவும் கூறியிருந்தார்.

இந்தச் செய்தியை அறிந்த தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களான வை.கோபாலசாமி, பழ. நெடுமாறன் ஆகியோர் கே.பி. கூறிய கருத்தை மறுதலித்து தலைவர் பிரபாகரன் சாகவில்லை அவர் உயிருடன் இருப்பதாக ஊடக அறிக்கைகளில் தெரிவித்திருந்தனர்.

2009, மே 25இல் கே.பியின் கருத்தை மறுதலித்து தமிழ்நெற் இணையத்தளத்தில் புலிகளின் புலம்பெயர்தோர் எனும் பெயரில் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் மக்கள் குழப்பம் அடையவேண்டாம் என்ற செய்தி வெளியிடப்பட்டது.

2009, மே 26இல் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் தயாமோகன் என்பவர் பிபிசி (BBC) தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில், தமது தலைவர் பிரபாகரன் வீரமரணம் அடைந்ததாகவும், தொடர்ந்தும் அனைத்துப் பொறுப்புகளையும் கே.பி. என அழைக்கப்படும் செல்வராசா பத்மநாதன் தலைமையில் அரசியல் ரீதியாக முன்னெடுக்கப்போவதாகவும் கூறியிருந்தார்.

2009, ஜூன் 03இல் காலிமுகத்திடலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளை இல்லாமல் செய்ததாகக் கூறப்படும் இராணுவத்தினரை அழைத்து ஒருநாட்டுடன் இன்னொரு நாடு போராடி வெற்றிபெற்று என்ற உணர்வுடன் போர் வெற்றிவிழா மிகப்பெரிய அளவில் நடத்தப்பட்டது.

2009, ஜூன் 07இல் இலங்கைப் பாராளுமன்றத்திற்கு முன்பாக உள்ள விளையாட்டுத்திடலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த கோட்டாய ராஜபக்ஷ, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முப்படைத் தளபதிகள், படையினர் உள்ளிட்ட சிங்கள மக்கள் கலந்துகொண்டு வெற்றிவிழா எனும் பெயரில் ஒரு பெரும் எழுச்சிவிழா இடம்பெற்றது.

இதில் உரையாற்றிய ஜனாதிபதி, நாடு முழுவதும் ஒரு மாத காலம் வரை அதாவது 2009, ஜூலை 30ஆம் திகதிவரை வெற்றிவிழாவை கொண்டாடுமாறு நாட்டுமக்களுக்கு பகிரங்க அழைப்பை விடுத்திருந்தார்.

இந்த அழைப்பை பெரும்பான்மை சிங்கள மக்கள், பௌத்த பிக்குகள் ஏற்று தென்பகுதி எங்கும் பால்சோறும், கட்டசம்பலும் வழங்கி மத்தளம் அடித்து குதூகல கொண்டாட்டங்களை செய்தனர்.

இவர்களுடன் இணைந்து வடக்கு, கிழக்கிலும் சில முஸ்லிம் கிராமங்களில் பட்டாசு கொளுத்தி பேரீச்சம்பழம், இனிப்பு பண்டங்களை வழங்கி இஸ்லாமிய இளைஞர்களும் ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர்.

இந்த விடயங்கள் அனைத்தும் கடந்த 2009, மே 18 தொடக்கம் 2009, மே 26 வரையும் ஏழுநாட்களும் சகல ஊடகங்களிலும் வெளிவந்த செய்திகள் மற்றும் 2009, ஜூன் 30வரை நாட்டில் இடம்பெற்ற நிகழ்வுகளை ஆதாரத்துடன் தொகுத்துள்ளேன்.

இது இடம்பெற்று சில மாதங்களின் பின்னர் சுவிலில் விடுதலைப் புலிகளின் பொறுப்பாளராக இருந்த குலம் என்பவர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வீரச்சாவடைந்திருக்கலாம் அவருக்கும் நினைவு வணக்கம் செலுத்தவேண்டும் என ஒரு கருத்தைக் கூறியதால் அவரை துரோகி என சிலர் விமர்சனம் செய்தமையும் உண்டு.

தற்போது தமிழ்நாட்டு பழ. நெடுமாறன் மற்றும் மட்டக்களப்பு அமிர்தகழியை சேர்ந்த கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோரால் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் உள்ளார் என கூறியபோது பழ. நெடுமாறனை துரோகியாக சிலர் விமர்சனம் செய்கின்றமை சமூக ஊடகங்களில் காணமுடிகிறது.

உண்மையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு இறுதிப் போரில் என்ன நடந்தது என்பதே எவருக்கும் தெரியவில்லை. அவர் இருக்கிறாரா இல்லையா என்பதுகூட உறுதியாக எவராலும் ஆதாரத்துடன் நிருபிக்கப் படவில்லை என்பது மட்டும் உண்மை.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இல்லை என்று கூறினாலும் துரோகம், அவர் இருக்கிறார் என்று கூறினாலும் துரோகம் என எமது தமிழர்கள் மத்தியில் குறிப்பாக, புலம்பெயர் நாடுகளில் வாழும் எமது உறவுகள் பலருடைய மனநிலை உள்ளது என்பதை மட்டுமே புரிந்துகொள்ள முடிகிறது.

ஓரங்கட்டப்படும் ஓ.பன்னீர்செல்வம்; எகிறி அடிக்கும் எடப்பாடி



ரமணி

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் யார் கையில் இருக்கிறதென்ற கேள்விக்கு தற்காலிக விடை கிடைத்துள்ளது. ஈரோடு கிழக்கு இடைத் தேர்தல் முடியும்வரை தற்காலிகமாக எடப்பாடியின் கையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை நீதிமன்றம் ஒப்படைத்துள்ளது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அதிகமான நிர்வாகிகள் எடப்பாடியின் பின்னால் உள்ளனர். கட்சி எடப்பாடியின் கைக்குள் இருக்கிறது. ஆனால், கட்சியின் இரட்டை இலைச் சின்னம் பன்னீரின் வசம் உள்ளது. இரட்டை இலைச் சின்னம் என்பது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடையாளம்.

எடப்படியும், பன்னீரும் இணைய வேண்டும் என்பது மத்திய பாரதீய ஜனதாவின் விருப்பம். ஈரோடு இடைத்தேர்தலில் இரட்டை இலை வெற்றி பெற வேண்டும் என்பதற்காக பன்னீர் ஒதுங்கிக்கொண்டார். அதனை எடப்பாடி தரப்பு பலவீனமாகப் பார்க்கிறது. எடப்பாடியின் உண்மையான அரசியல் எதிரி முதலமைச்சர் ஸ்டாலின். கருணாநிதியின் மறைவுக்குப் பின்னரான சகல தேர்தல்களிலும் ஸ்டாலின் வெற்றி பெற்றார். ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னரான தேர்தல்கள் அனைத்திலும் எடப்பாடி மண் கௌவினார். ஈரோடு இடைத்தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்ற எண்ணம் எடப்பாடிக்கு இல்லை.

கூட்டணிக் கட்சிகள் அனைத்தையும் ஸ்டாலின் அரவணைத்துச் செல்கிறார். புதிதாக கமலையும் தன் பக்கம் இழுத்துள்ளார். கடந்த காலங்களில் எடப்பாடிக்கு பக்கபலமாக இருந்த டாக்டர் ராமதாஸ், விஜயகாந்த் ஆகியோர் கூட்டணியிலிருந்து வெளியேறிவிட்டனர். இது எடப்பாடிக்கு பெரும் பின்னடைவாக இருக்கிறது. எடப்பாடி, பன்னீர், சசிகலா, தினகரன் ஆகியோர் ஒன்றாக இருக்க வேண்டும் என பாரதீய ஜனதா தலைவர்கள் விரும்பு கின்றனர். அவர்களை இணைத்தால் தன் தலைமைப் பதவிக்கு ஆபத்து என எடப்பாடி கருதுகிறார். தேர்தல் பரப்புரை செய்ய பன்னீர் ஆர்வமாக உள்ளார். எடப்பாடி அதற்குத் தடை போட்டுள்ளார். எடப்பாடியின் பின்னால் பலர் இருப்பதால் பாரதீய ஜனதா பன்னீரைக் கைவிட்டுள்ளது.

ஈரோட்டில் எடப்பாடி பிரசாரம் செய்கிறார். பன்னீரும் அவரது ஆதரவாளர்களும் பிரசாரம் செய்யத் தயாராக இருக்கிறார்கள். எடப்பாடி அதற்குத் தடையாக இருக்கிறார். பன்னீர் இல்லாமல் கிடைக்கும் வாக்குகள் அனைத்துக்கும் எடப்பாடி உரிமைகோர உள்ளார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்குக் கிடைக்கும் வாக்குகளில் தனது பங்களிப்பும் இருக்க வேண்டும் என பன்னீர் விரும்புகிறார்.

எடப்பாடியால் அவமானப்படுத்தப்பட்ட தால் பிரசாரத்துக்குப் போக வேண்டாமென கூட இருப்பவர்கள் சொல்வதைக் கேட்பதற்கு பன்னீர் தயாராக இல்லை.

பன்னீர் தரப்பு வழங்கிய நட்சத்திரப் பேச்சாளர் பட்டியலுக்கு எடப்பாடி முட்டுக் கட்டை போட்டதால் சட்டவிதிகளின்படி ஏற்க முடியாது என தேர்தல் ஆணையம் நிராகரித்தது. இதனால், பன்னீரின் பயணம் முடங்கியது. அவரின் ஆதரவாளர்களும் முடங்கினர். இந்த நிலையில்தான், தனது தரப்பில் நியமிக்கப்பட்ட தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்களுடன் சென்னை எழும்பூரிலுள்ள தனியார் ஹோட்டலில் எதிர்வரும் 20ஆம் திகதி ஆலோசனை. இரட்டை இலை வெற்றி பெறுவதற்காக பிரசாரம் செய்வதற்காகவே பன்னீர் தனது வேட்பாளரை வாபஸ் பெற்றார். எடப்பாடி தரப்பு தடை ஏற்படுத்தினாலும், இரட்டை இலைக்காக வாக்குச் சேகரிக்கலாம் என்று பன்னீர் தெரிவித்தார். ஆனால், அவருடன் இருப்பவர் களுக்கு அதில் உடன்பாடில்லை. பன்னீருக்கு ஆதரவு அதிகமாக இருக்கும் பகுதிகளில் பொதுக்கூட்டம் போடலாம் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ஈரோடு இடைத் தேர்தலில் பன்னீரின் பங்களிப்பு எதுவுமே இல்லையென்றால் அரசியல் வெளிச்சத்திலிருந்து மறைக்கப்பட்டு விடலாம் என்ற அச்சம் பன்னீரிடம் இருக்கிறது.

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்கு எதிர்வரும் 27ஆம் திகதி இடைத்தேர்தல் நடக்கவிருக்கிறது. ஆளும் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் சார்பில் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனும், அ.தி.மு.க. சார்பில் தென்னரசும் போட்டியிடுகிறார்கள். சீமானும், விஜயகாந்தும் தமது வேட்பாளர்களை நிறுத்தியுள்ளனர். 77 வேட்பாளர்கள் ஈரோட்டில் போட்டியிடுகிறார்கள்.

காங்கிரஸும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ஈரோட்டில் நேரடியாக மோதுகின்றன. பிரசாரக் களத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் முன்னணியில் உள்ளது. எடப்பாடி காங்கிரஸை தாக்காமல் திராவிட முன்னேற்றக் கழகத்தையே குறி வைக்கிறார். கோபத்தின் உச்சிக்குச் சென்ற எடப்பாடி, முதலமைச்சர் ஸ்டாலினை ஒருமையில் பேசியது சர்ச்சையாகியுள்ளது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக பாரதீய ஜனதா தலைவர்கள் பெரியளவில் பிரசாரம் செய்யவில்லை. பாரதீய ஜனதா தலைவர்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும் இணைந்து பிரசாரம் செய்வார்களா என்பது தெரியவில்லை.

தமிழக ஆட்சியை இழப்பதற்கு பாரதீய ஜனதாவுடன் கூட்டணி அமைத்ததுதான் காரணம் என அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் ஆத்திரத்துடன் பேசினார்கள். மீண்டும் பாரதீய ஜனதாவின் வலையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வீழ்ந்துவிட்டது.

முகவரி தொலைத்த துருக்கி

கரம் கொடுக்குமா சர்வதேசம்?

என்ன நடக்கின்றது இங்கு... அதை புரிந்துகொள்வதற்குள் எல்லாம் நடந்தேறிவிடுகிறது. இன்றைய நிலையில் 'நாளை விடியல்' என்பது வெறும் கனவாக மட்டுமே உள்ளது. விடியவதற்குள் என்ன வேண்டுமானாலும் நிகழலாம். விடிந்து நாம் கண் விழிக்கும்போதே நாம் உயிரோடிருக்கிறோம் என்பதை உணரமுடிகிறது. இது இயற்கையின் எழுதப்படாத விதி... அதற்குள் எத்தனை துரோகங்கள், குரோதங்கள், காழ்ப்புணர்ச்சிகள்... எதை கொண்டுவந்தோம். அதை நாம் எடுத்துச்செல்ல... இந்நிலை அறிவதற்கு நமக்கு கால அவகாசம் தேவைப்படுகிறது... காலம் அதை உணர்த்தும்போது கண்ணீர் மட்டுமே மிஞ்சுகிறது.

இன்று பல்வேறு நாடுகளில் அடுத்தடுத்து சிறியதும், பெரியதுமாக ஏற்பட்ட - ஏற்படப்போகும் நிலடுக்கங்கள் உலகை பீதியில் உறைய வைத்துள்ளன.

துருக்கியில் கடந்த 06ஆம் திகதி உள்ளூர் நேரப்படி அதிகாலை 4.17 மணியளவில் 7.8 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கிய நிலையில், பீதியடைந்த மக்கள் வீதிகளில் தஞ்சமடைந்தனர். இந்நிலநடுக்கம் சுமார் 10 நிமிடங்கள் நீடித்த நிலையில் 6.1 மற்றுமொரு நிலநடுக்கம் உணரப்பட்டது. நிலநடுக்கம் அதிகாலை நேரம் ஏற்பட்டதால் ஆழ்ந்த நித்திரையிலிருந்தோர் தன்னிலை அறிவதற்குள் தாம் குடியிருந்த கட்டடங்கள் இடிந்து வீழ்ந்து தரைமட்டமாகி இடிபாடுகளுக்குள் சிக்கிகொண்டனர் அப்பாவிகள் பலர்.

உள்நாட்டு மீட்புக் குழுவினரும், இராணுவமும், தன்னார்வலர்களும், பொதுமக்களும் இணைந்து மீட்புப் பணிகளை முன்னெடுத்தனர்.

நேற்று பார்த்த கொங்கிரீட் கோட்டைகள் இன்று காலையில், இருந்த இடம் தெரியாது நிர்மூலமாகிக, நேற்று பார்த்த - பேசிய உறவுகளைக் காணாத அதிர்ச்சியிலிருந்து மக்கள் மீள்வதற்குள் பிற்பகல் 3 மணியளவில் 7.5 ரிச்டர் அளவில் மற்றுமொரு நிலநடுக்கம் துருக்கி - சிரியாவை உலுக்கியது. அதுவரை ஆட்டம் கண்டிருந்த வணிக வளாகங்கள், மக்கள் குடியிருப்புகள், வணக்கஸ்தலங்கள், மருத்துவமனைகள் என ஆயிரக்கணக்கான கட்டடங்கள் சீட்டுக்கட்டுகளைப்போல சரிந்து வீழ்ந்து தரைமட்டமாகின.

மக்கள் செய்வதறியாது திகைத்தனர். இரத்தக் காயங்களுடன் பலர் மீட்கப்பட்ட நிலையில் ஆயிரக்கணக்கானோர் சடலங்களாக மீட்கப்பட்டனர். இரவு, பகலாக மீட்புப் பணிகள் தொடர்கின்றன. கட்டட இடிபாடுகளை தோண்டத் தோண்ட சடலங்கள்... குறுயிரும் குலையுயிருமாக பிறந்த சில மணிநேரங்களேயான பச்சிளம் குழந்தைகள்முதல் முதியோர்வரை இரத்தம் பீறிட படுகாயங்களுடன் மீட்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றனர். எங்கும் மரண ஓலம். அந்தக் காட்சிகள் துருக்கி - சிரியாவை சிதைத்த இயற்கைப் பேரழிவின் கோரமுகத்தைப் புடம்போட்டு காட்டின. இருநாட்டு அரசுகளும் ஸ்தம்பித்தன.

சர்வதேச உதவியை நாடின துருக்கியும் சிரியாவும். ஐ.நா. உட்பட 95இற்கும் மேற்பட்ட சர்வதேச நாடுகள் இரு நாடுகளுக்கும் உதவிக்கரம் நீட்டின. மீட்புக்குழுவினர்களும், மீட்பு உபகரணங்களும், மருந்து, உணவு உள்ளிட்ட பேரிடரில் சிக்கித்தவித்த இருநாடுகளின் மீட்சிக்கான அனைத்து உதவிகளும் சர்வதேசத்திடமிருந்து பறந்தன.

உள்நாட்டு மற்றும் சர்வதேச மீட்புக்குழு என 1,10,000இற்கும் மேற்பட்ட மீட்புப் பணியாளர்கள் களத்தில் இறங்கி மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பேரனர்த்தத்தில் சிக்கி இதுவரை இருநாடுகளிலும் 43ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதுடன், ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

நிலநடுக்கத்தால் துருக்கியில் கஹ்ரமன்மாரஸ் (Kahramanmaras), காஸியன்டெப் (Gaziantep), சன்லியுர்பா (Sanliurfa), தியர்பாகிர் Diyarbakir, அடனா (Adana), அடியமன் (Adiyaman), மாலட்யா (Malatya), உஸ்மானியே (Osmaniye), ஹடய் Hatay மற்றும் கிலிஸ் (Kilis) உள்ளிட்ட 10 மாகாணங்கள் பேரழிவைச் சந்தித்துள்ளன. இதேபோன்று சிரியாவின்(Aleppo), அலெப்போ, இட்லிப் (Idlib), ஹமா (Hama) மற்றும் டார்டியா (Latakia) ஆகிய மாகாணங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

நிலநடுக்கம் ஏற்பட்ட ஒவ்வொரு நான்கு நிமிடத்துக்கும் ஒரு பின்அதிர்வு என்ற ரீதியில் இருநாடுகளிலும் இதுவரை 4 ஆயிரத்து 700இற்கும் அதிகமான பின்அதிர்வுகள் (aftershock) உணரப்பட்டுள்ளதாக துருக்கி அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கூட்டிக்காட்டியுள்ளது.

இலட்சக்கணக்கானோர் வீடுகளை இழந்து முகாம்வாசிகளாக மாறியுள்ளனர். இன்னும் பலர் தமது குடியிருப்புகள் இருந்தும் ஏற்படும் பின்அதிர்வுகளின் அச்சத்தில் வீதிகளிலேயே தஞ்சமடைந்துள்ளனர்.

இன்று 14ஆவது நாளாகவும் மீட்புப் பணிகள் தொடர்கின்றன.

நிலநடுக்கம் ஏற்பட்டு 300 மணிநேரத்தை கடந்துள்ள நிலையிலும் கட்டட இடிபாடுகளில் சிக்கியிருக்கும் பலர் உயிருடன் மீட்கப்பட்டு வருகின்றமை ஆச்சரியத்தை ஏற்படுத்துவதுடன், இது மீட்புப் பணியாளர்களுக்கு புதிய உத்வேகத்தைக் கொடுத்துள்ளது. மீட்புப் பணிகள், மோப்பநாய்களின் உதவியுடன் முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனினும், இன்று 14 நாட்கள் கடந்துள்ள நிலையில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தூர்நாற்றம் வீச ஆரம்பித்துள்ளது. இன்னும் இடிபாடுகளிலிருந்து அபயக் குரல்கள் கேட்டுக்கொண்டேதான் இருக்கின்றன. உயிரிழந்தோரின் சடலங்கள் பாரிய குழிகள் வெட்டப்பட்டு அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன. மயான பூமியாக காட்சியளிக்கின்றன துருக்கியும் சிரியாவும்.

இயற்கை நடத்திய மனித வேட்டையில் இன்று ஒரு மாபெரும் இனம் மண்ணுள் புதையுண்டு போயுள்ளது. வரலாறு பேசும். எனினும், மாண்டோர் மீளப்போவதில்லை.

முகவரி தொலைத்த பாலகர்கள்

இந்நிலையில், துருக்கி - சிரியாவில் ஏற்பட்டிருக்கும் பயங்கரமான நிலநடுக்கத்தால் அங்கே மிகவும் அசாதாரணமான சூழல் நிலவி வருகிறது. பேரிடரில் பெற்றோர்களை இழந்த பச்சிளம் குழந்தைகள் பலர் தங்களது பெயர் கூட தெரியாமல் நிர்க்கதியாக நிற்கின்றனர். இவ்வாறு 250இற்கும் மேற்பட்ட குழந்தைகள் மருத்துவர்களின் கண்காணிப்பின் கீழ் உள்ளனர். இப்படி பெயர் தெரியாத சில குழந்தைகளின் பெற்றோர் யார் எங்கே என்பதும் தெரியாத நிலை இருக்கிறது.

இன்னும் பல குழந்தைகள் அதிர்ச்சியிலிருந்து மீளமுடியாமல் அவதியுற்று வருகின்றனர். குழந்தையொன்றை ஆழ்ந்த நித்திரையிலிருக்கும்போது திடீரென வீரிட்டு அழுவதாக தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

இதுமட்டுமல்ல, குழந்தைகளை இழந்த தாய் - தந்தையர், பெற்றோரை இழந்த பிள்ளைகள் என ஒவ்வொருவரும் தமது உறவுகளை இழந்து புத்தி பேதலித்து வீதி வீதியாக அவர்களை தேடியலைந்து வருகின்றனர். இந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு அவர்களுக்கு இன்னும் பல காலம் எடுக்கலாம் என்கிறது மருத்துவ உலகு....

துருக்கிக்கு நிலநடுக்கம் என்பது புதிய விடயமல்ல. துருக்கி வரலாற்றில் பல்வேறு நிலநடுக்கங்களுக்கு முகங்கொடுத்து பல்லாயிரக்கணக்கான உயிர்களை பலிகொடுத்துள்ளது. அதற்கு சான்றுபகிர்கிறார் துருக்கிவாசியொருவர்.

நிலநடுக்கத்தால் சிதைந்துபோயுள்ள கட்டடத்தின் தரை தளத்திலுள்ள பாழடைந்த தனது பல்பொருள் அங்காடியைப் பார்த்த துருக்கிவாசியொருவர், தனது துரதிர்ஷ்டத்தை குறை சொல்லவில்லை. மாறாக கட்டட நிர்மாணம் குறித்தே குற்றஞ்சாட்டுகிறார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில் ''நாங்கள் ஒரு பூகம்ப மண்டலத்தில் வாழ்ந்தோம் என்பது எங்களுக்குத் தெரியும். இது விதி அல்ல. பலவீனமான கட்டடங்களை உருவாக்குவதற்கு மக்கள்தான் காரணம்'' என்றார். ஏனெனில், துருக்கியின் நில அமைப்பு அத்தகையது. இதற்கு ஏற்றாற்போல் கட்டடங்களை நிர்மாணித்திருக்கலாம். இன்று பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்டிருக்காது என்பதே அவரது கருத்து.

இதற்கு ஏற்றாற்போல் துருக்கியில் முறையற்ற விதத்தில் கட்டடங்களை நிர்மாணித்த மற்றும் அவர்களுக்கு துணைபோனோர் என 300இற்கு மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பூமியின் மேலடுக்கு தட்டுகள் தனித்தனி பாகங்களாக உள்ளன. ஒவ்வொன்றும் மற்றொன்றை நெருக்கியபடி அமைந்திருக்கின்றன.

இந்த அமைப்பு அவ்வப்போது நகருவதற்கு முயற்சி செய்கின்றது. ஒரு தட்டு நகர முயற்சிக்கும்போது மற்றொரு தட்டு அதைத் தடுக்கிறது. இதனால் உராய்வு ஏற்படுகிறது. சில நேரங்களில் ஒன்று மற்றொன்றின் மீது மோதி மேற்பரப்பில் அதிர்வை ஏற்படுத்துகிறது. இதைத்தான் ஆய்வாளர்கள் நிலநடுக்கம் என்கின்றனர். பூமித் தட்டுகள் நகர்ந்து உராய்ந்ததால் மிகப் பெரியளவிலான நிலநடுக்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

அந்தவகையில் துருக்கி, யூரேசிய - ஆபிரிக்கா மற்றும் அரேபியா தட்டுகள் அனைத்தும் ஒரே இடத்தில் சந்திக்கும் பகுதியான அனடோலியன் தட்டில் அமைந்துள்ள ஒரு நாடாகும்.

இந்த அனத்தோலியன் தட்டு என்பது யூரேசியா, ஆபிரிக்கா மற்றும் அரேபியா தட்டுகளுக்கு இடையே அமைந்துள்ளது. இதுதான் உலகின் மிகவும் ஆபத்தான புள்ளியாக அறியப்படுகிறது.

அதாவது, இதில் ஏதேனும் ஒரு தட்டு நகர்ந்தாலும் துருக்கியில் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. தற்போது துருக்கியில் ஏற்பட்டிருக்கும் நிலநடுக்கம் அரேபியன் தட்டும் அனடோலியன் தட்டும் உரசியதால் ஏற்பட்டிருக்கிறது.

இதன் விளைவால் துருக்கி என்கின்ற நாடு உலக வரைபடத்திலிருந்து 10 மீற்றர் நகர்ந்துள்ளது. இதுகுறித்து இத்தாலி நிலநடுக்க ஆய்வாளரும், புவியியல் வல்லுநருமான கார்லோ டோஃலோனி தெரிவிக்கையில், ''துருக்கியின் நில அடுக்குகள் 10 மீற்றர் வரை நகர்ந்துள்ளன. சிரியா இதைவிட கொஞ்சம் குறைவாக நகர்ந்திருக்கலாம். ஆனால், இது முதற்கட்ட தகவல்களின் அடிப்படையில்தான் சொல்லப்படுகிறது. முழுமையான விவரங்கள் கிடைத்த பின் துருக்கி எவ்வளவு தூரம் நகர்ந்துள்ளது என்று சொல்ல முடியும்'' எனத் தெரிவித்துள்ளார்.

சில நிமிட நேரமே நீடித்த நிலஅதிர்வுகளால் இன்று உலக வரைபடத்தில் துருக்கின் நிலவியல் அமைப்பையே மாற்றியமைத்துள்ளது.

இது இவ்வாறிருக்க, நெதர்லாந்தைச் சேர்ந்த புவியியல் ஆராய்ச்சியாளரான ஃப்ரான்க் ஹூக்பீட்ஸ் (frank hoogerbeets) கடந்த பெப்ரவரி 3ஆம் திகதியே துருக்கி உள்ளிட்ட பகுதிகளில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்படும் என துல்லியமாக கணித்து தெரிவித்திருந்தார். SSGEOS என்ற புவியியல் ஆய்வு நிறுவனத்தில் ஆராய்ச்சியாளராகவுள்ள இவர், ட்விட்டரில் வெளியிட்ட பதிவில்,

''மத்திய - தெற்கு துருக்கி, ஜோர்தான், சிரியா, லெபனான் பகுதியில் 7.5 என்ற ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகும்'' என்று பதிவிட்டிருந்தார். ஆனால், அதை அப்போது யாரும் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. இந்நிலையில், கடந்த 6ஆம் திகதி நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் பின்விளைவுகள் தற்போது பேரழிவை ஏற்படுத்தியுள்ளன. ஃப்ரான்க் ஹூக்பீட்ஸின் கணிப்பு பொய்க்கவில்லை.

இந்நிலையில், தற்போது அவர் இந்தியப் பெருங்கடலை மேற்கோள்காட்டி, ''ஒரு பெரும் அளவிலான நிலநடுக்கம், ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட பாகிஸ்தான் மற்றும் இந்தியா வழியாக வந்து இந்தியப் பெருங்கடலில் முடிவடையும்'' என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், எப்போது ஏற்படும் என்று அவர் குறிப்பிடவில்லை.

இவரின் கூற்றிற்கு மனிதகுலம் செவிசாய்க்குமா எனத் தெரியவில்லை. அந்த இயற்கைக்கு புரிந்துவிட்டது போலும்...

தற்போது உலகின் பல்வேறு நாடுகளிலும் நிலநடுக்கங்கள் பதிவாகி வருகின்றன. கடந்த சில நாட்களில் உலகின் பல்வேறு நாடுகளிலும் சங்கிலி தொடர்போல நிலநடுக்கங்கள் பதிவாகி வருகின்றன. இதில் இலங்கை மட்டும் விதிவிலக்கா என்ன?

கடந்த 10ஆம் திகதி மொனராகலை மாவட்டத்திற்கு உட்பட்ட புத்தல, வெல்லவாய மற்றும் ஹந்தபனகல ஆகிய பகுதிகளில் 3 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் உணரப்பட்டது.

தொடர்ந்தும் 14ஆம் திகதி ரோமானியாவில் 5.6 ரிச்டர் அளவிலும், 15ஆம் திகதி நியூசிலாந்தில் 6.1 ரிச்டர் அளவிலும், கொலம்பியாவில் 5.2 ரிச்டர் அளவிலும் 16ஆம் திகதி பிலிப்பைன்ஸில் 6.1 ரிச்டர் அளவிலும், அமெரிக்காவின் ஒஹன்வியூவில் 4.8 ரிச்டர் அளவிலும், கொங்கோவில் 5.3 ரிச்டர் அளவிலும் நிலநடுக்கங்கள் உணரப்பட்டுள்ளன.

இதேபோன்று எமது அண்டைநாடான இந்தியாவிலும் அவ்வப்போது நிலநடுக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. குறிப்பாக வடகிழக்கு மாநிலங்களான அசாம், சிக்கிம், மேகாலயாவில் நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. அசாமில் 4.0 ரிச்டர் அளவிலும், சிக்கிமில் 4.3 ரிச்டர் அளவிலும், மேகாலயாவில் 3.9 ரிச்டர் அளவிலும்

நாங்கள் ஒரு பூகம்ப மண்டலத்தில் வாழ்ந்தோம் என்பது எங்களுக்குத் தெரியும். இது விதி அல்ல. பலவீனமான கட்டடங்களை உருவாக்குவதற்கு மக்கள்தான் காரணம்''

இந்தியாவின் பல்வேறு இடங்களில் அதிர்வுகள் உணரப்பட்டு வருகின்றன. இவ்வாறு பல்வேறு நாடுகளில் சிறியதும் பெரியதுமான பல்வேறு நிலஅதிர்வுகள் ஏற்பட்டு வருகின்றமை உலக நாடுகளிடையே பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இயற்கையை வெல்ல முடியாது. எனினும், அதன் அனர்த்தங்களின் தாக்கத்திலிருந்து எம்மை தற்காத்துக்கொள்ள முடியும். அந்தவகையில் டச்சு புவியியல் ஆராய்சியாளர் ஃப்ரான்க் ஹூக்பீட்ஸின் கருத்தை பல்வேறு நாடுகள் கருத்திற்கொள்ள ஆரம்பித்துள்ளன.

இயற்கைமயமான இன்றைய வாழ்க்கைச் சூழலில் உலகம் நொடிக்கு நொடி விஞ்ஞானத்தில் உச்சந்தொட்டு வருகிறது. ஒவ்வொரு நாடும் புதிது புதிதாக கண்டுபிடிப்புகளை தந்து மக்களை வியப்பின் எல்லைக்கே கொண்டுசெல்கின்றன. ஆக்கத்திற்கான கருவிகள் மட்டுமன்றி எதிரி நாடுகளை அழிப்பதற்கான கண்டுபிடிப்புகளும் குவிந்து வருகின்றன. ஆனால், எதிர்பாராத நேரத்தில் இயற்கை தரும் அதிரடியை எதிர்கொள்வதற்கு எந்த நாட்டிலும் ஏற்றதொரு கண்டுபிடிப்புகள் இல்லை. இயற்கையின் தன்மையை உணர்ந்து, அதற்கேற்ற வாழ்க்கை முறைமையை மாற்றிக்கொண்டாலேயே பேரழிவுகளிலிருந்து நம்மை நாம் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

• கே.சுபானி

மாமாவின் சொகுசு கார் மோதியதில் உயிரிழந்த ஒன்றரை வயது குழந்தை

அதிசொகுசு காரில் மோதி ஒன்றரை வயது குழந்தை உயிரிழந்த சம்பவம் கொஹுவல பிரதேசத்தில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொஹுவல, களுபோவில பி.ரூபன் பீரிஸ் மாவத்தையைச் சேர்ந்த சுவராஜ் மொஹமட் முஸ்தாக் என்றழைக்கப்படும் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் காரை செலுத் திய குழந்தையின் தாயாரின் சகோதர ரான 28 வயதான சந்தேகநபர் கைதுசெய்யப் பட்டுள்ளதுடன், குறித்த கார் பொலிஸாரினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் வீட்டிலிருந்து வெளியேறுவதற்கு சுமார் 16ஆம் திகதி வாகன தரிப்பிடத்திலிருந்து காரை வெளியே எடுக்கும்போது, காரின் முன்னால் வந்த குறித்த குழந்தை இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தை அவதானித்த அங்கிருந்த மோட்டார்சைக்கிள் சாரதியொருவர், காரை செலுத்திய வருக்கு அறிவித்திருக்கிறார். அதனைத் தொடர்ந்து மீண்டும் கார் முறுறத்துக்கு திருப்பப்பட்டுள்ளதுடன், அதன்போது குழந்தை வாகனத்தின் சில்லில் சிக்கியுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

உடனடியாக செயற்பட்ட வீட்டார் குழந்தையை களுபோவில போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். மேலதிக சிகிச்சைக்காக குழந்தை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதன் பின்னர் நேற்று முன்தினம் 17ஆம் திகதி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கெமராவில் பதிவாகியுள்ளதாகவும், சம்பவ இடத்தில் எந்தவொரு இரத்தக்கறையும் படிந்திருக்கவில்லை என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு வந்த கல்கிலை நீதிமன்றத்தின் பதில் நீதவான் ரதனா கமனே, ஆரம்பகட்ட விசாரணைகளை முன்னெடுத்து, காரை பொலிஸாரின் பொறுப்பில் எடுக்குமாறும் சந்தேகநபரை காலுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.

கொஹுவல பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் வசந்த பிட்டிகலவின் ஆலோசனையின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பால், தயிர், இறைச்சி விலைகள் உயர்வு

பால், தயிர், இறைச்சி உள்ளிட்ட அனைத்து பொருட்களின் விலையும் இருமடங்காக உயர்த்தப்படவுள்ளதாக தேசிய விலங்கு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணம் 66 வீதத்தால் அதிகரித்தமையே காரணமென அதன் அழைப்பாளர் கஜீவ தம்மிக்க தெரிவித்தார்.

கால்நடை உற்பத்தியாளர்கள் குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் உறைவிப்பான்களை பயன்படுத்தவேண்டிய நிலை ஏற்படும் எனவும், மின்சாரக் கட்டண உயர்வால், குளிர்சாதனப் பெட்டிகளில் தங்களுடைய பொருட்களை வைப்பதற்கு பெரும் செலவினங்களைச் செய்யவேண்டிய நிலை ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் (17) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட தேசிய விலங்கு உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் அழைப்பாளர் கஜீவ தம்மிக்க இதனை தெரிவித்தார்.

கப்ரால் – லலித் வீரதுங்கவுக்குப் பிணை

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரை பிணையில் விடுவிக்க கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் (17) உத்தரவிட்டுள்ளது. தினியவல பாலித தேரர் மத்திய வங்கி ஊடாக 6.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை இமாத் ஷா ஜூபேரி என்ற அமெரிக்க தொழிலதிபருக்கு 2014ஆம் ஆண்டு செலுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பிலேயே இவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

மாத்தறை மாநகர சபைக்கான உள்ளூராட்சித் தேர்தலை நடத்த அனுமதிக்குமாறு கோரிய ரிட் மனு நிராகரிப்பு

மாத்தறை மாநகர சபைக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடுமாறு கோரி கயேசுகை குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு நேற்று முன்தினம் (17) உயர் நீதிமன்றத் தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை மாநகர சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை நிராகரித்த தேர்தல் அதிகாரியின் தீர்மானத்தை இரத்துசெய்யுமாறு கோரி, கயேசுகைக் குழுவின் தலைவர் சமித்த பிரசங்க குணசேர உள்ளிட்ட மூன்று மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்தனர்.

நீதிபரசர்கள் புவனேக அலுவிஹாரே, ஜனக் டி சில்வா மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய உச்சநீதிமன்ற மூவரடங்கிய நீதிபதிகள் குழாம், தேர்தல்கள் ஆணைக்குழு முன்வைத்த பூர்வாங்க ஆட்சேபனைகளை கருத்திற்கொண்டு இந்த மனுவை தள்ளுபடி செய்ய தீர்மானித்துள்ளது. மனுதாரர்கள் சார்பில் வழக்கறிஞர் நுவான் போபாகே ஆஜராகியதுடன், தேர்தல் ஆணைக்குழு சார்பில் தனுஷ்கு கலுஹன மற்றும் உஷானி அத்தபத்து ஆகியோருடன் சிரேஷ்ட சட்டத்தரணி தர்ஷன வெதுவகே ஆஜராகினார்.

ஜனாதிபதி மாளிகையில் அழிக்கப்பட்ட சொத்துகள் தொடர்பான விசாரணை அறிக்கை

ஜனாதிபதி செயலரிடம் கையளிப்பு

போராட்டக்காரர்களால் அழிக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகையின் சொத்துகள் தொடர்பில் தொல்பொருள் திணைக்களம் நடத்திய விசாரணை தொடர்பான அறிக்கையை தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க ஜனாதிபதி செயலாளரிடம் கையளித்தார்.

பொலிஸாரின் விசாரணைகளுக்கு ஆதரவாக தொல்லியல் திணைக்களம் இந்த விசாரணையை மேற்கொண்டது.

அறிக்கையின் நகல் பொலிஸாரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நீராடச் சென்ற பாடசாலை மாணவர்கள் நீரில் மூழ்கி மாயம்

மாத்தறை - வெல்லமடம கடற்பகுதியில் நீராடச் சென்ற மூன்று பாடசாலை மாணவர்கள் நீரில் மூழ்கி காணாமல்போயுள்ளனர்.

அவர்களைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கை களை ஆரம்பித்துள்ளதாக மாத்தறை பிரதேசத்திற்குப் பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கூற்படையினரின் ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தரை கன்னத்தில் அறைந்து தப்பிச்சென்ற பெண்

பாதுகாப்பு தலைக்கவசம் அணியாமல் மோட்டார்சைக்கிளில் பயணித்த பெண்ணை தடுத்துநிறுத்தி சோதனையிட்டபோது, குறித்த பெண், போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தரை கன்னத்தில் அறைந்ததுடன், வாகனத்தை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக ஜா-எல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஜா-எல பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு அருகில் கடமையில் இருந்த போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இந்தச் சம்பவத்துக்கு முகங்கொடுத்துள்ளார்.

"நான் பொலிஸ்துறையினருக்கு பயப்படாத பெண்" என்று கூறி, தன்னை தடுத்துநிறுத்திய கான்ஸ்டபிளை குறித்த பெண் கன்னத்தில் அறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த பெண் விட்டுச்சென்ற மோட்டார் சைக்கிள் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளது.

சந்தேகநபரான பெண் சீதுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனக் கண்டறிந்து, அவரைத் தேடிச் சென்றபோது அந்தப் பெண் நீண்ட காலமாக மனநல நோய்க்காக சிகிச்சை பெற்று வருபவரென வீட்டார் தெரிவித்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை ஜாஎல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வடக்கு ஆளுநர் - தேசிய அபாயகர ஒளத கட்டுப்பாட்டுச் சபை சந்திப்பு

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வுக்கும் தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் மாகாண தலைவர் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளுக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (17) கொழும்பில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்காக முன்னெடுத்து வரும் வேலைத் திட்டங்கள் மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை மறுவாழ் வளிப்பது தொடர்பில் ஆளுநருக்கும் மாகாண அதிகாரிகளுக்கும் இடையில் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

யாழ். கலாசார நிலையத்தை மாநகர சபைக்கு வழங்கவும் 'யாழ். பண்பாட்டு நடுவம்' என பெயர் சூட்டவும் தீர்மானம்

இந்திய அரசாங்கத்தின் நிதி நன்கொடையின் கீழ் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள யாழ். கலாசார நிலையத்தை யாழ். மாநகர சபைக்கு வழங்க வேண்டும் எனவும், 'யாழ்ப்பாண பண்பாட்டு நடுவம்' எனப் பெயர் சூட்ட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாண கலாசார நிலையத்தை 'சரஸ்வதி மஹால்' எனப் பெயர் சூட்டவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரியிருந்த நிலையில், யாழ். மாநகர சபை இவ்வாறானதொரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் காலை மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநகர சபை உறுப்பினர் சோமன் சிறில் யாழ்ப்பாண கலாசார நிலையத்தை மாநகர சபைக்கு வழங்க வேண்டும் எனும் பிரேரணையை சபையில் முன்வைத்தார்.

சபையில் பிரசன்னமாகியிருந்த அனைத்து உறுப்பினர்களும் சம்மதம் தெரிவிக்க பிரேரணை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஒட்டுமொத்தத் தமிழர்களும் கரிநாளாக பிரகடனப்படுத்திய நாளில் இந்தக் கட்டிடத்தை யைளிக்கும் நிகழ்வை நடத்தி எங்களுடைய முகத்தில் கரியைப் பூசி உள்ளதாக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் மாநகர சபை உறுப்பினர் வை. கிருபாகரன் குற்றஞ்சாட்டினார். அத்தோடு இந்தக் கட்டத்தைக் கையளிக்கும் நிகழ்வில் யாழ். மாநகர முதல்வருக்கு சரியான முறையில் கௌரவம் வழங்கப்படாதது தனக்கும் சபைக்கும் மனவேதனையை ஏற்படுத்தியதாக வை.கிருபாகரன் தெரிவித்தார்.

இதேவேளை, இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியில் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கலாசார நிலையம் மாநகர சபையைத் தவிர்த்து வேறு யாரிடமும் வழங்கப்பட மாட்டாது என இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளதாக மாநகர முதல்வர் இ.ஆர்னோல்ட் சபையில் தெரிவித்தார்.

கற்பிட்டியில் கரையொதுங்கிய 14 பைலட் திமிங்கிலங்கள்

இந்தியப் பெருங்கடலில் அண்மைக்காலமாக நில அதிர்வு காரணமாகவே கற்பிட்டியில் 14 பைலட் திமிங்கிலங்கள் கரை ஒதுங்கியிருக்க லாம் என்று கடல்சார் நிபுணர்கள் தெரிவித் துள்ளனர்.

இலங்கையின் வடமேற்கு முனையின் கற்பிட்டியிலுள்ள கந்தகுளியவில் அண் மையில் திமிங்கிலங்கள் கரையொதுங்கின. இந்த பாலூட்டிகளை மீண்டும் கடலுக்குள் அனுப்ப அதிகாரிகள் சுமார் 15 மணிநேரம் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டனர்.

இதன்போது, 11 திமிங்கிலங்களை பாதுகாப் பாக கடலுக்குள் திருப்பி அனுப்பிய நிலையில், 3 திமிங்கிலங்கள் உயிரிழந்தன. இறந்த திமிங்கிலங்களின் பிரேத பரிசோதனையை முடித்த பின்னர், அது தொடர்பில் நீதிமன்றத் துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று அதிகா ரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் உள்ளூர் பாதுகாப்பு தன்னார்வ தொண்டு நிறுவனமான பல்லுயிர் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு தலைமைதாங்கும், கடல் உயிரியலாளர் ரணில் நாணயக்கார, திமிங்கிலங்கள் இலங்கைக் கரையை அடை வதற்கு இரண்டு முக்கிய காரணங்களை குறிப் பிட்டுள்ளார்.

பைலட் திமிங்கிலங்கள், பெரும்பாலும் தங்கள் தலைவரைப் பின்தொடர்கின்றன. தலைவர் நோய்வாய்ப்பட்டால் கரையை அடைகின்றது. அண்மையில் உயிரிழந்த 3 திமிங்கிலங்களில் ஒன்று தலைவராக இருக்கலாம் என்று கருதப் படுகிறது. அத்துடன், இந்தியப் பெருங்கடலில் சமீபத்தில் ஏற்பட்ட நில அதிர்வுகளும் இந்த திமிங்கிலங்கள் கரையை அடையக் காரணமாக இருக்கலாம் என்று ரணில் நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்ற சம்பவங்கள் இலங்கையிலும் இதற்கு முன்னர் நிகழ்ந்துள்ளன. 2020ஆம் ஆண்டில், 120 பைலட் திமிங்கிலங்கள் பாணந்து றையின் மேற்கு கடற்கரையில் கரையொதுங்கின. கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தால் வெளியிடப்பட்ட ஸ்போலியா ஜெய்லானிகா என்ற சஞ்சிகையின்படி, இலங்கையின் கரை யோரங்களில் திமிங்கிலங்கள் கரையொதுங்கு வது தொடர்பான சம்பவங்கள் 1889ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் இருந்து இடம்பெறுவது பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மையில் கரையொதுங்கிய திமிங்கிலங்களின் மீது சில சிறுவர்கள் ஏறியிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனைக் கண்டித்துள்ள அதிகாரிகள், மிரு கத்தை துன்புறுத்துதல் மற்றும் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் சந்தேகநபர்களுக்கு எதிராக குற்றம் சுமத்த முடியுமெனவும் கட்டிக் காட்டியுள்ளார்கள்.

திமிங்கிலங்கள் தண்ணீருக்கு வெளியே இருக்கும்போது, சுவாசிக்க கடினமாக இருக்கும். எனவே, மக்கள் அவற்றின் மீது ஏறினால், அது நிலைமையை மேலும் மோசமாக்கும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காரணம் வெளியாகியது

ஐ.எம்.எப். கடன் திட்டத்தை மார்ச்சில் நடைமுறைப்படுத்தலாம்!

ஜனாதிபதி ரணில் எதிர்பார்ப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தை மார்ச் மாதத்தில் நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும், தற்போது குறைந்துவரும் பணவீக்கத்துக்கேற்ப வங்கி வட்டி வீதத்தைக் குறைப்பது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிறிய மற்றும் பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அவற்றைத் தீர்க்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்வதற்காக நேற்று முன்தினம் (16) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

எரிபொருள் விலை, மின் கட்டணம், இயந்திரப் பராமரிப்புச் செலவு, போக்குவரத்து செலவு உள்ளிட்ட அனைத்து உற்பத்தி மற்றும் நிர்வாகச் செலவுகள் உயர்ந்துள்ளதால், அரிசியின் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது. தற்போதைய நெல் உற்பத்தி விலையுடன் ஒப்பிடும்போது, சந்தையில் தற்போதுள்ள அரிசி விலைக்கு தமது உற்பத்திகளை விற்பனை செய்தால் நட்டம் ஏற்படுவதாக அரிசி ஆலை உரிமையாளர்கள் இங்கு சுட்டிக்காட்டினர்.

அதேபோன்று, நெல் கொள்வனவு செய்ய பெற்றுக்கொண்ட வங்கிக் கடனுக்கு 28 வீத வட்டி செலுத்தவேண்டியிருப்பதனால் ஏற்படும் சிரமங்களையும் அவர்கள் முன்வைத்தனர். பயிர்ச்செய்கையின்போது விவசாய இடுபொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்து வருவதால், நெல் உற்பத்திச்செலவு அதிகரித்துள்ளதாகவும், விவசாயிகள் பயிர்ச்செய்கைக்காக வங்கிகளில் பெற்ற கடனுக்கு அதிக வட்டி செலுத்தவேண்டியுள்ளதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறு, விவசாயிகளின் உற்பத்திச் செலவும், அரிசி ஆலை உரிமையாளர்களின் அரிசி உற்பத்திச் செலவும் அதிகரித்துள்ளதால், அரிசி ஆலை தொழிலை முன்னெடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும், அரசாங்கம் இதற்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவதானம் செலுத்திய ஜனாதிபதி, நுகர்வோர் மற்றும் விவசாயிகளுக்கு சகலவிதமான நிவாரணங்களையும் வழங்குவது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு எனக் குறிப்பிட்டார்.

விவசாயிகளின் உற்பத்திச் செலவைக் குறைத்து உற்பத்தியை அதிகரிப்பதற்கும், அரிசி ஆலை உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வைக் காண்பதற்கும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி சரேன் படகொட, அரச அதிகாரிகள், முன்னணி அரிசி ஆலை வர்த்தகர் டட்லி சிறிசேன உட்பட சிறிய மற்றும் பாரிய அரிசி உற்பத்தி ஆலைகளின் உரிமையாளர்கள் உள்ளிட்ட பலரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

கியூ.ஆர்.கோட் இல்லாமல் எரிபொருள் வழங்க மறுத்த ஊழியர் மீது வாள்வெட்டு

கியூ.ஆர்.கோட் இல்லாமல் பெற்றோல் வழங்க மறுத்த எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் யாழ். நாவற்குழி எரிபொருள் நிலையத்தில் நேற்று முன்தினம் (16) இரவு 10.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மோட்டார்சைக்கிளில் வந்த இருவர் கியூ.ஆர்.கோட் இல்லாமல் பெற்றோல் வழங்குமாறு வற்புறுத்தியுள்ளனர்.

இதன்போது பெற்றோல் வழங்க மறுத்த ஊழியர் மீது வாளால் வெட்டியுள்ளனர். மோட்டார்சைக்கிளில் வந்த இருவரே இந்த வாள்வெட்டை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த ஊழியர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

2000 இலங்கையர்களுக்கு இஸ்ரேலில் வேலைவாய்ப்பு

இந்த ஆண்டு இலங்கையிலுள்ள 2,000 தாதியர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க இஸ்ரேல் இணங்கியுள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இஸ்ரேலின் விசேட பிரதிநிதிகள் குழு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவை சந்தித்தபோது, இதற்கான உறுதிப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம், இஸ்ரேலுக்கான தாதிய தொழில்வாய்ப்பை வழங்குவதற்காக இடைத்தரகர்கள் பணம் கோரினால், அது குறித்த தகவல்களை தமக்கு வழங்குமாறு, அந்த நாட்டின் குடித்தொகை மற்றும் புலம்பெயர்வுக்கான அமைப்பின் பிரதிநிதிகள் கோரியுள்ளனர்.

மக்கள் மீது வரிகளை சுமத்தாமல் மாற்றுவழிகளை கையாளுங்கள்!

மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் வேண்டுகோள்!

நாளுக்கு நாள் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதால் மக்கள் வாழ வழியின்றி தவிப்பதாகவும் அவர்களின் கஷ்டங்களை போக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், புத்தளம் மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் கடந்த வியாழக்கிழமை (16) இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

"மின்சாரக் கட்டணம் இலங்கையில் என்று மில்லாதவாறு அதிகரித்துள்ளது. தொடர்ந்தும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக அறிவித்துள்ளார்கள். இவ்வாறான அழுத்தங்களால் மக்கள் எப்படி வாழ்க்கையை நடத்துவது என்று தின்டாடுகின்றனர்.

கடந்த ஆட்சியாளர்களின் தவறுகள், பிழையான வழிநடத்தல்கள் மற்றும் அநியாயங்களினாலேயே எமது நாடு இன்று குட்டிச்சுவராகி, அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ளது. அவ்வாறானவர்களை சேர்த்துக்கொண்டே ஜனாதிபதி ஆட்சியை நடத்துகின்றார். அவர்களை பகைக்காமல் பாதுகாக்கும் நிலையை ஏற்படுத்தி ஜனாதிபதி பல தவறுகளை மேற்கொள்கின்றார். இது நாட்டுக்குச் செய்கின்ற பாரிய துரோகமாகும். பொருளாதாரத்தை மீட்டெடுக்க மக்கள் மீது வரிகளை சுமத்துகின்றனர். கடந்த கால ஆட்சியாளர்கள் மேற்கொண்ட தவறுகளால் ஏற்பட்ட நஷ்டத்தை மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முயற்சிப்பது பாரிய அநியாயமாகும். எனவே, மக்கள் மீது சுமையை சுமத்துவதை விடுத்து, கடந்த காலத்தில் ஆட்சிசெய்தவர்களிடமிருந்து பெற வேண்டியதைப் பெற்று மக்களைப் பாதுகாக்க வேண்டும்.

மேலும், உரியநேரத்துக்கு தேர்தலை நடத்தவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அரசாங்கமும் தேர்தல் ஆணைக்குழுவும் தனித்தனியாக பிரிந்து செயல்படுவதுபோன்றே என்னத் தோன்றுகின்றது. மக்களின் வாக்குரிமையை அறிந்து, ஜனநாயகத் தன்மையை உறுதிப்படுத்தவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

எனவே, அரசாங்கம் தேர்தல் ஆணைக்குழுவுடன் இணைந்து, எதிர்வரும் தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று அரசாங்கத்திடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேண்டுகோள் விடுக்கின்றது" என்றார்.

இளைஞர் பாராளுமன்ற வெளிவிவகார பிரதி அமைச்சர் இலங்கைக்கான துருக்கி தூதரக அதிகாரி சந்திப்பு



இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக் மற்றும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் முப்தி முயீன் இலங்கைக்கான துருக்கி நாட்டின் தூதரக மூன்றாம் செயலாளர் மொஹமட் பிலால் சக்லமை கொழும்பில் அமைந்துள்ள துருக்கி தூதரகத்தில் சந்தித்தனர்.

இச்சந்திப்பில், இலங்கையினதும் துருக்கி நாட்டினதும் வெளிவிவகார மற்றும் ராஜதந்திர உறவுகளின் நிலைமை தொடர்பாகவும் இளைஞர்களுக்கான வெளிவிவகார வாய்ப்புகள் உட்பட கல்வி, விளையாட்டு மற்றும் தலைமைத்துவம் போன்ற துறைசார் வகிபாகங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன. மேலும் பிரதானமாக அண்மையில் துருக்கி நாட்டில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கல்களை இளைஞர் பாராளுமன்றம் சார்பாக பகிர்ந்துகொண்டதோடு காயமடைந்தவர்களுக்கு விரைவில் குணமடைய அனுதாபங்களையும் இரங்கல் புத்தகத்தில் பகிர்ந்துகொண்டார்.

மேலும் இக்கலந்துரையாடலின்போது துருக்கி நாட்டின் மூன்றாம் செயலாளர் குறிப்பிடுகையில்,

இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற ரீதியில் தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்கள் ஆகியவற்றுடன் இணைந்து செயற்படுவதை வரவேற்பதாகவும், எதிர்காலத்தில் எம்மோடு இணைந்து செயற்பட அவர்கள் விரும்புவதாகவும் குறிப்பிட்டார். மேலும் அதற்கான முன்மொழிவுகளை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இக்கலந்துரையாடலின் பின்னர், இரு நாடுகளினதும் உறவு இளைஞர்களின் ஊடாகவும் மேலும் வலுப்படுத்த சிறந்த நடவடிக்கைகள் எதிர்காலங்களில் எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டனர்.

பெண் கான்ஸ்டபிள் நீராடுவதை படம்பிடித்த பயிலுநர் கான்ஸ்டபிள் கைது

கஹதுடுவ பொலிஸ் நிலையத்தில் பணி புரியும் பெண் கான்ஸ்டபிள் ஒருவர், பெண் அதிகாரிகள் தங்குமிடத்தில் குளிப்பதை மறைந்து நின்று கைபேசியில் படம் பிடித்ததாகக் கூறப்படும் பயிலுநர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தான் குளியலறைக்குச் சென்று நீராடிக் கொண்டிருந்தபோது, சந்தேகநபரான கான்ஸ்டபிள் தன்னை படமெடுப்பதைக் கண்டதாக குறித்த பெண் கான்ஸ்டபிள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்தார். முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபரான பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிள் கைதுசெய்யப்பட்டதுடன், அவரது கைபேசியும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் கைப்பற்றப்பட் டுள்ளது.

சந்தேகநபரான பொலிஸ் கான்ஸ்டபிளின் கைபேசியில் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று காணொளிகள் இருந்தமை கண்டறியப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதேவேளை, சந்தேகத்திற்குரிய பொலிஸ் கான்ஸ்டபிளும் பணி இடைநீக்கம் செய்யப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

50 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது

50 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலின் தலைவன் 'டுபாய் ஜூட்' என்பவரின் உதவியாளர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோனஹேன முகாமைச் சேர்ந்த பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் (16) கந்தானை பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபரிடமிருந்து 1.5 கிலோ ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் வசிக்கும் 31 வயதுடைய சந்தேகநபர் டுபாய் ஜூட்டின் போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பை இயக்கிவருவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த வர்த்தகர் ஒனேஷுக்கு பலமுறை கொலை மிரட்டல் விடுத்த அவரது மனைவி

விசாரணையில் அம்பலம்!

ஜகார்த்தாவிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் சடலமாக மீட்கப்பட்ட கோல்வர தொழிலதிபர் ஒனேஷ் சுபசிங்கவின் மரணம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதற்கமைய, பிரேரில் நாட்டைச் சேர்ந்த மனைவியால் இலங்கையில் பல சந்தர்ப்பங்களில் ஒனேஷுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஒபெக்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், கோல்வர வர்த்தகருமான சுபசிங்கவின் கொலை, இலங்கையில் திட்டமிட்டு இந்தோனேசியாவில் நிறைவேற்றப்பட்டமை குறித்து விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு பொலிஸ் மா அதிபர், பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்படி, இந்தோனேசிய சட்ட அமுலாக்க அதிகாரிகளின் தற்போதைய விசாரணைகளுக்கு மேலதிகமாக, மரணம் தொடர்பான முக்கிய விடயங்களை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் திரட்டியுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கொழும்பிலுள்ள சுபசிங்கவின் இல்லத்திற்குச் சென்று அங்குள்ள பணியாளர்களிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்ததாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன், கைரேகை மாதிரிகளையும் பெற்று பரிசோதனைக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தடயவியல் ஆய்வுக்காக அதிகாரிகள், குறித்த வீட்டிலிருந்து பல பொருட்களையும் பெற்றுள்ளனர்.

வீட்டுப் பணியாளர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில் ஒனேஷுக்கும் பிரேரலிலைச் சேர்ந்த அவரது மனைவிக்கும் இடையே பல தகராறுகள் இருந்ததாகவும், அந்த சமயங்களில் ஒனேஷின் மனைவி அவருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும் அவர்கள் விசாரணை அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

அவரது மனைவி மகளைக் கூட்டிக்கொண்டு பிரேரலிலுக்குச் செல்ல பல சந்தர்ப்பங்களில் முயற்சி செய்ததாகவும், அந்த முயற்சிகளுக்கு ஒனேஷ் எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஒனேஷின் மனைவி அவரது கொலைக்குப் பிறகு, இந்தோனேஷியாவை விட்டு வெளியேறி டோஹாவுக்கும் அங்கிருந்து பின்னர் பிரேரலிலின் சாவோ பாவ்லோவுக்குச் சென்றதாகவும் தெரிய வந்துள்ளது.

ஒனேஷின் மனைவி மற்றும் அவரது உதவியாளரை கைதுசெய்ய குற்றப்புலனாய்வுத் திணைக்களம் சர்வதேச பொலிஸாரின் (இன்டர்போல்) உதவியை நாடவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

லயனல் குணதிலக்கவின் இலங்கை நடனம் மற்றும் இசை அறிமுகமும் மேடை நாடகக் கலைஞர்களின் தகவல்கள் அடங்கிய பட்டியல் வெளியீட்டு விழாவும் நேற்று முன்தினம் (17) வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது. பிரதம அதிதிகளாக புத்தசாசன மத கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மற்றும் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன ஆகியோர் கலந்துகொண்டனர்.

பலி கொண்ட பூகம்பம்

துருக்கியிலும்
சிரியாவிலும்
பூகம்பம் தோன்றியே
மக்களின் உயிர்களைப்
பறித்தது..!
கண்ணீரும்
கவலையுமாக(ப்)
பனியுறைந்த வீதிகளில்
பயத்தில் சனங்கள்
தெறித்தன..!

ஆழ்ந்த தூக்கத்தில்
காவு கொண்டே
சுடுகாடாக்கியது இயற்கை
அனர்த்தம்!
பரிதாபம் நிறைந்தே
இடருக்குள் சிக்கிய
மக்களின் வாழ்வும்
உணர்த்தும்..!

அனாதைகளும்
விதவைகளும்
உருவாகிடக் காரணமான
பூகம்பத்திற்குள் சிக்கியது
நாடும்..!
மீட்புப் பணிகளும்
துரிதமாய்ச் செயல்பட்டும்
துயரம் நீங்காது வாடும்..!

ஆயிரக் கணக்கில்
மரணத்தைத் தந்தே
அமைதியாகிப் போனதோ
சீற்றம்..!
காலம் கடந்தாலும்
மனதில் நீங்காது
மீண்டெழுவதால் வராது
மாற்றம்..!

குழந்தைகளும்
முதியோர்களும்
படும் வேதனை
ஆழ்மனதை உருக்குது
இறைவா..!
நடந்ததை நினைக்கையில்
மாறாது தொடர்ந்தே
இடரையே தருகிறது
நிறைவா..!

ஏன் வந்தாய்
எதற்குக் கொன்றாய்
அப்பாவி உயிர்களைப்
பூகம்பமே..!

தாங்காது
தவிக்கிறது(த்)
தூங்காது விழிக்கிறது
உனது அழிவால்
துன்பமே..!

பரிதாபம் நிலைத்தே
புன்னகையும் பறிபோய்
சிலையாகிப் போனது
வாழ்வும்!
செய்வதறியாது
திகைத்தே
வசந்தமும் தொலையவே
அணைத்து நிற்கிறது
தாழ்வும்..!

இடிபாட்டிற்குள் சிக்கியே
சிதைந்த மக்களை(க்)
கண்டதும் கொதிக்கின்றன
உள்ளங்கள்..!
இறைவனிடம் கையேந்தி
பிரார்த்தனை செய்திட
எல்லோரும் கையேந்தி
நில்லுங்கள்..!

- ஏழூர் கவிமாமணி
எம்.ரி.எம்.அன்ஸார்.-

வாழ்க்கை நெறி

ஆணவந் தன்னில்
வேணவாக் கொண்டால்
அழிவாகும் - பெரும்
இழிவாகும்
நாணயம் நீங்கி
கோணலாய் வாழ்ந்தால்
நலம் வீழும் - அந்தக்
குலம் தாழும்

வஞ்சனை செய்யும்
நெஞ்சினைக் கொண்டால்
வழி மாறும் -பெரும்
பழி ஊறும்
வெஞ்சினம் நாளும்
மிஞ்சிட நின்றால்
வினை சூழும் - அந்த
மனை தாழும்

அடுத்தவர் வாழ்வைக்
கெடுத்திட நின்றால்
அறம் சாயும் -வாழ்வின்
திறம் ஓயும்
ஒடுங்கிட வைத்துப்
பிடுங்கிடும் செல்வம்
உதவாது - அதிற்
சதமேது

குறையினை நீக்கு
நிறையினைத் தூக்கு
குணம் வாழும் - வாழ்வில்
மணம் சூழும்
பொறையினை ஏற்று
இறையினைப் போற்று
புலமோங்கும் - வாழ்வில்
மலம்நீங்கும்

-"கவிச்சுடர்"
மு.மீ.அமீர் அலி-

பணம் வேண்டும்

சுவையாக உண்பதற்கு
சுளை சுளையாய் பணம் வேண்டும்
சுமையின்றி நிமிர்வதற்கும்
சுளை சுளையாய் பணம் வேண்டும்

கனதியான பொருள் வாங்க
கத்தை கத்தையாய் பணம் வேண்டும் - நல்
கனவுகள் யாவும் மெய்ப்பட
கத்தை கத்தையாய் பணம் வேண்டும்

சந்தோஷங்கள் சங்கமிக்க
சல்லி சல்லியாய் பணம் வேண்டும்
சஞ்சலங்கள் சரிந்திட
சல்லி சல்லியாய் பணம் வேண்டும்

மண்ணில் மனையொன்று கட்டிட
மணி மணியாய் பணம் வேண்டும்
மனதும் அதனுள் லயித்திட
மணி மணியாய் பணம் வேண்டும்

அருமையாய் வாழ்ந்து காட்டிட
அடுக்கடுக்காய் பணம் வேண்டும்
அகத்தில் மகிழ்வு மிகைத்திட
அடுக்கடுக்காய் பணம் வேண்டும்

எரிவாயு எரிபொருளின் தேவைக்கு
எக்கச்சக்கமாய் பணம் வேண்டும்
ஏழ்மை தொலைந்து ஏக்கங்கள் விலகிட
எக்கச்சக்கமாய் பணம் வேண்டும்

கண்ணில் காணும் பொருட்களை நுகர்ந்திட
கலர் கலராய் பணம் வேண்டும்
கச்சிதமாய் வாழ்ந்து காசினியில் தலைநிமிர
கலர் கலராய் பணம் வேண்டும்.

- உசனார் எம்.பஷீர்.
ஏறாவூர்.-

நேற்று இன்று நாளை

ஒற்றுமை என்னும்
கயிற்றை
பற்றிக்கொள்ளுங்கள்
நேற்று மேடைபோட்டு
ஊரைக் கூட்டி
பாட்டுப்பாடி, கூத்தடித்து
ஆயிரம் விளக்குகளுடன்
பொன்னாடை போர்த்தி
கைதட்டலின் மத்தியில்
சொல்லிவிட்டு சென்றான்
அரசன்
இன்று பற்றிக்கொள்ள
கயிறுகள் இன்றி
கடைத்தெருவுகளிலும்

சாக்கடைகளின்
ஓரங்களிலும்
முகவரிகளை தொலைத்து
விட்டு நாங்கள்தான்
அரசன்
நாங்கள்தான்
மந்திரிகள்
நாங்கள்தான் நீங்கள்
என்று
அரங்கேறுகிறார்கள்
நாளை
நாங்களெல்லாம்
நீங்களல்ல

என்று பாடம்
புகட்டாதவரை
அவர்கள்
பள்ளிக்கூடங்களிலும்
மேய்ச்சலுக்கு
வருவார்கள்.

- எம் சீ ஏ பரீட்
சாய்ந்தமருது -

தூறல்கள்

முடியலடா சாமீ!

நேற்றிரவு, தூங்கும் முன் என் மகள் என்னிடம் கேட்டாள். "ஏன் அப்பா கொசு ராத்திரில மட்டும் நிறைய கடிக்க வருது.... அது எப்ப அப்பா தூங்கும்?"

"அது தூக்கம் வரும்போது தூங்கும்..."
"எப்ப தூக்கம் வரும்பா?"
"அது சாப்பிட்டவுடன் தூங்கும்..."
"கொசுக்கு வீடு எங்கப்பா?"
"அதுக்கு வீடே இல்லை..."
"ஏம்பா வீடே இல்லை?"
"அது ரொம்ப சின்னதா இருக்கே... அதான் வீடு இல்ல..."
"நான் ரொம்ப சின்ன பிள்ளைதானே ... எனக்கு வீடு இருக்கே....."
"இது அப்பா உனக்கு கட்டி தந்தது..."
"அப்போ கொசுவுக்கு அப்பா அம்மா இல்லையா அப்பா."
"அந்த அப்பா அம்மா கொசுவும் ரொம்ப சின்னதா இருக்குமா. அதான் அதுக்கு வீடு இல்ல..."
"கொசுவுக்கு கொசுன்னு யாருப்பா பேர் வைச்சது?"
"கடவுள்..."
"கடவுளைக் கொசு கடிக்குமா அப்பா ?"
"கடிக்காது..."
"ஏம்பா கடிக்காது?"
"கடிச்சா கடவுள் தண்டிச்சிடுவார்..."
"அப்போ கடவுளுக்கு கோவம் வருமா அப்பா ?"
"வரும். தப்பு செய்தா கடவுள் அடிப்பாரு..."
"கடவுள் நல்லவராப்பா?"
"ரொம்ப நல்லவர்...."
"அப்புறம் ஏம்பா கொசுவை அடிக்கிறாரு?"
"அது அப்படித்தான் நீ தூங்கு..."
"கொசு ஏம்பா நம்மளைக் கடிக்குது?"
"அதுக்கு பசிக்குது..."
"கொசு இட்லி சாப்பிடுமா?"
"அதெல்லாம் பிடிக்காது..."
"கொசு கூல்ட்ரிங்க்ஸ் குடிக்குமா?"
"வாயை மூடிட்டு தூங்குடா செல்லம்..."
"ஒரே ஒரு கேள்வி அப்பா ?"
"கேட்டுத் தொலை"
"கொசுவுக்கு எத்தனை பல் இருக்கும்?"
"அதுக்கு பல்லே இல்லை..."
"பிறகு எப்படி கடிக்கும்?"
"அய்யோ ஏண்டா உசுர வாங்குற? இப்ப நீ வாய மூடப்போறியா இல்லையா??"
"நாம தூங்கும் போது வாயும் தூங்குமா அப்பா..?"
இன்றிலிருந்து தினமும் இரவு வேலைக்கும் போகலாம்னு முடிவு பண்ணி, வேலை தேடிகிட்டிருக்கேன்... இருந்தால் சொல்லுங்கள்!

தமிழன் தர்பார்

இது எங்க ஏரியா

கடையேழு வள்ளல்கள் யார்?

(01) பேகன் – மயிலுக்கு போர்வை அளித்தவர்.
(02) பாரி – முல்லைக் கொடி படர தேர் வழங்கியவர்.
(03) காரி – தன் குதிரையையும் ஏனைய செல்வங்களையும் வாரி வழங்கியவர்.
(04) ஆண்டிரன் – நாகம் வழங்கிய அரிய ஆடையை சிவபெருமானுக்கு அளித்தவர்.
(05) அதியமான் – நீண்ட நாள் வாழக்கூடிய அரிய நெல்லிக்கனியை தான் உண்ணாமல் ஔவைக்கு கொடுத்தவர்
(06) நள்ளி – தன்னை அண்டி வந்தவர்க்கு தான் யார் என்பதை வெளிப்படுத்தாமல் உதவி செய்ததால்...
(07) ஓரி – விற் போரில் வல்ல ஓரி கொல்லி மலைக் கவிஞர்களுக்கு தன் நாட்டையே பரிசளித்தவர்.

புலிக்கு எதிரில் நின்ற ஆடு!

"தாய் சொல்லைத் தட்டாதே" படத்தைத் தயாரிக்க முடிவு செய்ததும், கதையை எம்.ஜி.ஆரிடம் கூறுவதற்காக என்னை அவரிடம் தேவர் அழைத்துச் சென்றார். என்னைப் பார்த்ததும் எடுத்த எடுப்பிலேயே, "நீங்கள் சிவாஜி படங்களுக்கு வசனம் எழுதுகிறீர்கள் அல்லவா?" என்று எம்.ஜி.ஆர். கேட்டார். 'பாசமலர்', 'படித்தால் மட்டும் போதுமா' ஆகிய படங்களுக்கு வசனம் எழுதியிருப்பதாக தெரிவித்தேன்.

"நீங்கள் சிவாஜி பிலிம்ஸுக்கு நிரந்தர எழுத்தாளரா?" என்று எம்.ஜி.ஆர். கேட்டார். "இப்போதைக்கு அப்படித்தான்" என்றேன். "சிவாஜியை உங்களுக்கு எப்படி தெரியும்?" என்று கேட்டார், எம்.ஜி.ஆர்.

"ஜெமினி அறிமுகம் செய்து வைத்தார்" என்றேன். "தாய் சொல்லைத் தட்டாதே' படத்துக்கு வசனம் எழுதி முடித்துவிட்டீர்களா?" என்று கேட்டார். "எழுதி முடித்துவிட்டேன்" என்றேன். "படப்பிடிப்புக்கு முன் முழுத்துவிடுவது நல்ல வழக்கம்தான்" என்றார் எம்.ஜி.ஆர்.

புலிக்கு எதிரில் நிற்கும் ஆடு போன்ற நிலையில் நான் இருந்தேன்.

எம்.ஜி.ஆர். என்னை சிவாஜியின் ஆள் என்று முடிவு கட்டிவிட்டார் என்று எனக்குத் தெரிந்தது. படத்திலிருந்து விலகிக்கொள்ளலாமா என்று நினைத்தேன். ஆனால், "தாய் சொல்லைத் தட்டாதே" படத்துக்கு முழு வசனமும் எழுதி முடித்துவிட்டதால், என்ன செய்வது என்று தெரியவில்லை.

இந்நிலையில், படப்பிடிப்பு ஆரம்பமானது. தாயில்லாத பெண்ணான சரோஜாதேவியின் தந்தை எம்.ஆர்.ராதா. தந்தையற்ற மகனான எம்.ஜி.ஆரின் தாய் கண்ணாம்பா. அவர் கைம்பெண் ஆனதற்குக் காரணமே எம்.ஆர்.ராதாதான்.

தனது காதல் திருமணத்திற்கு தந்தையின் அனுமதி கிடைத்துவிட்டது என்று சரோஜாதேவி, எம்.ஜி.ஆரிடம் கூறுவது போன்ற காட்சி படமாகியது.

"உங்கம்மாவை எங்க வீட்டுக்கு அனுப்பி, எங்க அப்பாகிட்ட என்னை பெண் கேட்கச் சொல்லுங்க" என்றார், சரோஜாதேவி.

"எங்கப்பா இறந்ததற்கு அப்புறம், எங்க அம்மா எந்த மங்கல காரியத்திலேயும் பங்கெடுக்கிற வழக்கம் இல்லை.

பொதுவாக கணவரை இழந்த பெண்களை பார்க்கிறதே அபசகுணம் என்று சொல்வாங்க. ஆனால் நான் விடிந்ததும் முதலில் என் அம்மா முகத்தில்தான் விழிக்கிறேன். அதனால்தான் எனக்கு வெற்றி மேல் வெற்றி கிடைக்கிறது. எனக்கு எப்பவும் தாய்தான் தெய்வம். அந்த தாய் சொல்லை தட்டமாட்டேன்" என்பார், எம்.ஜி.ஆர்.

இந்த வசனத்தை நான் படித்துக் காட்டியதும் எம்.ஜி.ஆர். என்னை தன்னோடு சேர்த்து அணைத்துக்கொண்டு, என் தோளில் தட்டிக்கொடுத்தார். பின்னர், தாயை பற்றி நீங்கள் எழுதி இருக்கும் வசனம் வார்த்தைக்கு வார்த்தை எனக்குப் பொருந்துகிறது. இது எனக்காகவே எழுதப்பட்டது போல் இருக்கிறது" என்றார்.

எம்.ஜி.ஆரைப்பற்றி, தவறான புள்ளிகள் வைத்து என் மனமுற்றத்தில் நான் போட்டிருந்த தவறான கோலம், முற்றிலுமாக அழிந்து போய்விட்டது.

- ஆரூர்தாஸ் பேட்டியிலிருந்து

இவர் இரும்பு மனிதர்தான்!

வல்லபபாய் படேல் மனைவி ஜாவேரிபாய் மருத்துவமனையில் தீவிர சிகிச்சையில் இருந்த நேரம். அதே நேரத்தில் ஆனந்த நகர் நீதிமன்றத்தில் கொலை வழக்கு ஒன்றில் வல்லபபாய் வாதாடிக்கொண்டிருந்தார். குற்றஞ்சாட்டப்பட்டவர் உண்மையில் நிரபராதி என்பதால் அவரை எப்படியும் காப்பாற்றி விட வேண்டும் என்று வெறியோடு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்துகொண்டிருந்தார். அப்போது அவருக்கு அவசரத் தந்தி வந்தது.

வல்லபபாய் தந்தியை வாங்கி படித்தார். பிறகு அதை மடித்து தன் சட்டைப்பைக்குள் வைத்தார். தன் தரப்பு வாதத்தைத் தொடர்ந்தார். வாத பிரதிவாதங்களுக்குப் பிறகு நீதிமன்றம் கலைந்தது.

தந்தி யாரிடமிருந்து? என்ன செய்தி? வல்லபபாயின் நண்பர் கேட்டார்.

"என் மனைவி இறந்து விட்டார்" வல்லபபாய் பதிலளித்தார்.

"மனைவி இறந்த செய்தி வந்த பிறகுமா, விவாதித்துக் கொண்டிருந்தீர்கள்" கேட்ட நண்பர் துடிதுடித்தார்.

என்ன செய்வது? மனைவி இறந்து போனாள். நான் உணர்ச்சிவசப்பட்டு செயல்பட்டால் இங்கே என் கட்சிக்காரர் கொலையாளியாக குற்றஞ்சாட்டப்பட்டு மரணதண்டனை அடைந்துவிடுவார். மனைவியை மரணத்திலிருந்து தடுக்க முடியவில்லை. இவரையாவது மரணத்திலிருந்து காப்பாற்றத்தான் மனதை கல்லாக்கிக்கொண்டேன் – என்றார் வல்லபபாய்

ஆண் : இன்னிக்கு நைட் நாம ஊர விட்டு ஓடிப் போய் விடலாம்...
பெண் : எனக்கு தனியா வர பயமா இருக்கு..
ஆண்: அப்ப உன் தங்கச்சியையும் கூட்டிட்டு வா...



காரைக்கவி

சீத்துவக்கேது 227

பெரிய ஆக்களுக்கு உந்த சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், நீச்சல் மட்டும் என்டில்லை. உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம், செல், டாம், பெட்மின்டன், டேபிள் டென்னிஸ் போட்டியள் எல்லாம் நடக்கும். பெட்மின்டன், கரப்பந்தாட்டம் ரெண்டும் நல்லியக்கச் சபைக்கு முன்னுக்கு உள்ள மைதானத்திலையும் அதுமாதிரி கிரிக்கெட் பிள்ளையார் கோயிலின்ரை வடகிழக்கு வீதியிலையும், உதைபந்தாட்டம் காரைநகர் இந்துவின்ரை மைதானத்திலையும் நடக்கும்.

செல், டாம், பெட்மின்டன் எல்லாம் கட்டிடத்துக்குள்ளை நடக்கும். அப்ப காரைநகரில காரை விளையாட்டுக் கழகம், கோவளம் விளையாட்டுக் கழகம், சோலையான் விளையாட்டுக் கழகம், அம்பாள் விளையாட்டுக் கழகம், களபூமி விளையாட்டுக் கழகம், தோப்புக்காடு விளையாட்டுக் கழகம் என்டு நிறைய விளையாட்டுக் கழகங்கள் இருந்தன.

உந்தப் போட்டியள் எல்லாத்திலையும் எல்லாக் கழகங்களும் வலு ஆர்வமாகக் கலந்துகொள்ளும். சிலநேரம் அடிபிடி சண்டை சச்சரவு எல்லாம் வரும். என்டாலும் உந்தச் சண்டையள் வன்முறையில முடிஞ்சது குறைவு என்டுதான் சொல்லவேணும். குறிப்பா கிரிக்கெட், உதைபந்தாட்டம் நடக்கேக்கை மைதானம் முழுக்க ஒரே விசில் சத்தமும் கூக்காட்டல் சத்தமுமா இருக்கும். இந்தப் போட்டியள் எல்லாம் சனி ஞாயிற்றுக் கிழமைகளிலைதான் நடக்கும். அப்பதான் பள்ளிக்குப் போற பெடிபெட்டையள், வேலைவெட்டிக்குப் போறவை எல்லாம் போட்டியிலிலை பங்குபற்றுவினம்.

சித்திரை வரியப் பிறப்பை அண்டி நடக்கிற விளையாட்டு விழாவிலை வாரிவளவு பிள்ளையார் கோயில் தெற்கு வீதியில பாவர் பாடசாலை பெடிபெட்டையளுக்கெண்டு ஊரிப்பட்ட விளையாட்டு நிகழ்வுகள் நடக்கும். அண்டைக்கு பாவர் பாடசாலையில படிக்கிற அநேகமாக எல்லாப் பிள்ளையளும் பங்குபற்றுற மாதிரிப் போட்டியள் இருக்கும். அப்ப எங்கட ஊரில நிறையக் குறிக்கங்குக் குறிச்சி உந்த நேர்சரி என்டிற பாவர் பாடசாலையள் இருந்தது.

கொட்டையை முளைக்கப் போடுற நாத்துப் பாத்தியளையும் ஆக்கள் நேர்சரி என்டிறதை. அந்தப் பாத்தியளைப் போடேக்கை ஆக்கள், மண்ணை வடிவாக் கொத்தி பசளை போட்டு வடிவாக் கவனமாப் பாத்து நேரத்துக்கு நேரம் தண்ணி விடுவினம். அப்பதான் அந்தப் பாத்தியிலை போட்ட கொட்டையள் வடிவா முளைச்சு நல்ல நாத்துகள் வரும். அதுகளை எடுத்து நடலாம்.

அதுமாதிரித்தான் உந்த நேர்சரியள் என்டிற பாவர் பாடசாலையளையும் வடிவாக் கவனிக்க வேணும். பிள்ளையளுக்கு தங்கட திறமையளை வளர்க்க சந்தர்ப்பம் குடுக்க வேணும். அப்பதான் அங்க படிக்கிற பிள்ளையள் எல்லாவிதத்திலும் நல்லா வளந்து வருவினம் என்டு அப்ப நெடுவும் சொல்லுறவர். அதாலதான் எங்கட நல்லியக்கச் சபையிலை பாவர் பாடசாலைப் பிள்ளையளுக்கு உந்த விளையாட்டுப் போட்டியளை வைக்கிறவை.

பேந்து காலப்போக்கில உந்த பாவர் பாடசாலைப் பிள்ளையளுக்கான போட்டியள் மாதம் மாதமும் நடந்தது. உண்ணான உந்தப் போட்டியளிலை விறுவிறுப்புக்கும் கலகலப்புக்கும் புறுபுறுப்புக்கும் பஞ்சமே இருக்காது. தாய் தேப்பனுக்கு தங்கட பெடி பெட்டை வெற்றி பெற வேணும் என்டும் பாவர் பாடசாலை டீச்சர்மாருக்கு இயல்பாவே உள்ள குணமான தங்கட பிள்ளையள் எல்லாம் வெற்றி பெற வேணும் என்டும் அவா இருக்கும். அதால போட்டி நடக்கேக்கை அங்கையும் இஞ்சையும் என்டு அமளிப்பட்டு ஓடுப்பட்டு அல்லோகலப்பட்டு தள்ளுப்பட்டுக் கொண்டு திரிவினம்.

வாரிவளவு பிள்ளையார் கோயில் வீதியில தென் கிழக்குப் பக்கத்தில இருக்கிற ஆலமரத்துக்கு பக்கத்தில ஒரு நிரந்தர மேடை கட்டி இருந்தது. அதில கடைசிநாள் பரிசளிப்பு அண்டைக்கு பேச்சு, பாட்டு, பட்டிமன்டம், கவியரங்கம், நாடகம் என்டு கலைநிகழ்வுகள் களைக்க நடக்கும்.

உன்னான சித்திரை வருசப்பிறப்பு காலத்தில வாரிவளவு நல்லியக்கச் சபை நிகழ்ச்சியள் எல்லாம் ஒரு பெரிய திருவிழா மாதிரி நடக்கும். அங்கால வலந்தலை துறைமுகப் பக்கங்களிலை இருந்து சனம் பஸ்லில வந்து வாரிவளவில குவியும். களபூமி இடைப்பிட்டி பக்கங்களில இருந்து சனங்கள் வயலுக்கால நடந்து வந்து சேருங்கள்.

இந்த சித்திரை வருஷ விளையாட்டுத் திருவிழா பெரிய கோலாகலமா நடக்கும். சனங்கள் உந்த மூண்டு நாளும் வேறை அலுவல்கள் ஒண்டும் பாக்காம வாரிவளவில வந்து குவியும். அதோமாதிரி ஐஸ் பழம் விக்கிறவை, கச்சான் விக்கிறவை, பகோடா விக்கிறவை, தும்பு மிட்டாய விக்கிறவை, சர்பத் விக்கிறவை, தேத்தண்ணி சோடா விக்கிறவை எல்லாம் மும்முரமா தங்கட தங்கட யாவரம் செய்யிறதுக்கெண்டு அங்கை குமிஞ்சு இருப்பினம்.

(இன்னும் ஆடுவம்)

இவ்வார இராசி பலன்கள்

விந்வ கலியுகணம் ஜோதிட நிலைம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

மேஷ ராசி அன்பர்களே!

மேஷம்

கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்ப விடயமாக வெளியூர்ப் பயணங்களை மேற்கொள்ளவேண்டி வரும். மகன் அல்லது மகளின் திருமண முயற்சிகளில் ஈடுபட சாதகமான வாரம். வேலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். வேறு வேலைக்கு முயற்சி செய்வதைத் தவிர்க்கவும். சக ஊழியர்களிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். அதிகாரிகள் அவ்வப்போது கண்டிப்பு காட்டுவார்கள். வியாபாரத்தில் லாபம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது என்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்திசெய்வதில் சற்று சுணக்கம் ஏற்படக்கூடும். பெண்களுக்கு மனதில் அவ்வப்போது இனம்புரியாத சோர்வு ஏற்பட்டு நீங்கும். பணியில் இருக்கும் பெண்களுக்கு சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

ரிஷப ராசி அன்பர்களே!

ரிஷபம்

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் சுமுகமான சூழ்நிலை ஏற்படும். திருமண வயதில் உள்ள பெண் அல்லது பிள்ளைக்கு திருமண முயற்சிகளை மேற்கொள்ளலாம். வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். ஒரு சிலருக்கு பதவி உயர்வு அல்லது ஊதிய உயர்வு கிடைப்பதற்கும் சாத்தியமுண்டு. சிலருக்கு அவர்கள் விரும்பிய இடத்துக்கு மாற்றல் கிடைக்கும். வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எதையும் இப்போது எடுக்கவேண்டாம். வாடிக்கையாளர்கள் அனுசரணையாக இருப்பார்கள். நெருக்கடியான நிலையிலும் பணியாளர்கள் ஆதரவாக இருப்பார்கள். பெண்களுக்கு சந்தோஷமும் நிம்மதியும் தரும் வாரம். புகுந்தவீட்டு உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு.

மிதுன ராசி அன்பர்களே!

மிதுனம்

பொருளாதார நிலை நல்லபடி இருக்கும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படாது. கடந்த சில நாட்களாகக் கணவன் - மனைவிக்கிடையே இருந்துவந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் ஏற்படும். அதிகரிக்கும் பணிச்சுமையின் காரணமாக உடல் அசதியும் மனச் சோர்வும் உண்டாகும். அரசாங்க வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். சக பணியாளர்கள் உங்களுக்கு அனுசரணையாக நடந்துகொள்வார்கள். விற்பனையும் லாபமும் எதிர்பார்த்தை விட கூடுதலாக இருப்பது மகிழ்ச்சி தரும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உறவினர்கள் வருகையால் பொறுப்புகள் அதிகரிக்கவும், அதன் காரணமாக அசதி ஏற்படவும் கூடும். பணி செய்யும் பெண்களுக்கு பணிச்சுமை குறைவதால் உற்சாகம் பெருக்கெடுக்கும்.

கடக ராசி அன்பர்களே!

கடகம்

எதிர்பார்த்தபடி வேலைவாய்ப்பு வருமானம் கூடுதலாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். பிள்ளைகள் மூலம் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் திருப்திகரமான போக்கே காணப்படும். வேறு வேலைக்குச் செல்ல விரும்புபவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். நல்ல வேலை கிடைக்கக்கூடும். பணியிடத்தில் சில மாற்றங்கள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகமாக வரும் என்றாலும் அதற்காக மிகவும் உழைக்கவேண்டி இருக்கும். பணியாளர்களால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். பெண்களுக்கு மனதுக்கு நிம்மதி உண்டாகும். கணவரிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

சிம்ம ராசி அன்பர்களே!

சிம்மம்

எந்த விடயத்திலும் நிதானம் தேவை. வருமானம் திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு சிறிய அளவில் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும் என்றாலும் உரிய சிகிச்சையின் மூலம் உடனே நிவாரணம் கிடைத்துவிடும். உங்கள் வேலைகளில் மட்டுமே கவனம் செலுத்தவேண்டியது முக்கியம். பதவி உயர்வையோ ஊதிய உயர்வையோ தற்போது எதிர்பார்க்க முடியாது. வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிடைப்பதில் பிரச்சினை எதுவும் இருக்காது. ஆனால், அலைச்சல் மட்டும் சற்று அதிகரிக்கும். நெருக்கடியான காலங்களில் வியாபாரத்தை எப்படியெல்லாம் பெருக்கலாம் என்ற சிந்தனை அதிகரிக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம் இது. பணியில் இருக்கும் பெண்களுக்கு அலுவலகப் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க முடியாதபடி வீட்டில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

கன்னி ராசி அன்பர்களே!

கன்னி

பொருளாதார வசதிக்குக் குறைவில்லை. செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். நெருங்கிய உறவினர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். அதனால், தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்த்துவிடலாம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அலுவலகத்தில் உங்களின் ஆலோசனைகள் உயர் அதிகாரிகளால் பாராட்டப்படும். அதன் காரணமாக சில சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. சக ஊழியர்களிடையே உங்கள் கௌரவம் உயரும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் விடயத்தில் கூடுதல் கவனம் தேவை. பொருட்களைக் கொள்முதல் செய்யும்போது எச்சரிக்கையாக இருக்கவும். பங்குதாரர்களின் ஆதரவு மனதுக்கு ஆறுதலாக இருக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு அதிக பொறுப்புகளால் உடல் அசதி உண்டாகும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் புகுந்த வீட்டில் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும்.

துலா ராசி அன்பர்களே!

துலாம்

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். அநாவசிய செலவுகள் எதுவும் இருக்காது. உடல் ஆரோக்கியத்தில் மட்டும் கவனம் தேவை. குடும்பம் தொடர்பான முடிவுகள் எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். அலுவலகத்தில் உற்சாகமாக உங்கள் பணிகளைச் செய்வீர்கள். ஒருசிலருக்கு இருக்கும் இடத்தில் இருந்து வேறு ஊருக்கு மாறுதல் கிடைக்கும். அதிகாரிகள் சில நேரங்களில் கண்டிப்பாகப் பேசினாலும் அனுசரணையாகவும் இருப்பார்கள். வியாபாரத்தில் சக வியாபாரிகளுடன் சுமுகமான போக்கு ஏற்படும். பங்குதாரர்கள் உதவிக்கரமாக இருப்பார்கள். குடும்ப நிர்வாகத்தை கவனிக்கும் பெண்களுக்கு உற்சாகமான வாரமாக இருக்கும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். முக்கியமான பொறுப்பில் இருப்பவர்கள் தங்கள் பொறுப்புகளில் மிகுந்த கவனத்துடன் செயல்படவேண்டியது அவசியம்.

விருச்சிக ராசி அன்பர்களே!

விருச்சிகம்

வருமானம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நண்பர்களால் சில சங்கடங்கள் ஏற்படலாம். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. சக பணியாளர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அதிகாரிகளிடம் பேசும்போது பதற்றம் வேண்டாம். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். வியாபாரத்தில் சற்று கூடுதலாக உழைக்கவேண்டி வரும். பற்று வரவு சுமுகமாக நடக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு பிரச்சினை இல்லாத வாரம். கணவரின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தரும். பணியில் இருக்கும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள்.

தனுசு ராசி அன்பர்களே!

தனுசு

குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் காணப்படும். பொருளாதார வசதிக்கு குறைவு எதுவும் இருக்காது. ஆனாலும், புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல்நலம் சீராகும். உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சி ஒன்று கூடிவரும். புதிய வேலைக்கு முயற்சி செய்துகொண்டு இருப்பவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். சில சலுகைகளும் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு லாபம் கிடைக்காது. போட்டிகளைச் சமாளிக்க வழமையாகப் பாடுபட வேண்டி வரும். சக வியாபாரிகளால் மறைமுக இடையூறுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம். பணியில் இருக்கும் பெண்களுக்கு பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும்.

மகர ராசி அன்பர்களே!

மகரம்

சகோதர வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் கொஞ்சம் அனுசரித்துச் செல்வது அவசியம். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு கையிருப்பைக் கரைக்கும். சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும். மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்லவும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட லாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்கள் விற்பனையை அதிகரிப்பதில் ஆர்வத்துடன் ஈடுபடுவார்கள். சக வியாபாரிகள் அனுசரணையாக இருப்பார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு பொறுப்புகள் கூடுவதால் சோர்வு உண்டாகும். பணவரவு திருப்தி தரும். தகவல் தொழில்நுட்பத் துறையில் பணி செய்பவர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும்.

கும்ப ராசி அன்பர்களே!

கும்பம்

நீங்கள் நீண்டநாட்களாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்துசேரும். பணவரவு அதிகரிக்கும். ஆனால், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். குடும்ப விடயத்தில் மற்றவர்களின் தலையீட்டை அனுமதிக்காதீர்கள். அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலையே காணப்படும். உங்களுடைய சமயோசிதமான ஆலோசனை பெரிதும் பாராட்டப்படும். புதிய வேலைக்கு விண்ணப்பித்து இருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பரபரப்பாகச் செயல்படுவீர்கள். பணியாளர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு செலவுகள் கூடுவதால் சற்று சிரமப்பட்டே சமாளிக்க வேண்டி வரும். பணி செய்யும் பெண்களுக்கு அலுவலகத்தில் சலுகைகள் எதையும் எதிர்பார்க்கமுடியாது.

மீன ராசி அன்பர்களே!

மீனம்

எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு வெளியூரில் இருக்கும் உறவினர்கள் மூலம் ஆதாயமும் ஏற்படும். திருமண வயதில் உள்ள மகன் அல்லது மகளின் திருமணம் தொடர்பான முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் உறவினர்களிடம் மதிப்பு அதிகரிக்கும். உங்கள் கோரிக்கை நிர்வாகத்தினரால் ஏற்றுக்கொள்ளப்படும். சக ஊழியர்கள் உதவிக்கரமாக இருப்பார்கள். வியாபாரத்தில் இன்னும் சில வாரங்கள் பொறுமையுடன் செயல்படவேண்டியது அவசியம். பங்குதாரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். புகுந்தவீட்டு உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும்.

மலையகத்தின் சொல்ல மறந்த கதை

(0 12-080)

வெள்ள வேட்டித்துண்டு
தலையில் வீச்சிருக்க
வேப்பிலையும்
மல்லிப்பூவும் விபூதி
தட்டில் கலந்திருக்க...

ஆத்தாளின் சித்துருக்க
மணிபோட்டு கட்டிருக்க
குங்குமமும் சந்தனமும்
வள்ளிம்மை
வெச்சிருக்க...

ஊருமக்க மேலவந்து
விளையாடும் எங்க
விளையாட்டு அம்மனுக்கு
வள்ளிம்மே கிழவி வந்து
தாலாட்டு பாடுகிறா....

கோப்பித் தோட்டத்திலே
மலைநாட்டு சனங்களது
தாயகத்து மண்ணவிட்டு
நீங்கி வரும்
வேளையில்...

நீங்காது சுமைகளோட
கண்ணீரு அருவியோட
கிராமத்து இசைகளையும்
மரபு நெறிகளையும்
அங்கேயே விட்டராமா
இங்க கொண்டுவந்து
சேத்தாங்க...

அதிலே பூசாரி முருகையா
புடி நூலு போருமாளு
கைராசி காரரென்று
வணங்கிவிடும்
ஆளுமுண்டு...

சிதைஞ்சிவிட்ட
சொந்தங்களில்
அவர் இருக்கும் இடம்
தெரியவில்ல...

இப்படி ஊருக்கு
ஒரு ஆளா
தோட்டங்களில்
பிடி நூலு போட்டிடவும்
விபூதி பிச்சிடவும்...

பேயொட்டி பாத்திடவும்
பயந்துபுள்ள
தெளிஞ்சிடவும்
வீச்ச தண்ணி அடிச்சிடவும்
ஆளொருத்தர்
இருந்தாங்க....

பதுளை தொங்கு
தோட்டத்திலே
வள்ளிம்மே கிழவித்தா
பாதிப்பேரு காக்கும்
கடவுளாக
நம்பி வாழ்ந்தாங்க...

கைராசிகாரியென்று
கிழவிக்கு பலவாறு
பேரிருக்கு
மூக்காயிக்கு பேரு கால
மருத்துவிச்சி நம்ம
வள்ளியம்மே
பாட்டிதானே....

எல்லாத்தையும்
அனுசரிச்சி
அன்போட நடத்துக்குவா
கிழவியோட பூர்வீகம்
இந்தியாதான்
மதுரபக்கோ
ஒரு ஊரு..

(சொல்ல மறந்த கதை
இன்னும் சொல்லப்படும்)

தொடரும்

எம் ராமதாஸ்
இறம்பொடை

தமிழன் சிறுகதை

சிவப்பு கம்பளக் கோரியல்

பசறை சீ.ரா

லயத்திலிருந்து பிரதான வீதியை வந்தடைவதற்கு அந்தத் தேயிலை மலையின் வளைத்து நெளிந்த ஒற்றையடிப் பாதையில் இறங்கி வந்து அந்த ஆமரை சந்தியை அடையவேண்டும். அல்வாறு அடைவதற்குள் பாடசாலைக்கு புத்துணர்ச்சியுடன் தயாராகி முதுகில் புத்தகப்பையை சுமந்துவரும் அவளுக்கு ஒருகணம் அவளின் தோல்கள் ஒருவிதமான இறுக்கமான வலியைத் தந்துவிடும். நேரத்திற்கு வரும் அந்த அரச பஸ்லில் ஏறுவதற்கு அந்த அதிகாலையிலேயே பெரும் போராட்டம். ஒரு பக்கமாக சாய்ந்துகொண்டு வரும் அந்த சனநெரிசல் மிக்க அரச பஸ் அவளை இன்னும் ஒரு கை பார்த்துவிடும். உயர்தர முதலாம் ஆண்டில் பயிலும் அவளுக்கு பாடசாலையில் மேலதிக வகுப்புகளின் நிமித்தம் வழமைக்கு மாறாக உரிய நேரத்திற்கு செல்ல ஆயத்தமாக வேண்டிய கட்டாயம். அவளின் பாடசாலை சீருடையின் வலது பக்க பைக்கற்றில் இருக்கும் பஸ் சீசன் அட்டையை அவள் சரிபார்க்கும்போதெல்லாம் அதிகாலையில் வீறுகொண்டு எழும் சூரியனைப்போல அவளை உற்சாகமாக தயார்படுத்துலுக்கு எத்தனிப்பதுபோல் தோன்றும்.

ஆனாலும் அந்நாளில் பல முறை அவள் அரச பஸ்லை தவறவிட்டு பாடசாலைக்கு கால்கடுக்க நடந்தே ஒன்றரை மணித்தியாலத்திற்கு பிறகு சென்ற அந்த கசப்பான அனுபவங்கள் அவளின் மனதில் ஒருவித கிலியை உண்டு பண்ணின. பல முறை அந்த ஆலமரத்து சந்தியிலிருந்து மலையுகடு பிரதேசத்தை நோக்கியவளின் விலோசன திரையில் குறுக்கிட்ட குறுக்குப்பாதை, அவளின் இறுக்கத்தை பாதி போக்கியதாகத் தோன்றியது. இருந்தும் என்ன பயன்? கேள்வி கேட்பாரற்று குண்டும்குழியுமாக இருப்பக்கமும் பரந்து விரிந்த தேயிலைக் கன்றுகளுடன் காட்சி தரும் மலையுகடு ஒருவித நிசப்தத்தில் ஆழ்ந்திருந்தது. கடந்த கால ஓட்டங்களில் அந்த மலையுகட்டின் உச்சியில் சில பொழுதுகள் கொழுந்து பறிக்கும் தொழிலாளிகளின் வெற்றிலை, பாக்கு வைத்திருக்கும் அந்த வெள்ளிநிற பைகளற்று சூரிய ஒளியினால் மின்னி மின்னி சமிக்ஞை செய்து இரகசியம் செய்வதுபோல் அவளின் கண்ணை பறிக்கும்.

அந்த மலையுகடு கல்லறையின் அடையாளமென்று தெரிந்தும்கூட அவளின் ஆழ்மனம் அந்த மலையுகட்டின் உச்சியை அடைய ஏங்கிக்கொண்டிருப்பதை அவளால் உணரமுடிந்தது. அதேபோல் பாடசாலைக்கு விரைந்து செல்லும் நோக்கில் பிரதான வீதியை குறுகிய நேரத்தில் அடைவதற்கும் அன்றைய விடியல், அவள் வாழ்வின் ஒரு புதிய அத்தியாயத்தை தொடர உத்வேகத்துடன் அடியெடுத்து வைக்கத்தொடங்கினாள் அந்த மலையுகட்டை நோக்கி. அவளின் முன்னால் பல தடங்களான பேச்சுகளெல்லாம் செல்லாக்காசாய் போயின. லயத்திலிருந்து கிழக்கு பக்கத்திலிருந்த ஒடுங்கிய குறுகலான பாதை வழியே வந்தவள் மீது குளிர்காற்று பனிச்சாரலுடன் அலைமோதி மலையின் உச்சிப்பகுதிக்கு அவளை அன்புடன் வரவேற்று போலிருந்தது. தேயிலைத் தளிர்களின் மீது படிந்திருந்த அந்தப் பனித்துளிகள் மறையும் தறுவாயிலிருந்தபோது அவளின் கால்கள் அவளை அறியாமலேயே தடுமாறி நின்றது. தேயிலை பாத்திகளுக்கு மத்தியில் பல சிதலமடைந்த கல்லறைகள் சின்னாபின்னமாகி சிதறிக் கிடந்தன. முழு அளவிலும் பகுதியளவிலும் சேதமடைந்து கல்லறைகளின் அடையாளத்திலிருந்தே தன்னை விலக்கிக்கொண்டதுபோல் தலைகுனிந்து காணப்பட்டது. வெளியே தெரியாதளவிற்கு புதை மண்ணில் மூழ்கி தேயிலை பாத்திகளுக்கிடையில் தன்னை ஒளித்துகொண்டிருந்ததுபோல.

இன்னும் சற்று நேரத்தில் மங்கிய வெளிர் சிவப்பு நிறத்திலான அந்த கல்லறை மேடையின் பக்கச்சுவர்கள் விரிசல்விட்டு வெடிப்புகளுடன் காட்சி தருவதற்கு சாட்சியாக முதிர்ந்த தேயிலைக் கன்றுகளின் அடித்தூர் கல்லறையின் அடித்தளத்தை இறுகப் பற்றிபிடித்து நிற்கின்றது. அந்த சிவப்பு கல்லறையில் பொறிக்கப்பட்ட பெயர் கூட மங்கலான சாம்பல் நிறத்தில் அழிந்தவண்ணம் உள்ளதை அப்பெயரை உச்சரிக்க முற்பட்ட அவளின் வாய்ச்சொல் தடுமாற்றத்தையே தந்தது. அந்த குறுக்குப்பாதையில் அவள் இறங்க முற்படும் வேளையில் அவளின் காலடி சத்தத்தைவிட அந்த மூதாதையர்களின் பேரவலம் வாழ்வியலின் துன்பநிலை செவிகளில் ஒலிக்கின்றது. ஜனனத்திற்கு மட்டுமல்ல, நிரந்தரமான நித்திரைக்கு கூட ஓர் இடமில்லாதகை கல்லறை சாட்சி பகர்கின்றதை அவள் மனமில்லாமல் ஒப்புக்கொண்டாள். இடைநடுவில் அவளை தாண்டிச்சென்ற அந்தத் தொழிலாளிகள் கல்லறைகளின் இடைநடுவே நின்று எழைப்பை தியாகம் செய்கிறார்கள் என்பதை நினைத்து மனம் குமுறுகின்றது. குறுக்குப் பாதையின் தொங்கலுக்கு வந்தவளுக்கு நாம் மலை உச்சியில் அல்ல அதலபாதாளத்தில் தத்தளித்து கொண்டிருக்கிறோமென்பதை பச்சை மலைகளுக்கிடையே விரிக்கப்பட்ட சிவப்பு கம்பள கோரியல் அழுத்தமாக சொல்கின்றது.

தமிழன் தொடர்கதை

அகரன்

அத்தியாயம் 2

பாலா சங்குப்பிள்ளை

"செந்தில்.. இந்தக் கேள்விக்கு நல்லா யோசிச்சி பொய் சொல்லாம உண்மையை சொல்லணும். சுமார் மூணு வருஷத்துக்கு முன்னால நீ பார்த்திபனிடமிருந்து ஒரு பார்சல் வாங்குற மாதிரி படம் ஏதும் எடுத்தியா?"

"ஆமா.. எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. என்னோட தாடியை வெட்டி மீசையைத் திருத்தி மேக்அப் போட்டு ஒரு பார்சலை கடையொன்னுல வச்சி பார்த்திபன் எனக்கு குடுக்குற மாதிரி படம் எடுத்தாங்க. நான் எதுக்குன்னு கேட்டேன். அது உனக்குத் தேவையில்லைன்னு சொல்லி 10 ஆயிரம் ரூபா தந்தாரு. பார்த்திபன் இந்த விஷயத்தை யார்கிட்டயும் சொல்லக்கூடாதுன்னு என்னை எச்சரிக்கை பண்ணினாரு. ஆனா, முனிசாமி கோயில் கட்டிக்கிட்டிருந்த சமயத்துல பார்த்திபனுக்கு என்மேல் சந்தேகம் வந்திருச்சி. என்னை விபத்து மரணம்னு ஏற்பாடு செய்யிற விஷயம் தெரிஞ்சிடுச்சி. நான் தலைமறைவானேன்."

"அதுசரி.. வங்கியில் பாதுகாப்புப் பெட்டகத்துல அந்தப் பொருள் யார் பேர்ல வைக்கப்பட்டிருந்திச்சி?"

செந்தில்நாதன் சொன்ன பெயரைக் கேட்டு மணிகண்டன் அதிர்ந்து போனான். அவன் அதை எதிர்பார்க்கவில்லை. அவனுக்கு சில விஷயங்கள் புரிய ஆரம்பித்தன. மர்ம முடிச்சுகள் ஒரளவு அவிழத் தொடங்கின. அவன் மனதுக்குள் அடுத்த திட்டத்தைப் போட்டவன் அதனை செயற்படுத்தத் தயாரானான்.

"செந்தில்.. இன்று இரவு 10 மணிக்குள் உன்னை வேறொரு இடத்தில் பாதுகாப்பாக இருக்க வைக்கணும். அதோட உன்னை பார்த்திபன் தேடி வருவதற்கு முன் நாம் அவனிடம் போகணும். நான் சொல்றது மாதிரி கேட்கணும். காரணம் தப்பினால் மரணம்தான். என்ன நீ தயாரா..?"

"தயார்தான். ஆனா, பார்த்திபன் படுமோசமானவன். அவனைத் தேடிப்போனால் என்னை உயிரோட விடமாட்டான்."

"இல்லை.. தேவையான ஏற்பாடுகளோடதான் போகப்போறோம். பயப்பட வேண்டாம். இந்தச் சிக்கல்ல இருந்து உன்னோட சேர்த்து நானும் வெளியே வரணும். அதுமட்டுமில்லை. நான் நினைச்சது மட்டும் நடந்துட்டா உனக்கு கோடிக்கணக்குல பணம் கிடைக்கும். நீ அதை வச்சிக்கிட்டு கண்காணாத இடத்துக்கு ஓடிடு. ஆமா உனக்கு அந்த வங்கிப் பெட்டக சொந்தக்காரரோட தொலைபேசி இலக்கம் தெரியும்தானே?"

"நிச்சயமா... நான் அவருக்கு சில முக்கியமான உதவிகளை செஞ்சிருக்கேன். ஆனா, அவரு இப்ப கொழும்புலதான் இருக்காரு. இங்கே வாரது ரொம்பக் குறைவு."

"அதைப்பற்றிக் கவலையில்லை. அவர் எங்கே வேண்டுமானாலும் இருக்கட்டும். நான் சொல்லுற மாதிரி சொல்லிடு. சரிதானே?"

"என்னோட உயிரைக் காப்பாத்துறதோட கை நிறைய பணத்தையும் அள்ளித்தரப் போறீங்க. இதைக்கூட செய்யமாட்டேனா?"

அத்துடன், மணிகண்டன் தொலைபேசி இணைப்பைத் துண்டித்துவிட்டு செயலில் இறங்கினான். அங்கே தோட்டத்தில் முனிசாமி கோயிலில் திருவிழா தொடங்கியிருக்கும். அவனுடைய அம்மா அந்தத் திருவிழாவுக்காகக் காத்திருந்ததாகவும் அதை மிக பிரம்மாண்டமாகவும் பிரமாதமாகவும் செய்வதற்கு பல ஏற்பாடுகளை செய்ய நினைத்திருந்ததாகவும் அஞ்சனா சொல்லியிருந்தாள். அவன் செய்த மிகப்பெரிய தவறு பணம் சம்பாதிக்கும் நோக்கில் தன்னுடைய தொலைபேசி இணைப்பை சில காலம் நிறுத்தி வைத்திருந்தது. ஏதாவது அவசரமென்றால் இடைக்கிடை பேசுவான். அவனுடைய தாயார் முனியம்மாளும் பண்பரசியும் அவனுக்கு தொந்தரவு கொடுக்க விரும்பவில்லை. எனவே, சுகம் விசாரிப்பதுடன் நின்றுவிடுவார்கள். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அவளிடம் சொல்வதில்லை. முனியம்மாள் இறந்த விஷயத்தை எப்படியாவது அவளிடம் சொல்ல பண்பரசி கடுமையான முயற்சிகளை செய்தபோதும் அவளை சிறைப்பிடித்தவர்கள் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

மணிகண்டன் நேரத்தைப் பார்த்தான். காலை 8 மணி. அங்கே திருவிழா தொடங்கி முடிய இரவு 10 மணியாகிவிடும். அவன் 10 மணிக்கு கோயிலிலிருந்து புறப்பட வேண்டும். இடையிலிருக்கும் நேரத்தில் போட்ட திட்டத்துக்கான ஆரம்ப வேலைகளை செய்யவேண்டும். அவன் பார்த்திபனுக்கு தொலைபேசி இணைப்பை ஏற்படுத்தினான்.

"ஹலோ பார்த்திபனா? நான் மணிகண்டன்தான். நான் சொல்றதை கவனமா கேளு. பொருள் இப்போ என் கையில் இருக்குது. நான் சொன்னபடி நடந்தா அது உன் கையில கிடைக்கும். இல்லாட்டி பொருளும் கிடைக்காது. நீயும் பரலோகத்துக்கு பயணப்பட்டுடுவே.

முதலாவது பண்பரசியை என்னிடம் ஒப்படைச்சா மட்டும்தான் பொருள் உனக்குக் கிடைக்கும். இரண்டாவது பகவான்னுற பேர்ல பஞ்சமா பாதகங்களை செஞ்சிக்கிட்டிருக்கிற உன்னோட முக்கியமான ஆள் பஞ்சலிங்கத்தையும் நான் சொல்லுற இடத்துக்கு அழைச்சி வரணும். அதோட உன்னுடைய தலைவனும் கட்டாயம் நான் சொல்லுற இடத்துக்கு வரணும்."

"நாங்க சொல்லுற இடத்துக்குத்தான் நீ வரணும்."

"ஓகே.. இதுக்கு நான் சம்மதிக்கிறேன். இன்றைக்கு என்னோட தோட்டத் திருவிழா. அது முடிய 10 மணியாகும். நான் 10 மணிக்குப் புறப்படுற மாதிரி ஏற்பாடு செஞ்சா போதும்."

(தொடரும்)

இலங்கை கபடி அணியின் தலைவராக நியமிக்கப்பட்ட முதல் சிறுபான்மையினத்தவரான அஸ்லம் சஜா கடந்துவந்த பாதை

இலங்கையின் தேசிய கபடி அணியின் தலைவராக வரலாற்றில் முதல் முறையாக சிறுபான்மையினத்தவர் தெரிவாகியுள்ளார். கிழக்கு மாகாணம், நிந்தவூரைச் சேர்ந்த (25 வயது) எம்.ரி.அஸ்லம் சஜா என்பவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். தேசிய கபடி அணியின் தலைவராக இதற்கு முன்னர் தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட சிறுபான்மை சமூகத்திலிருந்து எவரும் நியமிக்கப்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலைக் காலத்திலிருந்து கபடி விளையாடிவரும் இவர், 2016ஆம் ஆண்டு ஈரானில் நடைபெற்ற நான்காவது சர்வதேச ஜூனியர் கபடி சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை அணி சார்பாகக் கலந்துகொண்டதன் மூலம் - பரந்தளவிலான கவனத்தைப் பெற்றார். அந்தப் போட்டித் தொடரில் இலங்கைக்கு மூன்றாவது இடம் கிடைத்தது. கபடி விளையாட்டில் அஸ்லம் சஜா காட்டிவரும் அதீத திறமை காரணமாக சர்வதேச போட்டிகளில் விளையாடுவதற்கான பல சந்தர்ப்பங்கள் அவருக்கு தொடர்ச்சியாக கிடைத்து வருகின்றன.

2018ஆம் ஆண்டு ஈரானில் நடைபெற்ற ஆசியன் கபடி போட்டி, 2020ஆம் ஆண்டு பங்களாதேஷில் நடைபெற்ற பங்கபந்து சர்வதேச கபடி கின்னப் போட்டி ஆகியவற்றில் விளையாடியதோடு, 2021ஆம் ஆண்டு பங்களாதேஷில் இடம்பெற்ற பார்ஸ்ட் டிவிசன் கபடி லீக் போட்டித் தொடரில் பங்களாதேஷின் மெக்னா கிளப் எனும் அணிக்காகவும் அஸ்லம் சஜா விளையாடினார்.

2022ஆம் ஆண்டு பங்களாதேஷில் நடந்த பங்கபந்து தொடரிலும் இலங்கையின் தேசிய அணி சார்பாக இவர் கலந்துகொண்டார். இதன்போது தேசிய அணியின் உப தலைவராக சஜா பொறுப்பேற்றிருந்தார். இவை மட்டுமன்றி, இந்தியாவில் நடந்த ப்ரோ கபடி லீக் போட்டித் தொடரில் இந்தியாவின் பெங்கல் வாரியர்ஸ் அணிக்காகவும் இவர் விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அஸ்லம் சஜா விளையாடிய சர்வதேச கபடி போட்டிகளில் ஆட்ட நாயகன் மற்றும் போட்டித் தொடர் நாயகன் விருதுகளையும் வென்றுள்ளார். 12 பேரைக்கொண்ட தேசிய கபடி அணியில் அஸ்லம் சஜா உட்பட மூன்று முஸ்லிம் வீரர்கள் உள்ளனர். அந்த மூவருமே நிந்தவூரைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், எதிர்வரும் மார்ச் மாதம் பங்களாதேஷில் நடைபெறவுள்ள பங்கபந்து சர்வதேச கபடிப் போட்டியில் அஸ்மம் சஜா தலைமையிலான தேசிய அணி கலந்துகொள்ளவுள்ளது. இந்தத் தொடரில் பங்களாதேஷ், இங்கிலாந்து, கென்யா, நேபாளம், ஈராக் மற்றும் இந்தோனேஷியா உள்ளிட்ட 12 நாடுகள் பங்குபற்றுகின்றன.

பயிற்சியாளர் புகழாரம்

பாடசாலை காலத்தில் ஏனைய மாணவர்கள் கபடி விளையாடுவதைப் பார்ப்பதற்காக வரும் அஸ்லம் சஜா, அந்த விளையாட்டின் மீது ஏற்பட்ட ஆர்வத்தினால் தன்னையும் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுப்பெற்று அதன்போது வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தை மிகவும் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டார் என்கிறார் அவரின் தனிப்பட்ட பயிற்சியாளர் எல்.எம்.இல்மத்.

அரச பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றும் இல்மத், தேசிய மற்றும் சர்வதேச மட்ட கபடி போட்டிகளில் மத்தியஸ்தராகப் பணியாற்றி வருகின்றார். அஸ்லம் சஜா முதன்முதலாக கபடி விளையாடத் தொடங்கியதிலிருந்து அவரின் பயிற்சியாளராக இல்மத் செயற்பட்டு வருகின்றார்.

தனக்குக் கிடைத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக்கொண்டதற்கு உதாரணமாக அஸ்லம் சஜாவைக் குறிப்பிட முடியும் என்கிறார் இல்மத். 2014ஆம் ஆண்டு பாடசாலைக் காலத்தில் கபடி விளையாட்டில் தனது திறமையை வெளிக்காட்டிய அஸ்லம் சஜா, ‘ஏ’ வருடங்களின் பின்னர் தேசிய அணியின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கின்றமை பாராட்டுக்குரியது என கூறினார் இல்மத். தேசிய கபடி அணியின் தலைவர் பொறுப்பை அடைந்துகொள்வதற்காக அஸ்மம் சஜா நிறைய தியாகங்களைச் செய்துள்ளதாகவும் அவரின் பயிற்சியாளர் குறிப்பிட்டார்.

2016ஆம் ஆண்டு நிந்தவூர் அல்-மதீனா பாடசாலையிலிருந்து தேசிய ஜூனியர் சம்பியன்ஷிப் கபடி போட்டியில் அஸ்மம் சஜா கலந்துகொண்டார். அதையடுத்து அதே பாடசாலையிலிருந்து இரண்டு பேர் ஜூனியர் வேல்ட் கப் போட்டிகளில் கலந்து கொண்டார்கள் எனக் கூறிய பயிற்சியாளர் இல்மத், கபடி விளையாட்டில் அஸ்மம் சஜா அவரின் ஊரைச் சேர்ந்த இளைஞர்களுக்கு தூண்டுதலாக இருந்து வருகிறார் - என்கிறார்.

சவால்களைத் தாண்டிய பயணம்

தேசிய கபடி அணியின் தலைவராக அஸ்மம் சஜா நியமிக்கப்பட்டுள்ள போதும் இந்த இடத்தைப் பெறுவதற்காக அவர் பல்வேறு சவால்களைத் தாண்டிவந்திருப்பதாக பயிற்சியாளர் இல்மத் கூறுகின்றார்.

கபடி போட்டிகள் பிரதேச மட்டத்திலிருந்து சர்வதேச மட்டங்கள் வரை மெட் விரிக்கப்பட்ட உள்ளக அரங்குகளில்தான் நடைபெறுகின்றன. ஆனால், அஸ்மம் சஜா - மனல் வெளி யிலும் புற்தரைக ளிலும்தான் விளையாடி பயிற் சிகளைப் பெற்றுக் கொண்டார்.

அவரின் ஊரில் கபடி விளையாடுவதற்கான மெட் விரிக்கப்பட்ட உள்ளக அரங்க வசதிகள் இல்லை. தேசிய கபடி அணியில் அஸ்மம் உட்பட நிந்தவூரைச் சேர்ந்த மூன்று வீரர்கள் உள்ள போதும் சொந்த மண்ணில் கபடி பயிற்சியில் ஈடுபடு வதற்குரிய அரங்குகள் எவையுமில்லை. கபடி பயிற்சியில் ஈடுபடுவதற்கான வசதிகளை ஊரில் ஏற்படுத்தித் தருமாறு அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தோம். ஆனால், எதுவும் நடக்கவில்லை என இல்மத் கவலைப்படுகின்றார்.

புற்தரைகளில் விளையாடி பயிற்சி பெற்று - சர்வதேச போட்டிகளில் பங்குபற்றிய அனுபவங்களை அஸ்லம் சஜா பகிர்ந்து கொண்டார்.

இலங்கையின் தேசிய கபடி அணியில் 12 வீரர்கள் உள்ளனர். அவர்களில் சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி மூன்று முஸ்லிம்களும் இரண்டு தமிழர்களும் விளையாடுகின்றார்கள்.

அஸ்லம் சஜா தலைமையில் அஷான் மிஹிரங்க (உப தலைவர்), துலான் மதுவந்த, பென்சி ராசே, நிரூத பத்திரன, அகில லக்ஷான், மஹீஷிக ஜயவிக்ரம, மொஹமட் நப்ரீஸ், மொஹமட் சபிஹான், உசித ஜயசிங்க, ஏ. மோகன்ராஜ், வசந்த இந்துலில ஆகியோர் தேசிய அணிக்கு விளையாடுகின்றனர்.

(நன்றி : பிபிசி தமிழ்)

சுதந்திர தினம் மற்றும் புற்றுநோய் ஒழிப்புத் தினம் என்பவற்றை முன்னிட்டு விழிப்புணர்வு சைக்கிள் ஓட்டம்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் நாட்டின் 75ஆவது சுதந்திர தினம் மற்றும் புற்றுநோய் ஒழிப்புத் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு சைக்கிளோட்ட நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் வழிகாட்டல் மற்றும் நெறிப்படுத்தலின் கீழ் தொற்றாய் நோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஐ.எம்.எஸ்.இர்சாத்தினால் இணைப்புச் செய்யப்பட்ட இச்சைக்கிள் ஓட்ட நிகழ்வுக்கு மருதமுனை ரைடர்ஸ் ஹப் (Riders hub) சைக்கிளோட்ட கழகத்தினரின் பங்களிப்புடன்

இச்சைக்கிளோட்ட விழிப்புணர்வு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

பிரிவுத் தலைவர்கள் ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும் கலந்துகொண்டு தமது ஆதரவை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் பிரதி பணிப்பாளர் எம்.பீ.ஏ.வாஜித் மற்றும் பணிமனையின்

விலை ரூ.60 மட்டுமே

தற்போது விற்பனையில்

தரம் 3, 4 மற்றும் 5

தொடர்புகளுக்கு 0777983308

முழுமையான உடற்தகுதியை எட்டாத வீரர்கள் ஊசிமருந்துகளை எடுத்துக்கொண்டு 80 சதவீதம் உடற்தகுதியோடு கூட ஆடியிருக்கின்றனர் - பகீர் ரகசியங்களைக் கசிய விட்டாரா சேத்தன் சர்மா?

இந்திய கிரிக்கெட்டையே அதிரவைத்த தெரிவுக்குழுத் தலைவரின் கருத்து

ZEE நியூஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள ஒரு புலனாய்வுச் செய்தி (ஸ்டிங் ஒப்பரேஷன்), கிரிக்கெட் மற்றும் விளையாட்டுத் துறை வட்டாரங்களில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகிறது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் (பி.சி.சி.ஐ.) தெரிவுக்குழுத் தலைவரான சேத்தன் சர்மா குறித்த அந்தப் புலனாய்வு செய்தியில் பல பகீர் உண்மைகள் வெளியாகியிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சேத்தன் சர்மா கூறியதாக வெளியான தகவல்களில் சில இங்கே...

இந்திய அணியின் நட்சத்திர வீரர்களான ரோஹித் சர்மாவுக்கும், விராட் கோஹ்லிக்கும் இடையே உரசல் இருப்பதாக பல செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இதை உறுதிப்படுத்தும் வகையில் சேத்தன் சர்மா பேசியிருக்கிறார். கோஹ்லிக்கும் ரோஹித்துக்கும் இடையே பெரிய போரெல்லாம் ஒன்றும் இல்லை. ஆனால், இருவருக்கும் இடையே ஈகோ யுத்தம் இருந்தது உண்மைதான். அமிதாப் பச்சன் மற்றும் தர்மேந்திராபோல இருவரும் நடந்துகொண்டனர். மேலும், கங்குலி, ரோஹித்திற்கு ஆதரவாகச் செயல்பட்டார் என்றெல்லாம் சொல்ல முடியாது. ஆனால், அதேநேரத்தில் கோஹ்லியையும் கங்குலிக்குப் பெரிதாகப் பிடிக்காது.

விராட் கோஹ்லி எதிர் சவுரவ் கங்குலி பிரச்சினை குறித்து மேலும் வெளியான செய்தியில், சேத்தன் சர்மா, அணிக் கூட்டம் ஒன்றில் விராட் கோஹ்லி சொன்ன விடயத்துக்கு எதிராக கமென்ட் அடித்தார் பி.சி.சி.ஐ. தலைவர் கங்குலி. அப்போதுமுதல் இருவருக்குமே தீர்க்க முடியாத பிரச்சினை எழுந்துவிட்டது.

தன் கெட்டன் பதவி பறிபோனதற்கு கங்குலியே காரணமென்று கோஹ்லி நினைக்கிறார். கங்குலி எப்போதுமே கோஹ்லியை விரும்பியதில்லை - என்று கூறியிருக்கிறார்.

விராட் கோஹ்லி கெட்டன் பதவியை விட்டு நீக்கப்பட்ட சமயத்தில் அவருக்கும் பி.சி.சி.ஐ.க்கும் முரண்கள் இருந்தமை வெளிப்படையாகவே தெரிய வந்தது. அதுகுறித்தும் சேத்தன் சர்மா பேசியிருக்கிறார். தன்னுடைய கெட்டன் பதவி பறிக்கப்பட்டதற்கு பி.சி.சி.ஐ. தலைவராக இருந்த கங்குலிதான் காரணம் என கோஹ்லி நினைத்தார்.



வீடியோ உரையாடல் மூலம் நடந்த அந்தத் தெரிவுக்குழு சந்திப்பில் என்னோடு சேர்த்து மொத்தம் 9 பேர் பங்கேற்றிருந்தோம். அந்தச் சந்திப்பில் கோஹ்லியின் கேப்டன்சி விலகல் முடிவை மறுபரிசீலனை செய்யச் சொல்லி ஒருமுறை கங்குலி கேட்டிருக்கக்கூடும். அதை கோஹ்லி கவனிக்காமல் விட்டிருக்கலாமென நினைக்கிறேன் என்றிருக்கிறார் சேத்தன் சர்மா.

இந்த சமாச்சாரங்களுக்குப் பிறகு ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் கேப்டன்சி விலகல் முடிவை கங்குலி மறுபரிசீலனை செய்யச் சொல்லவில்லை என கோஹ்லி பேசியிருந்தார். கோஹ்லி பொய் சொல்வதாக கங்குலி கூறினார். ஆனால், கோஹ்லி ஏன் அப்படிச் சொன்னார் என்பதை இன்றுவரை புரிந்துகொள்ள முடியவில்லை - இவ்வாறும் சேத்தன் சர்மா கூறியிருக்கிறார்.

சமீபகாலமாகவே ரி20 கிரிக்கெட்டில் சீனியர்களான ரோஹித் சர்மா, விராட் கோஹ்லி உள்ளிட்டோருக்கு ஓய்வளிக்கப்பட்டு, புதிய முகங்களுக்குத் தொடர்ந்து வாய்ப்பளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், எதிர்கால இந்திய அணி யார் தலைமையில் செயல்படும், அந்த அணியில் ரோஹித் மற்றும் கோஹ்லியின் இடம் என்ன என்பது குறித்தும் சேத்தன் சர்மா பேசியிருக்கிறார்.

இந்திய ரி20 அணியில் கில்லுக்கு வாய்ப்பு கொடுப்பதற்காகவே கோஹ்லிக்கும் ரோஹித் சர்மாவுக்கும் ஓய்வு கொடுத்தோம். ரி20 அணியில் இனி ரோஹித் கொஞ்சம் கொஞ்சமாக ஒதுக்கப்படுவார். ஹார்திக் பாண்டியாவே கேப்டனாக ஆவார் என்று தெரிவித்துள்ளார். வீரர்களின் உடல்நிலை சார்ந்துமே அவ்வப்போது சர்ச்சைகள் எழுவது வழக்கம். அது குறித்தும் சேத்தன் சர்மா பேசியிருக்கிறார்.

ஜஸ்பிரித் பும்ராவால் தன் முதுகை வளைக்கக்கூட முடியவில்லை. அவரைப் போன்றே காயமடைந்த சில வீரர்கள் தனியாக சில ஊசிமருந்துகளை எடுத்துக்கொண்டு முழு உடற்தகுதியுடன் இருப்பதாகக் கூறியிருக்கின்றனர். முழுமையான உடற்தகுதியை எட்டாத வீரர்கள் இப்படியாக ஊசிமருந்துகளை எடுத்துக்கொண்டு 80 சதவீதம் உடற்தகுதியோடு கூட ஆடியிருக்கின்றனர் என்று கூறி அதிர்ச்சியைக் கிளப்பியுள்ளார்.

இந்திய அணியில் ரோஹித் சர்மாவும், ஹார்திக் பாண்டியாவும் தனக்கு மிகவும் நெருக்கமானவர்கள் என்றும், இருவரும் பல முறை தனது வீட்டிற்கு வந்து சென்றிருப்பதாகவும் சேத்தன் சர்மா தெரிவித்திருக்கிறார். இத்தகைய தகவல்கள் இந்திய கிரிக்கெட் ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளன. இது குறித்து பி.சி.சி.ஐ. தரப்பிலிருந்து அதிகாரபூர்வ விளக்கம் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7